www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

ஜன.28–பெப்.03,1996

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 138

## அரசியல் தீர்வும்



## ஆயுதக் கொள்வனவும்! இரகசிய வியூகம்

## டயரில் எரிந்த பிணங்கள்




## உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி கால அட்டவணை

## வாரம் ஒரு பட்டுச் சேலை

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## கூட்டணியின் அவசரம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

தீர்வு யோசனைகளை
சட்ட நகல் வடிவமாக
முன்வைத்துள்ளது அரசு.

பந்து-இப்போது
பாராளுமன்ற தெரிவுக்குழுவிடம்
சென்றிருக்கிறது.

வடக்கு-கிழக்கு இணைப்பு
விவாதத்திற்குரிய
பிரச்சனையாக்கப்பட்டுள்ளது.

மீண்டும்-
வேதாளம் முருக்கை மரத்தில்!

பிரேமதாசா ஆட்சியில்
வடக்கு-கிழக்கு இணைப்பு
விவகாரத்தை
பேசித் தீர்ப்பதில்தான்
தெரிவுக்குழுவுக்கு
எக்கச்சக்கமாக மூச்சிழுத்தது.
இறுதியில்
ஒரே கும்பிடு!

இப்போது-
மறுபடியும் கயிறிழுப்பு.
மூச்சு முட்டும்வரை
இழுத்துக் கொண்டிருக்கலாம்.

"கொடுத்து விட்டோம்,
அவர்கள் முடிக்கவில்லையே!"
என்று அரசாங்கம்
சொல்லிக் கொண்டிருக்கலாம்!

வடக்கு-கிழக்கு இணைப்பில்
தமது நிலை என்ன?
பொது ஜனமுன்னணி
நேரடியாகப் பதில் சொல்லாமல்
மெல்ல நழுவிவிட்டது!

ஐ.தே.கட்சி
அத்தனை சலபத்தில்
விட்டுவிடுமா என்ன?

ஆட்சியில் இருந்தபோதே
இணைப்பை
எதிர்த்த கட்சி அது!

"எல்லைகளை மீளமைத்து
வடக்கு-கிழக்கை
இணைக்கலாம்" என்று
பொது ஜன முன்னணி
பூடகமாகப் பேசுகிறது.

"அம்பாறையைக் கொடுக்கலாம்"
என்கிறது கூட்டணி.
ஆற்றில் போற தண்ணி
அண்ணை குடி, தம்பி குடி
பாணியில்
கூட்டணி பேசுகிறது.

எல்லை மீளமைப்புக்கு
தமிழ் கட்சிகள் உடன்படுமா?
என்று யாருக்காவது
சந்தேகம் வரக் கூடாது
என்று கூட்டணி
தைரியம் கொடுத்திருக்கிறது!

'இறுக்கிப் பிடித்தால்
இன்னும் விட்டுத் தருவார்கள்'
என்று இனவாதிகளுக்கு
நம்பிக்கையும் தருகின்றன,
கூட்டணியின் அவசரப் பேச்சுக்கள்!

நாற்பது வருட அனுபவம்
இப்படி ஏன்
குளிரில் நடுங்க வேண்டும்?!

ஏனைய தமிழ் கட்சிகள்
பாராட்டக் கூடிய நிலைப்பாடு
எடுத்துள்ளன. வரவேற்கலாம்.

அதே கட்சிகளை
அணைக்காவிட்டாலும்
அடித்து,
அரச தரப்புக்கு
அனுப்பும் வேலையை
புலிகள் செய்யாமலிருக்கலாம்.

தமிழ் கட்சிகள்
ஒரே குரலில் உரத்து
பேச வேண்டிய நேரம் இதுதான்!

இனவாதிகள்-
வரிந்து கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.
கூட்டணி குனிந்து கொடுக்கும்;
ஏனைய தமிழ் கட்சிகளாவது
எழுந்து நிற்க வேண்டாமா?
அவற்றின் மீது
புலிகள் அம்பு தொடுக்கும்
நேரமா இது?

நிதானமும், விவேகமும்
மிகத் தேவையான நேரம்
இதுதான். இதுவே தான்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை,
என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## எதிரிகளையும் நேசிப்போம்

"மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (லூக்கா:6:31)

உலகில் நடைபெறுகின்ற, ஏன் நம்முடைய நாட்டில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை நோக்கினால் மேற்கூறிய இந்த வசனம் மிகவும் அர்த்தமுள்ளதென்று எண்ணுகிறோம். ஆம். நமக்கு நாம் நல்லவைகளை, நன்மை தரக்கூடியவைகளை மட்டுமே செய்துகொள்வோம். அதுபோலவே, மற்றவர்களும் நமக்கு நல்லவைகளையே செய்ய வேண்டும் என்றுதான் என்றும் எண்ணுவோம். இல்லையா? அப்படியானால் நாம் மற்றவர்களுக்கு என்ன செய்யவேண்டும். நன்மையே செய்யவேண்டும். இல்லையா? இவ்வாறு எல்லாரும் எண்ணினால்- கொஞ்சம் கற்பனைபண்ணி பார்ப்போம். நம் நாடு ஆன்மீக வாதிகள் நிறைந்த ஆனந்தம் சூழ்ந்த சொர்க்க பூமியாகத் திகழாதா?

"உங்கள் சத்துருக்களை சினேகியுங்கள், நன்மை செய்யுங்கள். கைமாறு கருதாமல் கடன் கொடுங்கள். அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்."

ஆம். நாம் நன்மை செய்யும் பொழுது யாருக்குச் செய்ய வேண்டும் என்பதை இது நமக்கு நன்கு எடுத்து விளக்குகின்றது. எதிரிகளுக்கு நாம் நன்மை செய்வதாயிருந்தால் நிச்சயம் எல்லாருக்கும் செய்வோம்.

எனவே நாடு நலம் பெற, உலகம் வளம் பெற, நம் உள்ளம் எல்லா நன்மைகளையும் பெற எல்லாருக்கும் நல்லவைகளையே செய்வோம். நம் எதிரிகளையும் உள்ளடக்கி ஆன்ம சுத்தத்தோடு இந்நிலையடைய முயற்சிப்போமாக.

ஏ.பி.வி.கோமஸ்

## ஆன்மீகம்



## ரமழானும் நபிகள் போதனையும்

நபி (ஸல்) அவர்கள் அறிவித்ததாக ஸல்மான் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: மனிதர்களே! உங்களுக்கு ஓர் மகத்தான ரமழான் மாதம் வந்திருக்கிறது அது பரக்கத் செய்யப்பட்ட மாதமாகும். அதில் ஒவ்வொரு வயது வந்தவர்களும் நோன்பு நோற்பது கடமையாகும்.

ரமழான் பொறுமையின் மாதமாகும், பொறுமையின் பிரதி பலன் சொர்க்கமாகும். இம்மாதத்தில் ஒரு முஃமினுடைய ரிஸ்க் (உணவு) அல்லாஹ்வால் அதிகரிக்கப்படுகிறது.

ஒரு நோன்பாளிக்கு நோன்பு திறப்பதற்கு ஒருவர் உணவளிப்பாரானால் அது அவருடைய பாவங்களை அல்லாஹ் மன்னிப்பதற்கும், நரக நெருப்பில் இருந்து விடுதலை பெறுவதற்கும் வழி வகுக்கும். நோன்பு நோற்றவரைப் போல் இவருக்கும் நன்மை கிடைக்கும்.

இம் மாதத்தின் முதற் பகுதி அல்லாஹ்வுடைய ரஹ்மத்தாகவும், நடுப்பகுதி பாவமன்னிப்புக்காகவும், இறுதிப் பகுதி நரக நெருப்பை விட்டும் விடுதலை பெறுவதற்காகவும் உள்ளது.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப்போட்டி இல-135

### பரிசுக்குரிய கவிதை

### வாழ்வின் முடிவு?

தொட்டு வந்த உறவுகளை
பறிகொடுத்த பரிதவிப்பு!
தொடருகின்ற யுத்தமதால்
பாதையோரம் உயிரிழப்பு!
செங்குருதி மண்ணிலின்று
தினந்தோறும் அணிவகுப்பு!

தெ.றஞ்ஜனா, இறம்பைக்குளம், வவுனியா.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### ஊமைகள்

தலைவிதியை நொந்து இங்கே
சுமைகளுடன் புறப்பட்டால்,
வழியெங்கும் சடலங்கள்
யாரிடத்தில் முறையிடுவோம்?
வாயிருந்தும் வார்த்தையின்றி
ஊமைகள்போல் வாயடைத்து
வந்த வழி போகின்றோம்...

எஸ்.எம். மாலா, தீவில்ல,மக்குலுஸ்ஸ.

### குடிமக்கள் வனவாசம்.

கெடுவார் கேடினைப்பார்- எம்மைக்
கேவலமாய்ச் சீரழிப்பார்
சுடுவார், சுடவைப்பார்
சுடலைக்குச் 'சவம்' வைப்பார்
அதிகார வெறிப் 'போர்' முன்னே
அகப்பட்ட குடிமக்கள் நாங்கள்
வாய் கட்டி மௌனிகளாய்
வனவாசம் போகின்றோம்...!

பாண்டியூர் பொன். நவநீதன்.

### விடிவு

புத்தாண்டுகள்
பிறக்கலாம்;
புதுவருசம் வரலாம்;
தலைப்பாரம் தீருமா?
மனப்பாரம் குறையுமா?

சுபாவரன், கண்டி.

### துரத்தல்

வெஞ்சமரின் வேதனையால்
விரக்தியுற்றோம்;
சொந்த மண்ணில் அகதிகளாய்
துரத்தப் பட்டோம்.

எஸ்.கே.ராஜரட்னம், ஹாலி- எல.



### எங்கே பயணம்?

போர்க் களத்தின் கொடுமைகளை
பார்த்திருந்தும் சொல்வதற்கு (ப்)
பயங்கொண்டு வாய் பொத்தி
பயணத்தைத் தொடர்வதெங்கே?

ச.மகாலிங்கம், வெலிமடை குருப்,
வெலிமடை.

### பிணவாடை

ஊரெல்லாம் பிணவாடை,
ஊர்வலமாய் அகதி இங்கு,
போவதுதான் எங்கேயோ?
பொல்லாத இவ்வுலகில்....!

அ.முஹம்மது-முஸ்அப்ரஸீன்,
நிந்தவூர்-03.

### ஏன் இல்லை?

போருக்குத்தான்
இதயம் இல்லை!
மானிடமே...
உனக்குமா?

எம். ஸானாஸ்,
கிண்ணியா-06

### எது?

ஊர் விட்டு
ஊர் செல்லும்
காட்சி இது!-
போர் விட்டு
சீர் செய்யும்
ஆட்சி எது?-

ஸ்ரீபதி ரவீந்திரநாத்,
அக்கரைப்பற்று-08.

## கவிதைப் போட்டி இல-138



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 03.02.1996.

—முகவரி—

கவிதைப் போட்டி இல: 138. தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

### விரைவினில் ஓடுவதெங்கே?

உறவினில் பாதிப் பங்கு
உயிரிழந்திட்ட வேளை!
சிறப்புகள் யாவும் குன்றி,
சீரழிவுற்ற காலம்!
மறைவினில் தப்பி யோடி
மனிதர்கள் ஒதுங்கும் நேரம்!
குறையினைச் சுமந்து? இவர்கள்
விரைவினில் ஓடுவதெங்கே?

ஆர்.ரவித்தா, பல்மருத்துவ பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

### காலத்தின் கோலம்

தலைச்சுமையை மீறி மனச்சுமை கனத்ததோ?
தங்கிய இடம் விட்டு வேறிடம் செல்லும்
நிலையொன்று வந்து நிம்மதி குலைத்ததோ?
நீண்டிடும் போரினால் நாடோடியாகி
முதியோர் இளையோர் வேற்றுமையின்றி
முந்தியலைந்திடும் நிலையிங்கு வந்ததோ?
விதியின் கொடுமை வீதியில் பிணங்கள்
வீசிக் கிடப்பதால் மனமும் நொந்ததோ?

பசறையூர் மல்லிகா பத்மநாதன்,
பசறை.

## வாசக(ர்) சாலை

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்கள் சொன்ன செய்திகள் யாவும் எமக்கு முரசு மூலம் முந்தியே கிடைத்துவிட்டன. சில செய்திகள், அப்படியும் நடந்திருக்குமா என்று நினைக்க வைத்தன. உறவினர்கள் வந்து ஊர்புதினங்களை சொன்னபின்னர்தான் முரசின் செய்திகளின் நம்பகம் விளங்கியது.

திருமதி. தேவி பசுபதி, கொழும்பு-6

எக்ஸ்ரே ரிப்போர்ட், அரசியல் அலசல் இரண்டும் முரசின் இரு கண்கள். பக்கம் சாராமைக்கு பாராட்டுக்கள்.

க. தேவேந்திரன், குருநாகல்.

கார்லோஸின் புகைப்படத்தை வெயிட்டதற்கு நன்றி. பால்மணம் மாறாத முகம், அகத்தின் அழகு முகத்தில் தெரியாதோ?

எஸ். குமுதினி, திருமலை.

'தாய்' ஒவ்வொரு அத்தியாயமும் உயிரோட்டமாய் தொடர்கிறது. துள்ளு தமிழ் மொழி பெயர்ப்பு பிரமாதம்.

என். ஜமால்டீன், கல்முனை.

இராமாயணம் வாரம் தோறும் இராஜகுமாரனின் நடையில் நயம் தருகிறது. எங்கள் வீட்டில் முரசு கிடைத்ததும் முதலில் தேடுவது இராமாயணத்தை.

எஸ். ஸ்டெல்லா, பம்பலப்பிட்டி, கொழும்பு.

கார்லோஸின் படத்தை தந்து, எப்படியிருப்பாரோ கார்லோஸ் என்று ஏங்கிய எங்கள் இதயத்தில் இன்பத்தோடு, ஆச்சரியத்தையும் தந்து விட்டாய் முரசே உனக்கும் ரசிகனுக்கும் நன்றி.

ஜீ. நந்தகுமார், பெல்மதுளை

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

* சீ. திருக்குமார், காரைதீவு-07
* ஏ.எச். யாசிர், இறக்குவானை.
* எஸ். ஜெமீலா, நுகல.
* மரீனா நியாஸ், கண்டி.
* ஜன்ஸி கபூர், அநுராதபுரம்.
* எம். பௌஸி, காவத்தை.
* கே. வின்சன்ட், மட்/சத்துருக்கொண்டான்.
* என். சுதர்சன், அக்கரைப்பற்று-7.
* ஆர். சிவராஜ், ரங்கல.
* ஏ.ஆர். பாகிமாபானு, சிறாஜ்நகர்.
* பஸ்லா பாய்ஸீன், துல்ஹிரிய.
* எம்.ரி. செல்வி, கொழும்பு-8.
* ஜே.எம்.கியாஸ், கிண்ணியா-04.
* ஆ. ஜெகதீஸ்வரன், புசல்லாவ.
* கரீமா சஹ்ரான், புத்தளம்.
* வீ. ராஜேந்திரன், புண்டுலோயா.
* ஏ. சிக்கந்தர், கண்டக்குடா, புத்தளம்.
* எஸ். சந்தனம், குருநாகல்.
* ஹுஸைன், நியாஸா, ஹொரவ்பொதானை
* சக்திவேல் சந்திரமோகன், லுணுகல.
* ப.ஜெ. பிரகாஷ், பசறை.
* ஜெ.எம். முபாரக், கிருலப்பனை.
* ப. சுபத்திரா, பசறை.
* வாஹிட் ஏ.குத்தூஸ், பதுளை.
* வி.எம். ரைஷ்தீன், கிண்ணியா-06.
* நவரெட்ணம் கண்ணன், மட்டக்களப்பு.
* எஸ்.ஜெ. சுகந்தி, திருக்கோணமலை.
* சு. செல்வரத்தினம், டிக்கோயா.
* பர்ஹானா புஆத், கல்முனை-03.
* நவந்தராஜா, இறக்குவானை.
* ஏ. ஹமீத், மீராவோடை.

கவிதை போட்டிக்கு பிரசுரிக்கப்படும் படங்கள் அனைத்தும் சூப்பர். தினமுரசின் வளர்ச்சிக்கு என் வாழ்த்துக்கள்.

எஸ்.செல்வகுமாரி, தம்பலகல.

கவிதைப் போட்டிக்காக முரசில் வெளியாகும் படங்கள் அபாரம். எங்கிருந்து பெறுகிறீர்கள்?

தலைவர் தொண்டா பற்றிய அலசல் யதார்த்தமாயிருந்தது. எப்படி துல்லியமாக கணித்திருக்கிறார் மனிதர்-பாராட்டுக்கள்.

முன்பக்க அட்டைப்படங்கள் எப்போதுமே ஒரு தனியழகுதான்.

இரா. சிவசாமி, பண்டாரவளை.

முரசே உன்னில் வாரந்தோறும் மலரும் அத்தனை அம்சங்களும் சூப்பர். குறிப்பாக லேடிஸ் ஸ்பெசல், தாய் தொடர்கதை வாரந்தோறும் மெருகேறுகிறது. உனக்கு எந்தன் வந்தனம் கோடி உரித்தாகட்டும்.

கந்தசாமி ஹரிகரராஜ், ஆரையம்பதி-01.

அன்பின் முரசே!

கார்லோஸ் தொடரில் ரசிகனின் கற்பனையும் புகுந்து விளையாடுகிறது. ஆமாம். அந்த ரசிகன் யார், அவரை அறிமுகப் படுத்தமாட்டீர்களா?

சாய்ந்தமருது பைறோஸ், சாய்ந்தமருது-11

கார்லோஸின் துணிச்சல் ஆச்சரியப்பட வைக்கிறது. 'விலை உயர்ந்த குற்றம்' சூப்பர். தேன் கிண்ணம் இதயத்தை தொட்டுச் செல்கிறது. முரசே! இன்றும் என்றும் நீ எமக்கு வேண்டும்.

செல்வி, ரனீஸா யாசீன், நிரெல்லை, அக்குறணை-07.

### எங்கள் விதி!...

எங்கு செல்வது;
எப்படி செ(ா)ல்வது?...
என்ன வாழ்விது;
எங்கள் விதியிது!...

கோட்டைமுனை ஷாமிலா யூசுப்
மட்டுநகர்.




எமது இனிய அன்பு முரசே!

வாரந்தோறும் மலரும் மல்லிகையே, உன்னை ஒரு வாரம் காணாவிடின் தவித்து விடும் இனிய நெஞ்சங்கள் நாம். நீ தரும் கவிதை, கதைகள் யாவும் சூப்பர். உனது பணி தொடர வாழ்த்தும் நெஞ்சங்கள்.

ஜெனிபர், சித்ரா, சரோ,
மட்டக்களப்பு.



படிப்பகம்

www.padippakam.com

# "கொழும்பில் தாக்குவோம்!" கரிகாலன் எச்சரிக்கை!

## யாழ்ப்பாணத்தில் தொடர் தாக்குதல் நடத்த திட்டம்

வெற்றிலைக்கேணியில் விமானப்படை ஹெலிக்கொப்டரை சுட்டுவீழ்த்திய பின்னர், புலிகளது கவனம் கடற்படைக் கப்பல்கள் மீது திரும்பலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை யாழ்ப்பாணத்தில் படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளுக்குள் கெரில்லாத் தாக்குதல்களை புலிகள் தீவிரமாக்கலாம் என்று தெரியவந்துள்ளது. யாழ்ப்பாணத்திற்குள் தொடர் தாக்குதல்களை நடத்துவதற்காக புலிகளது அணியொன்று வன்னியில் இருந்து கடல் மார்க்கமாக யாழ்ப்பாணத்திற்குச் சென்றுள்ளது.

### ஆயுத கொள்வனவு

கடந்தவாரம் புலிகளது சர்வதேச செயலகம் விடுத்துள்ள செய்திக்குறிப் பொன்றில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது:

"சந்திரிக்கா அரசாங்கம் யுத்த விமானங் களையும், டாங்கிகளையும், நவீன ஹெலிக் கொப்டர்களையும், யுத்தக் கப்பல்களையும் பல நாடுகளில் இருந்து கொள்வனவு செய்துள்ளது. கடந்தவாரம் இஸ்ரேலில் இருந்து மூன்று யுத்த விமானங்கள் கொழும்பை வந்தடைந்துள்ளன. மேலும் மூன்று விமானங்கள் கொழும்பை வந்தடைய வுள்ளன. சீனாவில் இருந்து வாங்கப்பட்ட கப்பல்கள் ஏற்கெனவே வந்து சேர்ந்துள்ளன.

பல பீரங்கிப்படகுகளுக்கான பேரங்கள் நடந்து முடித்துள்ளன.

சீனா, ரஷ்யா, இஸ்ரேல் நாடுகளிட மிருந்து எதிர்பார்க்கப்படும் ஆயுத தள பாடங்கள் வந்து சேர்ந்ததும் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகும்," என்று புலிகளது சர்வதேச செயலக செய்திக்குறிப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளையில் மட்டக்களப்பில் பாடசாலையொன்றில் வைத்து ராய்டர் செய்தி நிறுவனத்திற்கு புலிகளது அரசியல் பிரிவு துணைப் பொறுப்பாளர் கரிகாலன் பேட்டியளித்தார்.

அவர் தனது பேட்டியில் பின்வருமாறு கூறினார்: "உறுப்பினர்களைத் திரட்டுவது எமக்கொரு பிரச்சனையல்ல. யுத்தம் தொடர்ந்து நடைபெறும். கொழும்பிலும் உரிய நேரங்களில் தாக்குதல் நடைபெறும்.

யாழ்ப்பாண இராணுவ நடவடிக்கை யால் நாம் எதனையும் இழந்துவிடவில்லை. யாழ்ப்பாணத்தில் நாம் சிவில் நிர்வாகத்தை நடத்தினோம். அதனை இப்போது கிளிநொச் சிக்கு இடம் மாற்றியுள்ளோம். ஆக, இது ஒரு இடமாற்றம் மட்டுமே," என்று தெரிவித்தார் கரிகாலன். அவர் தனது பேட்டியில் மேலும் கூறிய கருத்துக்கள் ஏற்கெனவே வேறு பத்திரிகைகளில் வெளி வந்துவிட்டதால் இங்கு இடம்பெறவில்லை.

### முரண்பாடு

அரசாங்கம் நேரடியாக அழைத்தால் பேசத் தயார் என்று கரிகாலன் கூறியுள்ளார். புலிகளது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சமீபத்தில் கருத்துத் தெரிவிக்கும் போது, சர்வதேச மத்தியஸ்தத்தோடு மட்டுமே இனிப் பேச்சுவார்த்தை. அதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து படையினர் வெளியேற வேண்டும் என்று கோருவோம்" என்று கூறியிருந்தார்.

படைகள் நிலைகொண்டுள்ளவரை பேச்சுக் கதவுகளும் மூடப்பட்டிருக்கும் என்று புலிகளது தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தினச் செய்தியில் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

### தொடர் தாக்குதல்

கிழக்கில் படையினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளையடுத்து யாழ்ப்பாணத்தில் படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் தொடர் தாக்குதல்களை நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

கிழக்கில் படையினர் குவிக்கப்படுவதைத் தடுக்கவும், வடக்கில் பாரிய படை நடவடிக் கையைத் தடுக்கவுமே யாழ்ப்பாணத்தில் தொடர் தாக்குதல்களை நடத்த திட்டமிடப்பட் டுள்ளது.

கிழக்கில் படையினர் முன்னேறும்போது பின்வாங்கிவிட்டு, பின்னர் பாதுகாப்புப் படையினரின் நிலைகள்மீதும், ரோந்து செல்லும் படையினர்மீதும் தாக்குதல்களை தொடர புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

# தீர்வு யோசனை? தமிழ் கட்சிகள் அதிருப்தி!

## 13 வது திருத்த சட்டத்தைவிட குறைவான அதிகாரங்கள்

அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வு சட்ட யாப்பில் தமிழ் கட்சி களின் சிபாரிசுகள் எதுவும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் கொண்டுவரப்பட்ட 13வது திருத்தச் சட்டத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் கூட, புதிய தீர்வு யோசனை யாப்பில் குறைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக நிதியை மாகாணசபை பயன்படுத்தும் விடயத்தில் 13வது திருத்தச் சட்டம் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்கள் தற்போதைய யாப்பில் குறைவாகவே வழங்கப்பட்டுள்ளன.

காணி, மீன் பிடி விடயங்களில் பிராந்திய சபைகள் நினைத்தாலும் கூட குடியேற்றங் கள், அத்துமீறி மீன்பிடித்தல் என்பவற்றை தடுக்க முடியாது.

மத்திய அரசு கேட்குமானால் பிராந்திய சபை காணி வழங்கியாக வேண்டும். அவ்வாறு பெறும் காணிகளை எப்படிப் பயன்படுத்துவது என்பது மத்திய அரசைப் பொறுத்த விடயம்.

மீன்பிடி விடயத்தில் வெளிப் பிராந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்தாலும் பிராந்திய சபையின் பொலிசார் தலையிட்டு தடுக்க முடியாது. மத்திய பொலிசாருக்குத் தான் அறிவிக்க வேண்டும்.

படைத் தரப்பினர் தவறுதலாக நடந் தாலும் பிராந்திய பொலிசார் விசாரிக்க முடியாது. மத்திய பொலிசார்தான் விசாரணை நடத்தலாம்.

இவ்வாறு பல அதிகாரமற்ற பகிர்வுகள் காணப்படுகின்றன.

அது தவிர கடந்த ஆகஸ்ட் மாதம் அரசு முன்வைத்துள்ள தீர்வு யோசனையில் இலங்கை பிராந்தியங்களின் ஒன்றியம் என்று பெயர் மாற்றப்பட்டிருந்தது. தற்போது அந்த பெயர் மாற்ற விடயம் நீக்கப் பட்டுவிட்டது.

இலங்கையில் உள்ள பிரதேசங்களின் பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்படும்.

தமிழ் அரசியல் கட்சிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர ஏனைய கட்சிகள் தமது அதிருப்தியை வெளிப்படையாகவே தெரிவித்துள்ளன.

அவசரகால சட்ட வாக்கெடுப்பில் கூட்டணி எதிர்த்து வாக்களிக்கிறது. அதே சமயம் தமிழ் பேசும் மக்களின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் அரசியல் தீர்வுவிடயத்தில் கருத்துச் சொல்ல கூட்டணி பின்னடிக்கிறது. அரசியல் தீர்வு யோசனை தயாரிப்பில் கூட்டணியின் முக்கிய பிரமுகர் ஒருவரது சம்பந்தம் இருப்பதே அதற்கு காரணம் என்று தமிழ் கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன.

# நகரசபையில் சலசலப்பு

## சபைத் தலைவரின் காசோலை மோசடி

(சஞ்சீவன்)

திருக்கோணமலை நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி ரெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர். அவருக்கும் திருமலை ரெலோ இயக்கப் பொறுப்பாளரும், நகரசபை உறுப் பினருமான சிங்கராசா என்பவருக்கும் இடையில் கடும் பிரச்சனை ஏற்பட்டுள்ளது.

23.01.96 அன்று நகரசபைக் கூட்டம் கூடியபோது உப தலைவர் தெரிவில் பிரச்சனை ஏற்பட்டது. சிங்கராசா உட்பட பல உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்து விட்டதால் சபை ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கிடையே திருமலை நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி தனது சொந்தப் பாவனைக்கான மின்சாரக் கட்டணத்துக்கான 12 ஆயிரத்தி 620 ரூபாய்க்கான பணத்தை சபையின் பணத்திலிருந்து எடுத்து செலுத்தி யுள்ளார்.

27.12.95 அன்று நகரசபைக்குரிய காசோலையை தனது மின்சாரக் கட்டணத்துக் காக செலுத்தியுள்ளார். அவ்வாறு செலுத்தப் பட்ட காசோலையின் இலக்கம் 559886.

இதனையடுத்து நகரசபை உறுப்பினர் மாயன் நாதன் என்பவர் சபையில் கேள்வி எழுப்ப பிரேரணை ஒன்றை சமர்ப்பித்துள் ளார்.

"ஊருக்கெல்லாம் வெளிச்சம்போட கொடுத்த பணத்திலே, தாங்கள் வெளிச்சம் போட்டு வாழ்கின்றார் நகரசபையிலே" என்ற பாடல் வரிகளும் அந்தப் பிரேரணையில் இடம்பெற்றுள்ளது.

### அரச அதிபர் வேண்டுகோள்

"யாழ் மாவட்டத்திலுள்ள தனியார் மருந்து விற்பனை நிலையங்கள், வடபகுதிக்கு தேவையான மருந்து வகைகளை எடுத்துச் செல்ல அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்." இவ்வாறு யாழ் அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ் மாவட்டத்திற்கு தேவையான மருந்து வகைகளில் பெரும்பாலானவை தனியார் மருந்து விற்பனையாளர்கள் மூலமே எடுத்துச் செல்லப்படுவது குறிப்பிடத்தக்கது.

தற்போது அனுமதி மறுக்கப்பட்டு வருவதால் அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# வடமராட்சியில் கிட்டுவின் நினைவுதினம்

## இந்திய எதிர்ப்பு நிலைப்பாடு தளர்வு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தின் முன்னாள் யாழ் மாவட்டத் தளபதியும் சர்வதேசப் பிரதிநிதியுமான கிட்டுவின் நினைவுதினக் கூட்டம் 16.01.96 அன்று யாழ்ப்பாணம் வடமராட்சியில் உள்ள தீருவில் திடலில் நடைபெற்றது.

கடந்த வருடங்கள்போல இம்முறை இந்திய அரசுக்கு எதிரான கருத்துக்கள் தீவிரமாக இருக்கவில்லை.

1993ம் ஆண்டு ஜனவரி 16ம் திகதி கிட்டுவும், ஒன்பது பேரும் பயணம் செய்த 'டொங்நோவா' என்னும் கப்பல் இந்திய கடற்படையால் வழிமறிக்கப்பட்டது. அதனை யடுத்து கிட்டுவும், ஒன்பது புலிகள் இயக்க உறுப்பினர்களும் தம்மைத் தாமே மாய்த்துக் கொண்டனர்.

கடந்த இரண்டு வருடங்களாக நடை பெற்ற கிட்டு நினைவுதினக் கூட்டங்களில் இந்தியாமீது காரசாரமான கண்டனங்கள் தொடுக்கப்பட்டன.

புலிகளின் பிரசார சாதனங்களிலும் எதிர்ப்பு பிரசாரங்கள் செய்யப்படுவதுண்டு. இம்முறை அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.

புலிகளது சர்வதேச செயலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பிலும், "வங்கக் கடலில் வீரகாவியமாகிவிட்ட மூத்த தளபதி கிட்டுவின் நினைவு தினம்" என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

புலிகளது இந்திய எதிர்ப்பு நிலைப் பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதையே இது காட்டுகிறது.

# "அதிபர்கள், ஆசிரியர்கள் தாடிவளர்க்கக்கூடாது"

## கிழக்கில் புலிகள் கண்டிப்பான உத்தரவு

கிழக்கில் நகரங்களுக்கு வெளியே வசிக் கும் அதிகாரிகளும்,வசதி படைத்தவர்களும் பாவித்து வந்த வாகனங்களை பாதுகாப்புடன் கூடிய பகுதிகளுக்கு எடுத்துச் சென்று கராஜ்களில் இறுகப் பூட்டி வைத்துள்ளனர். தற்போது தமது பாவனைக்காக சைக்கிள் களையும் ஆகக் குறைந்த விலையிலுள்ள மோட்டார் சைக்கிள்களையுமே பயன் படுத்தி வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. புலிகளின் வாகனப் பறிப்பும் வரிவிதிப்புமே இதற்குக் காரணம் என்று தெரியவருகிறது. அரச உத்தியோகம் பார்க்கும் அதிகாரிகளில் பெரும்பான்மையானோர் பாதுகாப்புடன் கூடிய நகரப் புறங்களுக்குக் குடிபெயர்ந்து விட்டனர். இதனால் மட்டக்களப்பிலும் இது போன்ற இடங்களிலும் வாடகை வீடுகளுக்கு நல்ல மவுசு இருந்து வருவதோடு வாடகை வீடுகளைப் பெறமுடியாமலுமுள்ளது.

இதனிடையே புலிகள் அரச அதிகாரி களை அடிக்கடி (குறிப்பாக கிராம சேவகர் களை) அழைக்கின்றனர். இதனால் அரச அதிகாரிகளுக்கு இரு தலைக்கொள்ளி எறும்பு நிலை தோன்றியுள்ளது.

தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் அதிபர்- ஆசிரியர்களை அழைத்தும் புலிகள் பல கண்டிப்பான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளனர். அதில் ஒன்று அதிபரோ, ஆசிரியரோ தாடி வளர்க் கக் கூடாதென்பதாகும்.

# போக்குவரத்து சீர்கேட்டால் பயணிகள் முடக்கம்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்து இன்னமும் ஒரு சீரான நிலைக்கு வரவில்லை. பயணிகளின் போக்குவரத்து பஸ்களை படையினர் அடிக் கடி எடுத்துச் செல்வதாலும் புலிகளும் பஸ் பற்றரிகளையும், பஸ்களையும் எடுத்துச் செல்வதாலும் பயணிகள் போக்குவரத்தில் அதிக சிரமப்பட வேண்டியுள்ளது. ஒரு ஒழுங்கான போக்குவரத்து முறைமை இன்ன மும் மட்டு- இ.போ.ச. வினரால் கொண்டு வரப்படவில்லையென்பது பெருங்குறையாக வுள்ளது. இவ்வேளையில் தனியார் பஸ் சேவைகளை மக்கள் பெரிதும் நம்பியிருக் கிறார்கள்.

சென்றவாரம் படையினர் மட்டக்களப்பு டிப்போ பஸ்களை தமது தேவைக்கு எடுத்துக் கொண்டதால் பெரும் போக்கு வரத்துச் சீர்கேடு ஏற்பட்டது. மக்கள் பஸ் நிலையங்களில் தவித்துப் போய் நின்றார்கள. பலர் தாம் தொடர்ந்த பயணத்தை முடிக்க இயலாது இடைநடுவில் தவித்துப் போய் அலைக்கழிந்தார்கள்.

வெளியிடங்களிலிருந்து மட்டு நகருக்குச் செல்லும் அலுவலர்களும், ஆசிரியர்களும் மாணவர்களும் மற்றும் அலுவல்களுக்குச் செல்லும் பொதுமக்கள், வியாபாரிகள் என் போர் நகருக்கும் நகருக்கு வெளியேயும் செல்ல முடியாத போக்குவரத்து நெருக்கடி இங்கு அடிக்கடி ஏற்படுகிறது. இதனால் பல நிருவாக அலுவல்கள் முடங்கி விடுகின்றன.

# மீனவரை விடுவிக்க நான்கு இலட்சம்!

(வாழைச்சேனை நிருபர்)

ஓட்டமாவடியில் இருந்து மட்டக்களப் புக்குச் சென்று கொண்டிருந்த ஓட்டமாவடி வாசிக்குச் சொந்தமான ஓட்டோ ஒன்று கடந்த 18.1.96 இல் கடத்திச் செல்லப்பட்டது. சித்தாண்டிக்கும் வந்தாறுமூலைக்கும் இடைப் பட்ட மாவடிவேம்பு என்னுமிடத் தில்வைத்து ஆயுதம் தாங்கிய நால்வரால் கடத்திச் செல்லப் பட்டது. ஓட்டோச் சாரதியை இறக்கிவிட்டுத் தான் ஓட்டோவை எடுத்துச் சென்றுள்ளார்கள்.

வாழைச்சேனையைச் சேர்ந்த ஆறு மீனவர்களும், இரண்டு இயந்திரப் படகுகளும் 13.1.96 இல் புலிகள் இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டது. நான்கு இலட்சம் ரூபாய் தரப்பட்டால் தம்வசமுள்ள ஆறு மீனவர்களையும் விடுவிப்பதாக புலிகள் இயக்கத்தினர் முதலில் கூறியிருந்தனர். தற்போது ஆறு மீனவர்களும் புலிகளால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்ட முஸ்லிம் மீனவர்களை விடுவிக்கக் கோரி 21.1.96 அன்று வாழைச் சேனை பிரதேச மீனவர்கள் ஊர்வலம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

"முஸ்லிம்களை பலிக்கடாவாக்காதீர்" என்ற பதாகையும் ஊர்வலத்தில் கொண்டு செல்லப்பட்டது.

மட்டக்களப்பு ஆஞ்சநேய நிறுவனத்திற்கு சொந்தமான சீமெந்து லொறியொன்றும் மாவடிவேம்பு பகுதியில் வைத்து புலிகள் இயக்கத்தினரால் எடுத்துச் செல்லப் பட்டுள்ளது.

# ஏபிரகாம் உயிரோடு இருக்கிறார்

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த டாக்டர் ஏபிரகாம் புலிகள் இயக்கத்தினரால் கொல்லப்பட்டதாக சில தகவல்கள் வெளியாகியிருந்தன. அவர் உயிரோடு இருப்பதாக முரசுக்கு தகவல் கிடைத்துள்ளது. குருநகரைவிட்டு அவரை வெளியேறுமாறு புலிகள் கூறியபோதும் அவர் மறுத்துவிட்டார். அவரை மிரட்ட வானை நோக்கி சுட்டுவிட்டு புலிகள் அமைப்பினர் சென்றுவிட்டனர். அதன் பின்னர் யாழ்ப்பாணம் கன்னியர்மடம் பாடசாலையில் சென்று தங்கிவிட்டார் ஏபிரகாம். திருக்குடும்பக்கன்னியர் மடம் பாடசாலையில் 500 பேர் வரை தங்கியுள்ளனர்.

# புலிகளை உளவு பார்க்க கனடா ஆர்வம்!

## உளவு சொன்னவர் புலிகளின் மூத்த உறுப்பினர்!

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆரம்ப கால உறுப்பினரான சிவகுமார் என்பவர் கனடாவில் இருந்து நாடுகடத்தப்படவுள்ளார்.

சிவகுமார் 1978 இல் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டவர். யாழ் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றவர். மறுமலர்ச்சிக் கழகம் என்ற பெயரில் பல்கலைக் கழகத்தில் புலிகள் இயக்கத்திற்கு சார்பான அமைப்பொன்றை உருவாக்கியவர்களில் சிவகுமாரும் ஒருவர்.

1981 இல் புலிகள் இயக்கத்திற்குள் பிரச்சனை ஏற்பட்டது. 81 இல் நடைபெற்ற குரும்பசிட்டி- வன்னியசிங்கம் நகை அடவுக் கடை கொள்ளையினால் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து ராகவன் தலைமையில் புலிகள் இயக்கம் இயங்கியது. பிரபாகரன், குட்டிமணி குழுவினரோடு இணைந்து செயற்பட்டார்.

ராகவன் தலைமையில் இயங்கிய புலிகள் இயக்கத்தில் சிவகுமாரும் ஒருவர். 'உணர்வு' என்னும் பத்திரிகை ஆரம்பித்து அதன் ஆசிரியராகவும் சிவகுமார் இருந்தார்.

### திம்புவில்

பின்னர் மீண்டும் புலிகள் இயக்கம் ஒன்றாகியது. 1984 இல் திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் புலிகளின் சார்பாக லோறன்ஸ் திலகரும், சிவகுமாரும் கலந்து கொண்டனர்.

1988 இல் சிவகுமார் புலிகள் இயக்கத் திலிருந்து விலகினார். மலேசிய கடவுச் சீட்டொன்றின் மூலமாக கனடா சென்றார்.

கனடாவில் பிரஜா உரிமை பெறுவதற் காக கனடா உளவுத்துறை அதிகாரிகளது உதவியை நாடினார்.

புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் உள்தகவல்களை தந்து உதவினால் பிரஜா உரிமை பெற்றுத்தருவதாக கனடா உளவுப் பிரிவினர் வாக்குறுதி அளித்தனர். சிவகுமாரும் கடந்த பல ஆண்டுகளாக தகவல்களை வழங்கிவந்தார்.

கனடாவில் உள்ள உணவு விடுதிகள், நட்சத்திர ஹோட்டல்களில் வைத்து சிவகுமார் தகவல்களை கொடுத்துக் கொண்டிருந்தார்.

எனினும் அகதி அந்தஸ்தோ, பிரஜா உரிமையோ சிவகுமாருக்கு கிடைக்கவில்லை. ஆனால் வருடம் ஒன்றுக்கு 3 ஆயிரம் டொலர் கள் சன்மானமாக வழங்கப்பட்டு வந்தது.

### மறுப்பு

அகதி அந்தஸ்த்துக்கூட கிடைக்காத நிலையில் நாடு கடத்தலுக்கு உள்ளாக்கப்பட இருந்தார் சிவகுமார். புலிகளோடு தொடர்பு இருப்பதாகக் கூறி அகதி அந்தஸ்த்து வழங்க கனடா குடியகல்வு குடிவரவு திணைக்களம் மறுத்துவிட்டது.

வேறு வழியின்றி குடியகல்வு திணக்களத் துக்கு உண்மையைச் சொன்னார் சிவகுமார். "கனடா உளவு-நிறுவனத்திற்கு தகவல் கொடுத்து வருகிறேன். உதவுவதாகக் கூறி ஏமாற்றி விட்டார்கள்" என்று முறைப் பாடு செய்தார்.

சிவகுமாரின் குற்றச்சாட்டு தொடர்பாக கனடா உளவுத்துறை அதிகாரி ஜோன் பாற்றிக் என்பவர் சமர்ப்பித்துள்ள அறிக்கை யில், "1989 செப்ரம்பர் 13 முதல் 1994 நவம்பர் 28 வரை தளையசிங்கம் சிவகுமார் என்பவர் கனடா உளவுப் பிரிவுக்கு பல தகவல்களை தருபவராக இருந்துள்ளார்" என்று தெரிவித்துள்ளார்.

விசாரணைகள் தொடர்கின்றன. சிவகுமார் நாடு கடத்தப்படுவாரா என்பது விரைவில் தெரியவரும்.

புலிகளது பிரதித்தலைவர் மாத்தையா மீதும் உளவுச்சதி குற்றம் புலிகளால் சுமத்தப்பட்டமை தெரிந்ததே.

# பொன்னாலையில் தாக்குதல்

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணம் பொன்னாலைப் பகுதியில் புலிகளின் கெரில்லாக்கள் தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள். காவலரண்களைப் பலப் படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத் தினர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலில் இராணுவத்தினரின் புல்டோசர் வாகனம் ஒன்று முற்றாகச் சேதமடைந் ததாகவும், ஒருவர் கொல்லப்பட்டதாகவும் புலிகளின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



படிப்பகம்



# என்னுடைய கனவை முடமாக்கியது யாரம்மா?

யுத்தத்தினால் நாட்டுக்கு ஏற்படும் இழப்பை விரல்விட்டு எண்ண முடியாது. இந்த இழப்பினால் தாக்கப்படுவது அப்பாவிச் சனங்களே. யுத்தத்தினால் விலைவாசி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகின்றது. பிள்ளைகளின் கல்வித் தராதரமும் அதே வேகத்தில் குறைந்து கொண்டு போகின்றது. சுகாதார சேவைகளை முற்றாக வழங்க முடியாத நிலை ஏற்படுகின்றது. இவ்வளவையும் நாம் அர்ப்பணித்து கண்டது என்ன? மக்களுக்கிடையே புரிந்துணர்வு இருக்க வேண்டும். பரஸ்பர மரியாதையும் அன்பும் ஒவ்வோருவருடைய மனதிலிருந்து வெளிவர வேண்டும். அப்பொழுதுதான் எல்லோருக்கும் வெற்றி கிடைக்கும்.

**பகிர்ந்து வாழ்வதா இல்லை மோதி அழிவதா?**
**சற்று நிதானத்துடன் சிந்தித்துப் பாருங்கள்.**

## யுத்தம் மூலம் சமாதானம்? ஒருபோதும் கிடையாது!

தேசிய சமாதானப் பேரவை
291/50, ஹெவ்லொக் காடின்ஸ், கொழும்பு – 6.
தொலைபேசி/பெக்ஸ் : 594378



www.padippakam.com

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கத்தியை வீசப் புத்தியைத் தீட்டும் அரசு

# அரசியல் தீர்வும், ஆறாத போரும்

மாகாண சபைகளை கலைத்து விட்டு தேர்தல் நடத்தி மக்களின் நாடித் துடிப்பறிய நினைத்தார் ஜனாதிபதி.

அரச தரப்பில் கூட சில முக்கிய புள்ளிகளுக்கு மாகாணசபைகள் இரண்டை திடீரென்று கலைத்துப் போட்டதில் உடன்பாடில்லை.

எனினும், ஜனாதிபதிக்கு சில நிர்ப்பந்தங்கள் இருக்கவே செய்கின்றன.

பாராளுமன்றத்தில் தனியான பெரும்பான்மை இல்லாத நிலையில் சிறுபான்மை இன கட்சிகளது துணையோடுதான் சமாளித்துக் கொண்டிருக்கிறது பொது ஜன முன்னணி.

பொது ஜன முன்னணிக்குள்ளும் பனிப்போர் நிலவுகிறது.

லலித் அதுலத்முதலி அணியினர் திருப்தியாக இல்லை. ஸ்ரீமணி அத்துலத்முதலி உள்ளே புகைந்துகொண்டு, அரச விழாக்களில் ஒப்புக்காக மட்டும் தலை காட்டி புன்னகைக்கிறார்.

பஸ் கட்டணத்தை உயர்த்துமாறு அவர் சிபாரிசு செய்ததாகவும், அமைச்சரவை அதனை மறுத்துவிட்டதாகவும் பத்திரிகையாளர் மாநாட்டில் ஆளும்தரப்பு அமைச்சர்களே சொல்லிவிட்டார்கள்.

ஆடிப்போய்விட்டார் ஸ்ரீமணி. தம்மீது அதிருப்தி ஏற்படுத்த தனது சிபாரிசை பகிரங்கப்படுத்திவிட்டார்கள். பொது ஜன முன்னணியை விட்டு வெளியேறினாலும் தம்மீது தாக்குதல் தொடுக்க ஒரு காரணத்தை வைத்திருக்க முன் ஏற்பாடு விட்டார்கள் என்றே நினைக்கிறார்.

பொது ஜன முன்னணிக்குள் உள்ள இடதுசாரிகள்மீதும் ஜனாதிபதிக்கு நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை.

அதைவிட முக்கியம், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பொது ஜன முன்னணிக்குள் உள்ள சிவப்புச் சட்டைக் காரர்களை நினைத்தாலே அலர்ஜியாகத்தான் இருக்கிறது.

யுத்தம் முடிவின்றித் தொடரும் நிலையில் வெளிநாட்டு உதவியும், வெளிநாட்டு முதலீடுகளும்தான் அரசாங்கத்தின் நிதி வருவாய்க்கு உள்ள ஒரே நம்பிக்கை.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஆரோக்கியமான, அதிவேக குதிரைமீது தான் பணம்போட விரும்புவார்கள்.

குதிரையிலே சவாரிசெய்பவர்கள் தங்களுக்குள் பிணக்குப்பட்டுக் கொண்டிருந்தால் பணம் போடத் தயங்குவார்கள்.

ஒரே ஒரு புத்திசாலியான ஓட்டியின் கையில் கடிவாளம் இருந்தால் அவர்களுக்கு நம்பிக்கை கூடுதலாக இருக்கும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும், பிரேமதாசாவும் ஜனாதிபதிப் பதவிகளில் இருந்தபோது கடிவாளம் முழுவதும் அவர்கள் கையில்தான் இருந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் கணிசமான வாக்குகளைக் கவர்ந்தது மூலம் ஜனாதிபதி சந்திரிக்காவும் மக்கள் செல்வாக்குள்ள தலைவர்தான் என்று நிரூபிக்க முடிந்தது.

ஆனாலும், பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை இல்லாமல் இருப்பதால் ஜனாதிபதி சந்திரிக்காவின் செல்வாக்கை பூரணப்படுத்தி காட்ட முடியாதிருக்கிறது.

அதனால்தான் மினித் தேர்தல்கள் மூலம் தமது அரசியல் செல்வாக்கின் புஜபலத்தைக் காட்ட நினைத்தார் ஜனாதிபதி.

உடனடியாக பாராளுமன்ற தேர்தல் நடத்தக்கூடிய சூழல் இல்லை.

கடந்த தேர்தலில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் பல நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. யாழ்ப்பாண இராணுவ நடவடிக்கை வெற்றியை மட்டுமே வைத்து பொதுத் தேர்தல் ஒன்றை உடனடியாகச் சந்திக்கும் தைரியம் அரச தரப்பில் காணப்படவில்லை.

தலைநகரில் புலிகளின் நடமாட்டமும் தேர்தல் பிரசாரங்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது.

பொதுத்தேர்தலை சந்திக்க தற்போது அரசிடம் சொல்லிக் கொள்ளக்கூடிய சாதனை சூரியக்கதிர்மட்டும்தான்.

பொதுத்தேர்தல் நெருங்கும் சமயத்தின் புலிகள் எங்காவது ஒரு பலத்த தாக்குதலை மேற்கொண்டால் அரசதரப்பின் பிரச்சாரமும், நம்பிக்கையும் காற்றுப் போன டயர் மாதிரியாகிவிடும்.

அனைத்தையும் கணக்குப் போட்டுப் பார்த்துத்தான் மினித் தேர்தல்களுக்கு புள்ளிவைத்தார் ஜனாதிபதி.

மினித் தேர்தல்களில் வெற்றிக்கொடி பறந்தால் அரசுக்கும், ஜனாதிபதிக்கும் பல வகையில் லாபங்கள் காத்திருக்கின்றன.

மக்கள் தம்மோடுதான் இருக்கிறார்கள் தான் சம்பிரதாயபூர்வமாக கூடுகிறது.

அதுவரை பாராளுமன்ற தெரிவுக்குழு கூட முடியாது.'

ஒன்றில், பாராளுமன்ற கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் சட்ட யாப்பு முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

அல்லது, பாராளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முன்வைக்கப் பட்டிருக்க வேண்டும்.

தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பரிசு போல அறிவிப்பது என்றால் தைப்பொங்கல் தினத்தன்று முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

மூன்றும் இல்லாத வேளையில் முன் வைக்கப்பட்டதானது, நிர்ப்பந்தம் காரணமான அவசரமோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

தவிர, ஜனவபடி 16ம் திகதி நண்பகல் 12.45 வானொலிச் செய்தியில் சட்டயாப்பு முன்வைக்கப்படப் போகிறது என்று சொல்லப்பட்டது. அதேநாள் 1 மணிக்கு ஒளிபரப்பான ரூபவாகினிச் செய்தியில் அது குறித்து ஒரு வரிகூட சொல்லப்படவில்லை.

முன்கூட்டியே திட்டமிடப்பட வில்லையோ என்ற சந்தேகத்திற்கு அதுவும் ஒரு காரணம்.

எப்படியோ மாகாணசபைகள் கலைக்கப்பட்டதை எதிர்த்து தனது அரசியல் எதிரிகள் நீதிமன்றம் மூலமாக பெற்ற தற்காலிக வெற்றியை அமுக்க, அரசியல் தீர்வு சட்ட யாப்பு வெளியீடு ஜனாதிபதிக்கு உதவியிருக்கிறது.

அடுத்து அரசியல் தீர்வு சட்ட யாப்பை வெளியிட்டதை வைத்துக்கொண்டு, ஜனாதிபதி சந்திக்கப்போவது புலிகளை.



வடக்கு-கிழக்கு பிராந்தியத்திற்கு தனித்துவமான பிரச்சனைகள் உள்ளன என்பதை பகிர்வு விடயத்தில் மட்டும் கவனிக்காமல் விட்டிருக்கிறார்கள்.

கொடுப்பதை திருப்பி எடுக்கும் விடயத்தில் வடக்கு-கிழக்கின் தனித்துவத்தை மறக்காமல் இருப்பவர்களுக்கு, பகிர்ந்து கொடுப்பதில் மட்டும் தனித்துவம் மறந்து போய்விட்டது.

ஆக, எப்படிப்பார்த்தாலும் இனப்பிரச்சனை தீர்வு என்பது, சிங்கள மக்களிடம் இருந்து குறிப்பாக இனவாதிகளிடமிருந்து பிரச்சனை ஏற்படாமல் இருக்கக்கூடிய தீர்வைத் தேடுவதில் வந்து நிற்கிறது.

மறுபுறம், தமிழ் பேசும் மக்களது அடிப்படையான அரசியல் கோரிக்கைகளை ஓரளவாவது திருப்திப்படுத்தும் அம்சங்கள் பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை.

வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது 'எல்லைகள் மீளமைப்பு' என்ற பதத்தின் மூலம் சந்தேகத்திற்கு இலக்காகியிருக்கிறது.

தீர்வு யோசனைகளின் நிலை இவ்வாறான கட்டத்தில் இருக்கும்போது, அரசாங்கம் தனது அடுத்த காயை நகர்த்தப் போகிறது.

தற்போதைய தீர்வு யோசனையை தமிழ் கட்சிகள் ஏற்றுக்கொண்டால், அரசுக்கு பெரிய சாதகமாக இருக்கும்.

தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய தீர்வை முன் வைத்தாயிற்று. புலிகள் மட்டுமே எதிர்க்கிறார்கள். அதனால் அவர்களை அப்புறப்படுத்திவிட்டு தீர்வை நடைமுறைப்படுத்த போர் தவிர்க்க முடியாதது என்று அரசு வெளியுலகுக்கு சொல்ல முடியும்.

புலிகளோடு யுத்தம் தவிர்க்க முடியாதது என்ற தீர்க்கமான முடிவில் இருக்கிறது அரசாங்கம்.

தற்போது யுத்தத்தை நிறுத்தினால் அரசுக்குத்தான் பலத்த நஷ்டம் ஏற்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து படையினர் வெளியேறாதவரை பேச்சுக்கே இடமில்லை என்கிறார்கள் புலிகள்.

புலிகளோடு தற்போது பேசுவதற்கு சென்றால், யாழ்ப்பாணத்திற்குத் திரும்பும் மக்களோடு புலிகளும் திரும்ப அனுமதித்தாக வேண்டும்.

புலிகளோடுதான் மக்கள் திரும்ப வந்திருக்கிறார்கள் என்றாகிவிட்டால், யாழ்ப்பாணத்தை வெற்றிகொண்டது சாதனை என்ற பிரசாரம் கேலிக்குள்ளாகிவிடும்.

கடந்த தேர்தலில் சமாதானத்தை கொண்டுவரும் முழக்கம் பொதுஜன முன்னணிக்கு முதுகெலும்பாக இருந்தது.

இப்போது 'புலிகளை வெற்றி கொள்ள முடியும்' என்ற பிரச்சாரம்தான் அரசிற்கு கவர்ச்சிகரமான, வியப்பான தோற்றம் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

பாண்விலை, மாவிலை மீண்டும் பழைய நிலைக்கு உயர்ந்துவிட்டது. அடிப்படைத் தேவைகளை மக்களுக்கு கிடைக்கச் செய்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்நிலையில் யுத்தமுனை வெற்றிச் செய்திகளையே அரசாங்கம் நம்பியிருக்க வேண்டி இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் சூரியக்கதிரின் பின்னர் இராணுவ நடவடிக்கைகள் உடனே முன்னெடுக்கப்படாமைக்கும் காரணங்கள் இல்லாமலில்லை.

மினித் தேர்தல்களுக்கான பிரசாரம் சூடுபிடிக்கத் தொடங்கும் போது வடக்கில் அடுத்த கட்ட நடவடிக்கையை ஆரம்பிக்கலாம் என்று நினைத்திருக்கலாம்.

அவ்வாறான நடவடிக்கைக்கு வெளியுலக கண்டனம் எழாமல் தடுக்க அரசியல் தீர்வு யோசனையின் சட்ட யாப்பை முன் வைப்பது உதவும் என்று கணக்குப் போட்டிருக்கலாம்.

வாக்குறுதிகள் யாவும் கடந்த தேர்தலில் வழங்கப்பட்டுவிட்டதால், இனி வரும் தேர்தல்களில் பொது ஜன முன்னணி நம்பியிருப்பது இரண்டு அம்சங்களை. இரண்டும் முக்கியமானவை.

ஒன்று; ஜனாதிபதி சந்திரிக்காவின் வசீகரம். இரண்டு; வடக்கு-கிழக்கு போர் முனை வெற்றிச் செய்திகள்.

அதற்கேற்பவே அரசின் வியூகம் வகுக்கப்படும்.

அரசியல் தீர்வு சட்ட யாப்பு பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்குச் செல்வதற்கு முன்னரே, கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் படைத்தரப்பிடம் வந்து சேர்ந்துவிட்டன. சேரவும் உள்ளன.

புதிய தொழில் நுட்ப ஆயுதங்களும் இறக்குமதியாகியுள்ளன.

விமான ஓட்டுநர்கள் வடக்கு வான்பரப்பில் பறக்க பின்னடிக்கிறார்கள். அதனால் இஸ்ரேலிடம் இருந்து வாங்கியுள்ள புதிய விமானம், ஓட்டுநர் இல்லாமலேயே பறக்கப்போகிறது. பறந்து தரையில் உள்ள நடமாட்டங்கள், நிலைகள் என்பவற்றை படம்பிடித்துக் கொண்டு வரப் போகிறது. எங்காவது ஒரு கட்டுப்பாட்டு அறையில் இருந்து கம்பியூட்டர் முறையில் அது இயக்கப்படும்.

அநுராதபுரத்தில் வைத்து அதனை பரிசீலித்தும் பார்த்துள்ளார்கள். 'சிங்கக் குட்டி' என்று பெயரும் வைக்கப்பட்டு விட்டது.

அடர்ந்த காட்டுப்பகுதிகளுக்குள் விமானத்தின் பார்வையும், படப்பிடிப்பும் பெரிதாக உதவாது என்பதும் கவனிக்கத் தக்கது.

எப்படியோ, அரசு போர்முனையில் கத்தியை வீச புத்தியைத் தீட்டுகிறது.

போர்முனை எப்போதும் சூடாகவே இருக்கக் கூடியதாக, தெற்கில் வாக்கு வங்கிகளை குளிரூட்டுவதுதான் உடனடி நோக்கம்.

என்று வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உத்தரவாதம் கொடுக்க முடியும்.

தனது அணிக்குள் உள்ள அதிருப்தியாளர்களை அடக்கிவைக்கமுடியும்.

மினித்தேர்தல்களில் பாதுகாப்பு நிலவரத்தை ஒத்திகைபார்த்து, பொதுத் தேர்தல் ஒன்றுக்கான சாத்தியத்தை கணிப்பிட இயலும்.

இதற்கிடையே கலைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களுக்கான இடைக்காலத்தடை மினித் தேர்தல்களுக்கான சுறு சுறுப்பை சற்றுச் சுருக்கியிருக்கிறது.

இடைக்காலத்தடை விதிக்கப்பட்டது தனக்கு ஒரு வெற்றியென்று ஐக்கிய தேசியக் கட்சி பூரித்துப் போனது.

அந்தப் பூரிப்பு நீடிக்கவில்லை. அவசர அவசரமாக தனது வெகுஜன தொடர்பு சாதனங்கள் மூலமாக அரசு ஒரு அறிவிப்பை வெளியிட்டது. அரசியல் தீர்வு யோசனையின் சட்ட நகல் யாப்பு வெளியிடப்படும் என்பது தான் அந்த அறிவிப்பு.

சட்டநகலில் என்ன இருக்கிறது என்று பத்திரிகைகள் தமது கவனத்தை திருப்பிய தாலும், பரபரப்பாக நோக்கப்பட்டதாலும் இடைக்காலத்தடை பற்றிய செய்தி முக்கியத்துவம் இழந்திருந்தது.

உண்மையில் அரசாங்கம் நினைத்திருந்தால் சட்ட நகலை தைப்பொங்கல் தினத்தன்றே முன்வைத்திருக்கலாம். சற்றுத் தள்ளிப் போடவே நினைத்திருந்த நேரத்தில் தான் இடைக்கால தடை உத்தரவு வந்து, அரசியல் தீர்வு யோசனை சட்ட நகலை விரைவாக முன்வைக்க தூண்டியதோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முன் வைக்கப்படுவதுதான் சட்ட நகலின் பயன்பாடு. ஆனால், பாராளுமன்றம் பெப்ரவரிமாதம்

இலங்கை ஒரு பௌத்தநாடு என்ற அடையாளப்படுத்தல் மூலமாக, சிங்கள இனவாதிகள் தரப்பில் இருந்து வரும் தாக்குதல்களிலிருந்து தப்பிக்கொள்ள அரசு கவசம் அணிந்து கொண்டுவிட்டது.

பிராந்திய சபைகளை ஜனாதிபதி நினைத்தால் கலைக்க முடியும் என்ற விதியின் மூலமாக, 'அஞ்சற்க, பெரும்பான்மை இனத்தை பிரதிநித்துவப்படுத்தும் மத்திய ஆட்சித் தலைவரிடம்தான் கடிவாளம் இருக்கிறது' என்ற நம்பிக்கையும் கொடுக்கப் பட்டுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால், தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரத்தை பகிர்ந்து கொடுக்கவில்லை. பாவனைக்காக கொடுக்கிறோம். தேவைப்பட்டால் எப்போதும் திருப்பி எடுத்துக் கொள்ளலாம் என்பது போலவே தீர்வு யோசனைகளின் உள்ளடக்கம் இருக்கிறது.

பிரிவினையைத் தடுக்கத்தான் பிராந்திய சபையை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

அப்படிப்பார்த்தால் வடக்கு-கிழக்கு பிராந்தியத்தை மனதில் வைத்துக் கொண்டு தான் அந்த நியாயம் சொல்லப்படுகிறது.

அதாவது, வடக்கு-கிழக்கு நாட்டின் ஏனைய பிராந்தியங்களில் இருந்து வேறுபடுத்திப் பாக்கப்படுகிறது. ஏனைய பிராந்தியங்கள் சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்டவை. எனவே, அங்கு இன, மொழி ரீதியான பிரிவினை ஏற்பட வழியில்லை.

ஆனால், வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட பிராந்தியம். எப்போது வேண்டுமானாலும் பிரிந்து போகலாம். அதனால் வடக்கு-கிழக்கை மனதில் கொண்டு பிரிவினையை தடுக்கும் வழிமுறை பற்றி ஆராயப்பட்டிருக்கிறது. விதியும் போடப்பட்டுள்ளது.

அதே சமயம், அதிகாரப் பகிர்வில் மட்டும் வடக்கு-கிழக்கு பிராந்தியத்தோடு, ஏனைய பிராந்தியங்கள் சம நிலையில் வைத்து நோக்கப்பட்டுள்ளன.

**நாரதர்**

## அதிரடி அய்யாத்துரை



முரசுப் பாணியிலையே ஒரு 'கத்தரிகை' விட்டுப்பார்த்தினம். 'உரிமைக் குரல்' எண்டும் போட்டுப் பார்த்தினம். சரிப்படேல்லை. கடைசியாக முரசோடை வவுனியாவிலை உரசப்பார்த்தினமாம். யார் எண்டோ கேக்கிறியள்? டெல்லோ என்றொரு இயக்கம் இருக்கல்லோ? அதுதான். கடைசியாக வசமாக மாட்டிக்கொண்டினம். ரெண்டு எழுத்தாரில் பழிவிழும் எண்ட நம்பிக்கையில்தான் 'முரசு'டன் உரசினவையாம். சரிவரேல்லை. பொல்லைத் தந்து வாங்கும் பழக்கம் போகாதோ?

வசந்தமான பிரமுகருக்கு இந்தியாவும் விசா கொடுக்கேல்லை. கனடாவும் கதவைத் திறக்கேல்லை. நம்நாட்டு அரச வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் சந்தோசமாக அந்தச் செய்தியை அறிவிச்சிருக்கினம். இதே சாதனங்கள்தான் முன்பு அவரை பத்திரிகை சுதந்திரத்தின் நம்பிக்கை நட்சத்திரம், தொலைக்காட்சி சேவையை உயர்த்தவந்த வித்தகர் என்றெல்லாம் புகழ்ந்தன என்பதை மறக்க முடியவில்லை. அவர் ரெண்டு எழுத்தாரின் பிரபல பிரசாரகர் எண்டு கூறப்படுவது உண்மையானால், அவர் ஒரு கில்லாடிதான். அரச தொலைக்காட்சியிலை தலைவராக இருந்து காட்டிப் போட்டாரல்லோ! யாருக்கு வெட்கம்? விஷயம் தெரியாமல் பிரசாரம் செய்கினம்.

மலைப்பகுதி தனித்துவ தலைவரும், முன்னணியின் சந்திரரும் ஒரே மேடைகளில் தோன்றி வருவது அறிந்ததே. அதன்மூலம் குருவுக்குப் பின்னர் தனது கொடியை பறக்கவிடலாம் எண்டு சந்திரர் நினைக்கிறமாதிரித் தெரியுது. நான் உங்கள் தோழன் எண்டு தனித்துவ கட்சியினருக்கும் நிருபிக்கத்தான் தலைவரோடு சேர்ந்து காட்சி கொடுக்கிறாராம் எண்டு தனித்துவ கட்சிக்குள் பேரன் அணி முணு முணுக்குதாம். அரசியல்வாதிகள் அணைத்துக் கொண்டாலும் அதற்குள் ஒரு விஷயம் இல்லாமல் போகாது. சோழியன் குடுமிகள் சும்மா ஆடுமோ?

யாழில் முகாமில் இருக்கும் அகதிகளைப் பார்வையிட அமைச்சர் ஒருவர் விஜயம் செய்தவராம். ஓடோடி வந்த சிலர் முறைப்பாடு செய்தவையாம். என்ன முறைப்பாடு தெரியுமோ? "நாங்கள் உயர்ந்த சாதி, எங்களை தனியாக ஒரு முகாமில் தங்க வைக்கவேண்டும்" எண்டு விண்ணபித்தவையாம். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் எண்டது மெத்தச் சரி.

நெடுந்தீவில் ரெண்டு எழுத்தாரும், ஜனநாயகக் கட்சிக்காரரும் மோதியதில் இரு தரப்பிலுமே பலியானவர்களின் மொத்தத்தொகையே ஐந்துக்குள்தான். இலண்டன் பி.பி.சி டசின் டசினா உயிரிழப்பு எண்டு கணக்குச் சொன்னது எப்படி எண்டுதான் தெரியேல்லை. உப்பிடித்தான் யாழ்ப்பாணத்திலை இருந்து சனத்தை வெளியேறுமாறு ரெண்டு எழுத்தார் சொல்லவேயில்லை எண்டு பி.பி.சி சொல்லி மூக்குடைபட்டது. ரெண்டு எழுத்தாரை ஆதரிக்கிறது பிழையில்லை. அது அவரவர் உரிமை. ஆனால் செய்திகளில் நம்பகத்தன்மை வேணுமல்லோ? கொள்கை வேறு, உள்ளதை உள்ளபடி சொல்லும் செய்தி, விமர்சன கண்ணோட்டம் வேறு. பி.பி.சி வானொலி இரண்டையும் போட்டுக் குழப்புது பாருங்கோ.

தீர்வு யோசனை விடயத்திலை கிழக்கின் சிங்கத்தாருக்கும், கொழும்பில் உள்ள கூட்டான கட்சி தலைவர்களுக்கும் இடையிலை பிடுங்குப்பாடாம். ஆதரிப்போம் என்கிறார் தலைவர். நீலமானவரும் அதையே சொன்னாராம். ஆதரிச்சுப்போட்டு கிழக்குப் பக்கம் போய் நிம்மதியாக நடமாட முடியாது. காலனும் கிழக்கில் நிற்கிறார். நீலமானவருக்கு பிரச்சனையில்லை. கொழும்பிலை இருக்கலாம். எங்கள் பாடெல்லோ பிரச்சனையெண்டு சொல்லுகினமாம் கிழக்கின் வெகுஜன பிரதிநிதிகள். "காலன் வந்தல்லோ, கூட்டிப் போயல்லோ," எண்டு புலம்பாத குறைதான் பாக்கி.

மிக ஆச்சரியமான விஷயம் பாருங்கோ. ஆங்கில, சிங்கள பத்திரிகைகளும் ஒரு தமிழருக்காக வரிந்துகட்டிக்கொண்டு வாதாடியிருக்கின்றன. அந்தத் தமிழர் வேறு யாருமில்லை. முத்தையா முரளீதரன். சகல விடயங்களிலும் இது தொடர்ந்தால் எவ்வளவு நல்லாயிருக்கும்?! (பெருமூச்சு)

ஒரு ஹைக்கூ கவிதை திருத்தப்படும் முறையை பாருங்கள்.

"வாழ்க்கை இதுதான்!
செத்துக்கொண்டிருக்கும் தாயருகில்
சிரித்துக்கொண்டிருக்கும் குழந்தை."

அறிவுமதி எழுதிய இக்கவிதையை நல்ல ஹைக்கூவாக திருத்தியிருக்கிறார் அப்துல் ரகுமான்.

"சாகும் தாய்
அருகில்
சிரிக்கும் குழந்தை!"



படிப்பகம்

www.padippakam.com

# மருத்துவ மனையில் மனித வேட்டை

63

### பாலம் தகர்ப்பு

1986 இன் ஆரம்பத்தில் கிழக்கில் மட்டக்களப்பு வாகரை, படுவான்கரைப் பகுதிகளில் புலிகளது கண்ணிவெடித் தாக்குதல்கள் இடம்பெற்றன.

2.4.86 அன்று கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்தையாவின் வழிநடத்தலின் கீழ் தாக்குதல் ஒன்று நடத்தப் பட்டது.

கொக்காவிலுக்கும் மாங்குளத்திற்கும் இடையில் உள்ள காட்டுப்பகுதியில் வாகனத் தொடரில் வந்த இராணுவத்தினர் மீதுதான் தாக்குதல் நடத்தப்பட்டது.

10ற்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியானார்கள். இராணுவ வாகனம் ஒன்று கண்ணிவெடியில் சிக்கி சேதமடைந்தது. புலிகள் தரப்பில் இழப்பில்லை.

ஏ.கே. 47 துப்பாக்கிகள் சிலவற்றை இராணுவத்தினர் கைவிட்டுச் சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் வடமராட்சியில் பருத்தித்துறை, தொண்டமனாறு, வல்வெட்டித்துறை ஆகிய மூன்று இடங்களிலும் இராணுவ முகாம்கள் ஒரு வலைப்பின்னல் போல அமைக்கப் பட்டிருந்தன.

இந்த மூன்று இராணுவ முகாம்களையும் தொண்டமனாறு பாலம்தான் இணைத்துவைத்திருந்தது.

தொண்டமனாறு இராணுவமுகாமிலிருந்து 300 யார் தூரத்தில் 100 யார் நீள விஸ்தீரணம் கொண்டது அந்தப் பாலம்.

24 மணிநேரமும் பாலத்தைப் பாதுகாக்கும் இராணுவக் காவல் போடப் பட்டிருந்தது.

பாலத்தின் மீதும், பாலத்தின் இரு புறமும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அந்தப் பாலத்தை எப்படியாவது உடைக்க வேண்டும் என்று திட்டமிட்டார் கிட்டு.

இரவோடு இரவாக ஒன்பது பேர் கொண்ட புலிகளது அணி வெடிமருந்துகளோடு சென்றது.

காவல் பணியில் இருந்த இராணுவத்தினரின் கண்களில் படாமல் பாலத்தின் அடியில் வெடிமருந்துகள் வைக்கப் பட்டன.

பாலம் பெரும் சத்தத்தோடு வெடித்துச் சிதறியது. எனினும் பாலத்தின் கால்வாசிப்பகுதிதான் முற்றாகத் தகர்க்கப் பட்டது.

அதன் மூலம் மூன்று இராணுவ முகாம்களுக்கும் இடையிலான போக்குவரத்து தடைப்பட்டது.

### கரடியனாற்றில்

5.4.86 அன்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கரடியனாறு என்னுமிடத்தில் எட்டு வாகனங்களில் இராணுவத்தினர் ரோந்து சென்றனர்.

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

ஆர்.பி.ஜி ரக ரொக்கட் லோஞ்சர்களால் புலிகளின் கெரில்லா அணியினர் தாக்குதல் நடத்தினார்கள். இராணுவ கவச வாகனம் ஒன்று ரொக்கட் லோஞ்சரால் சேதமடைந்தது.

கிட்டத்தட்ட மூன்று மணிநேரம் மோதல் நடைபெற்றது. ஒன்பது இராணுவத்தினர் பலியானார்கள். புலிகளின் தரப்பில் இழப்பில்லை.

1985 கடைசியில் ரெலோ இயக்கத் தலைவர் சிறீசபாரத்தினம் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார்.

தமிழ் நாட்டில் இருந்து தனக்கு நம்பகமான குழுவுடன், பெருந்தொகையான ஆயுதங்கள் சகிதம் சிறிசபாரத்தினம் யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்தார்.

ரெலோ இயக்கத்திற்குள் பிரச்சனை இருந்தமையால் இந்திய அரசு கொடுத்த ஆயுதங்களில் பெரும்பகுதியை சிறீசபாரத்தினம் தமிழ்நாட்டிலேயே வைத்திருந்தார்.

ரெலோ இயக்கத்தின் இராணுவப் பொறுப்பாளராக இருந்தவர் தாஸ். சிறீசபாரத்தினத்தின் விசுவாசியாக இருந்த 'பொபி' இராணுவப் பொறுப்பை எடுக்க விரும்பினார்.

பொபிக்கும் தாசுக்கும் ஒத்துவரவில்லை. தாஸ் செல்வாக்குப் பெறுவதையும், தன்னையாரும் கட்டுப்படுத்த முடியாது என்ற நிலையில் வளர்ந்து வருவதையும் சிறியும் விரும்பவில்லை.

தாஸ் வடமராட்சியைச் சேர்ந்தவர். சிறீசபாரத்தினம் கல்வியங்காட்டை சேர்ந்தவர். வடமராட்சியில் தாசுக்கு தனிச் செல்வாக்கு இருந்தது.

### சவால்

வடமராட்சியில் புலிகள் இயக்கத்தினருக்கும் தாஸ் சவாலாக விளங்கினார்.

ஒரு முறை தாஸ் குழுவினர் வீதிகளில் எதிர்ப்படும் புலிகள் இயக்க உறுப்பினர்களை பந்தாடிக்கொண்டு திரிந்தார்கள்.



சிறீசபாரத்தினம்

வீதிகளில் இறங்கினால் பிரச்சனை வரும் என்று தமது உறுப்பினர்கள் அனைவரையும் முகாம்களுக்குள் இருக்குமாறு கிட்டு சொல்லவேண்டி ஏற்பட்டுவிட்டது.

பின்னர் தாசுடன் புலிகள் இயக்கத்தினர் பேச்சு நடத்தியதால் பிரச்சனை தீர்ந்தது.

புலிகள் இயக்கத்திற்கு எதிரான நடவடிக்கை மூலம் தாஸின செல்வாக்கு ரெலோவுக்குள் மேலும் வளர்ந்தது.

இவற்றையெல்லாம் சிறீசபாரத்தினம் அவ்வளவாக ரசிக்கவில்லை.

தாசுக்கும், பொபிக்கும் இடையே சமரசம் செய்ய முயன்றார் சிறீசபாரத்தினம்.

பொபிக்கு சார்பாகவே சிறீசபாரத்தினம் பிரச்சனையை தீர்க்க முற்பட்டதால் தாஸ் சமரசத்திற்கு உடன்படவில்லை.

தாஸ் இருக்கும்வரை பிரச்சனை தீராது என்ற முடிவுக்கு வந்தார் சிறீசபாரத்தினம்.

நேரடியாக மோதினால் தாசின் பலத்தோடு ஈடுகொடுக்க முடியாமல் இருக்கும்.

வடமராட்சியில் தாசுக்கு மக்கள் மத்தியிலும் செல்வாக்கு இருப்பதால், தாசை தேடிச் சென்று மோதலில் ஈடுபடுவதும் முடியாத காரியம்.

## பேச அழைத்து மூச்சை நிறுத்தினார்கள்

அதனால் சதித்திட்டம் தீட்டப்பட்டது. தாசை தீர்த்துக்கட்டுமாறு பொபிக்கு உத்தரவிட்டார் சிறீசபாரத்தினம்.

தருணத்தை எதிர்பார்த்து காத்திருந்தது 'பொபி' குழு.

### சதிவலை

சதித்திட்டத்தின் ஒரு ஏற்பாடாக தாசுக்கு தூது அனுப்பப்பட்டது.

தாசும், பொபியும் ஒரு பொது இடத்தில் சந்தித்துப் பேசிக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் பொது மருத்துவ மனைதான் சந்திப்புக்கு ஏற்ற இடமாக சொல்லப்பட்டது.

பொது மருத்துவ மனைக்குள் இயக்கத்தினர் எவரும் ஆயுதங்களோடு செல்லக் கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது.

சகல இயக்கங்களும் அந்தப் பொதுக் கட்டுப்பாட்டை கடைப்பிடித்து வந்தனர்.

யாழ்-பொது மருத்துவ மனைக்கு வந்து சேர்ந்தார் தாஸ். ஆயுதங்களை வாகனத்தில் வைத்துவிட்டு தாசும், நாலு பேரும் மருத்துவ மனைக்குள் சென்றனர்.

மருத்துவமனையில் தேநீர் விடுதியில் தேநீர் அருந்திக்கொண்டு பொபி குழுவினரின் வருகைக்காக காத்திருந்தனர்.

திடீரென்று மருத்துவ மனையின் வாயில் பக்கம் வெடிச்சத்தங்கள் கேட்கத் தொடங்கின.

தாஸ் குழுவினருக்கும் அந்தச் சத்தங்கள் கேட்டன.

கையிலே ஆயுதமும் இல்லை. என்ன செய்யலாம் என்று யோசிப்பதற்கு இடையில், தேநீர் விடுதிக்குள் புகுந்துவிட்டது பொபி குழு.

கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு. தாஸ் சூடுபட்டு விழுந்தார்.

தொடர்ந்து தாசுடன் வந்தவர்களை நோக்கி சுட்டுத்தள்ளினார்கள்.

தாசின் வலது கரமாக இருந்த காளி, அண்ணாச்சி என்றழைக்கப்படும் பீற்றர், மற்றும் நிசான், மோகன் ஆகியோர் துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடையாக்கப் பட்டனர்.

### பொதுமக்களும் பலி

மருத்தவமனைக்கு சிகிச்சைக்காக வந்திருந்தார் வேலணை ஆரம்பநீதிமன்ற நீதிபதி கிருபரத்தினம். ரெலோ குழுவினரின் கண்மூடித்தனமான சூடு அவர்மீதும் விழுந்தது. அந்த இடத்திலேயே பலியானார் நீதிபதி.

மருத்துவ தாதியொருவரையும் துப்பாக்கிக் குண்டு பதம்பார்த்தது. அவரும் பலியானார்.

சிகிச்சைக்காக வந்திருந்த மற்றொரு பொது மகனும் கொல்லப்பட்டார். பத்துப் பேர்வரை காயமடைந்தனர்.

தாசின் உடலை தூக்கிக் கொண்டு வெளியேறியது பொபி குழு.

இது நடந்தது 11.3.86 இல். ஈழப் போராளி அமைப்பொன்று பொது மருத்துவ மனைக்குள் படுகொலை வேட்டை நடத்தியது அதுதான் முதல் தடவை.

இதுவரை முறியடிக்கப்படாத சாதனை அது (?!)

ரெலோவின் சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல் உட்பட, வடக்கில் நடைபெற்ற ரெலோவின் சொல்லிக் கொள்ளக்கூடிய தாக்குதல்கள் அனைத்திலும் முன்னணியில் நின்றவர் தாஸ்.

தாஸ் கொல்லப்பட்ட பின்னர் ரெலோ இயக்கம் வெற்றிகரமான தாக்குதல் எதிலும் ஈடுபடவில்லை. அது ஒன்றே போதும் தாசின் திறமைக்கு தக்க சான்றுசொல்ல.

தாஸ் கொல்லப்பட்ட செய்தியறிந்து வடமராட்சியெங்கும் மக்கள் தாமாகவே முன்வந்து கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டார்கள்.





### ஊர்வலமாய் மக்கள்

13.1.86 அன்று உடுப்பிட்டியில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் லொறிகளில் கிளம்பினார்கள்.

யாழ்ப்பாணம் நல்லூர் முத்திரைச் சந்தியில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு, கல்வியங்காட்டில் உள்ள ரெலோ முகாமுக்கு செல்வது. தாசின் உடலை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோருவது என்பதுதான் ஏற்பாடு.

சிறீ சபாரத்தினம் அப்போது கல்வியங்காட்டில்தான் தங்கியிருந்தார்.

ஊர்வலத்தை தடுத்து நிறுத்துமாறு உத்தரவிட்டிருந்தார் சிறீசபாரத்தினம்.

தோட்டுத்தில்லை தலைமையில் ஒரு குழு ஆயுதங்களோடு சென்றது.

முத்திரைச் சந்தியில் உள்ள மின்சார ட்ரான்ஸ்போமருக்கு பின்புறமாக மறைந்திருந்து ஊர்வலத்தினர்மீது சுடத் தொடங்கினார்கள்.

அச்சுவேலியைச் சேர்ந்த உதயபாதம் என்னும் இளைஞர் சூடுபட்டு விழுந்தார். அடுத்த சூடு செல்வராணி என்னும் பெண் மீது விழுந்தது.

இருவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

### தப்பி ஓட்டம்

தோட்டுத் தில்லையை நோக்கி ஊர்வலத்தில் இருந்த இளைஞர்கள் ஓடிச் செல்ல, துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடியே தலைதெறிக்க ஓடித்தப்பினார்கள்.

ஊர்வலமாக வந்த மக்கள்மீது ஒளித்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்து இருவர் பலியாகக் காரணமாக இருந்த முதல் இயக்கமும் ரெலோதான்.

முத்திரைச் சந்தைக்கு சமீபமாக நல்லூரிலதான் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அலுவலகம் இருந்தது.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களை கேட்டு டக்ளஸ் தேவானந்தா சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்திருந்தார்.

ஊர்வலத்தில் பலியானவர்களது உடல்கள் மருத்தவமனைக்கு கொண்டு செல்லப்பட இருந்தன.

உடல்களை தம்மிடம் ஒப்படைக்க செய்யுமாறும், இறுதிச் சடங்கு ஏற்பாடுகளுக்கு பாதுகாப்பு தருமாறும் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஊர்வலத்தினர் கேட்டனர்.

இதற்கிடையே கவிஞர் சேரன் உட்பட யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் வந்து, ரெலோவின் அராஜக நடவடிக்கையை கண்டிக்கும் வகையில், இறுதிச் சடங்கை பெரியளவில் செய்யவேண்டும் என்று அபிப்பிராயப்பட்டனர்.

ஊர்வலத்தில் பலியான இருவரது உடல்களையும் யாழ் பல்கலைக்கழகத்தில் பொது மக்களது அஞ்சலிக்காக வைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இறுதிச் சடங்கு ஏற்பாடுகளுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வாங்கினார் டக்ளஸ் தேவானந்தா.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ் பிராந்தியக் கமிட்டி உறுப்பினர்கள் இறுதிச் சடங்கு ஏற்பாடுகளில் முன்னணியில் நின்றனர்.

இதற்கிடையே யாழ். பல்கலைக் கழகத்தில் சகல இயக்கப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

ரெலோ சார்பாக மோகன் கலந்து கொண்டார். இவர் புலிகளால் கொல்லப் பட்ட தமிழீழ விடுதலை இராணுவ (ரெலா) இயக்கத் தலைவர் ஒபரோய் தேவனின் தம்பி.

முத்திரைச் சந்தையில் நடைபெற்ற சம்பவத்திற்கு துளியும் கவலைப்படாமல் விளக்கம் சொன்னார் மோகன்.

"ஊர்வலத்தில் இருந்து வெடிகுண்டு (கிரனைட்) ஒன்று உருண்டுவந்தது. நல்லகாலம் வெடிக்கவில்லை. ஆனால் வெடிக்கப்போகிறது. வெடிகுண்டு வீசப் படுகிறது என்ற பதட்டத்தில் எமது உறுப்பினர்கள் சுட்டுவிட்டார்கள்."

அத்தோடு நிறுத்தவில்லை ரெலோ இயக்கப் பிரதிநிதி. இன்னொன்றையும் சொன்னார்:

"எமது உறுப்பினர்கள் சுட்டது உண்மை. ஆனால் அவர்கள் சுட்டதால் தான் அந்த இரண்டு பேரும் செத்தார்களா என்பது தெரியவில்லை. ஊர்வலத்திற்குள் இருந்து யாராவது சுட்டு தவறுதலாக பட்டதோ என்றும் பார்க்க வேண்டும்."

அதன் பின்னர் தொடர்ந்து பேசுவதில் அர்த்தமில்லை என்பதால் கூட்டம் முடிந்தது.

### குற்றச்சாட்டுக்கள்

தாஸ் மீது குற்றச்சாட்டுப் பட்டியல் சுமத்தி ரெலோ பிரசுரங்களை வெளியிட்டது.

"கொள்ளைக்காரன் தாசுக்கு விதிக்கப் பட்ட மரண தண்டனையை வரவேற்கிறோம்." இப்படிக்கு, தமிழ்மக்கள் என்றும் ஒரு பிரசுரம் வெளியிடப் பட்டது. அதனை வெளியிட்டதும் ரெலோ தான்.

ரெலோ நேரடியாக வெளியிட்ட பிரசுரத்தில் தாஸ் மீதான கொலை நடவடிக்கைக்கு கூறப்பட்ட முக்கிய காரணங்களில் ஒன்று இது:

"இயக்கத் தலைமைக்கு தெரியாமல் கூட்டணித் தலைவர்கள் தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் ஆயியோரை படுகொலை செய்தார் தாஸ்."

அதுவரை புலிகள்தான் அந்தக் கொலைகளுக்கு காரணம் என்று சொல்லிவந்தது ரெலோ.

தமது உட்பிரச்சனை காரணமாக முதன் முதலாக உண்மையை ஒப்புக் கொண்டது ரெலோ.

ஆலாலசுந்தரம், தர்மலிங்கம் ஆகியோரது கொலைகள் தாஸ் தலைமையில் செய்யப்பட்டது உண்மைதான்.

ஆனால், அதற்கான உத்தரவை தமிழ்நாட்டிலிருந்து அனுப்பியவர் சிறிசபாரத்தினம்தான்.

யாழ்-பல்கலைக்கழகத்தில் பல ஆயிரக் கணக்கான மக்கள் ஊர்வலத்தில் பலியான இருவருக்கும் அஞ்சலி தெரிவித்தனர்.

ஐயாயிரம் பேர்வரை கலந்து கொள்ள இறுதி ஊர்வலம் மௌனமாக நடைபெற்றது.

இறுதி ஊர்வலம் ஆரம்பமான யாழ் பல்கலைக்கழக வாயிலுக்கு சமீபமாக ஒரு பத்துப் பேர் சுலோக அட்டைகளுடன் நின்றனர்.

"கொள்ளைக்காரன் தாஸ் கொல்லப் பட்டது நியாயம்" என்றன சுலோக அட்டை வாசகங்கள்.

சுலோக அட்டையோடு நின்றவர்கள் ரெலோ உறுப்பினர்கள்.

பிரமாண்டமான இறுதி ஊர்வலம் முன்பாக ரெலோவின் அந்த நடவடிக்கை சிறுபிள்ளைத்தனமாகவே தெரிந்தது.

அதே வேளை தாசின் உடலை அவரது குடும்பத்தினரிடம் ரெலோ ஒப்படைக்கவேயில்லை.

ரெலோ இயக்கத்தின் வளர்ச்சிக்கு உரமாக இருந்த தாஸ், அதே இயக்கத்தால் ஒரு அநாதைப் பிணமாக, கொள்ளைக்காரன் என்ற பட்டத்தோடு எங்கோ ஒரு வெளியில் எரிக்கப் பட்டிருக்கலாம். அல்லது குழி வெட்டி புதைக்கப்பட்டிருக்கலாம்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

# பூரண சமஷ்டி அமைப்பை ஏற்படுத்தாத அரசியல் வரைபு

அலசுவது–இராஜதந்திரி

அரசியல் தீர்வுத் திட்ட நகல் சட்ட வரைபு வெளியிடப்பட்டுள்ளது.

தைமாதத்தில் வெளியிடப்படும் என்று தெரிவித்தமைக்கமைய தற்போது இந்த வரைபு வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் அரசியல் அணுகுமுறைகளில் தனக்குள்ள அக்கறையை வெளிப்படுத்தும் வகையில், குறிப்பாக வெளி உலகுக்கு வெளிப்படுத்தும் விதத்தில் இந்த சட்ட வரையை வெளியிட்டிருக்கலாம்.

ஆனால் அதிலுள்ள அம்சங்களை நோக்கும்போது, வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை அவை எவ்வளவு தூரம் பூர்த்தி செய்யும்?

இது தவிர இத்தீர்வுத்திட்டம் பெரும்பான்மை சிங்கள மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுமா? என்ற கேள்விகளே புடைத்தெழுந்து நிற்கின்றன.

இருந்தபோதிலும் சுதந்திர இலங்கையில் 'சிங்களம் மட்டும்' என்ற வாதமே ஒரு 'விஷ ஏவுகணை'யாக இலங்கையரின் அரசியலில் குந்தகத்தை விளைவித்தது.

இலங்கைத்தமிழர்கள் சுதந்திர இலங்கையில் ஆரம்பத்தில் சமஷ்டி அமைப்பைக் கூட கேட்டிருக்கவில்லை. தாம் தொடர்ந்து இலங்கையர்கள் என்ற ரீதியல் வாழலாம்; தமது கல்விவளம், பொருளாதாரவளம் அனைத்தையுமே முழு இலங்கையும் பயன்பெறும் வகையில் கொண்டிருக்கலாம் என்பதே அவர்களின் சிந்தனையாக இருந்தது.

இனவாதத்தையோ, அல்லது மத வாதத்தையோ அவர்கள் ஒரு போதும் தூண்டிவிட்டிருக்கவில்லை.

ஆனால், பேரினவாத சிங்கள அரசியலாளர்களே இந்த இன, மொழி, மத வாதங்களை வகுத்துக் கொண்டதுடன், இலங்கையின் வடக்கு-கிழக்கில் தமிழர்களது பாரம்பரிய பிரதேசங்களுக்குள்ளும் ஊடுருவல்களை



பிரச்னைகள் பற்றி நிதானமும், நியாயமும் கொண்ட எந்தவொரு இலங்கைக் குடிமகனும் தெளிவாகவே அறிந்திருக்கமுடியும்.

அரசியல் தீர்வு யோசனைகள் முன்வைக்கப்படலாம்; சாதாரண மக்களைக் குழப்பத்திலாழ்த்தும் சட்ட நுணுக்கங்கள், ஷரத்துக்கள் என்பனவும் அந்த யோசனைகளில் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

ஆனால், அரசியல் தீர்வுக்கான அடிப்படையை எளிதில் ஏற்படுத்தக்கூடிய காரணிகள் மிக எளிதானவை. இருந்தபோதிலும் அக்காரணிகளை தகுந்தவகையில் முன்வைப்பதற்கான துணிவின்றியே ஆட்சியாளர்கள் தளம்பி நிற்பதைக் காண முடிகின்றது.

துணிச்சல் இல்லாமலிருப்பதோடு, இனப்பிரச்னையை ஒரு பகடைக்காயாகவும் தமது சொந்த நலன்களுக்காக ஆட்சியாளர்கள் கையாண்டு வருவதும் நிலைமைகளைச் சிக்கலாக்கி விட்டுள்ளது.

இன, மொழி, பிரதேசவாதங்கள் வடக்கு-கிழக்கிலிருந்தும் முழுமையாக நீக்கப்பட்டு, அங்கே தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் தகுந்த முறையில் வரையறுக்கப்பட்டால் பிரச்சனை என்பது பெருமளவில் நீங்கிவிடும்.

வடக்கு-கிழக்குப் பிரதேசம் என்பது தமிழர்களின் பாரம்பரிய பூமியாகும். எந்தவொரு தீர்வுக்கும் இப்பிரதேசங்கள் தமிழர்களின் தாயகமண் என்பது

இலங்கையின் ஆட்சியாளர்கள் இந்த கியுபெக் மாநில விவகாரத்தையும், தமது தீர்வு யோசனைகளை வெளியிடும்போது குறிப்பிட்டிருந்தார்கள்.

கியுபெக் கனடாவின் பிரெஞ்சு மக்களைப் பெருமளவு கொண்ட மாநிலமாகும். இம்மாநிலம் அதன் மாநில சுயாட்சி மூலம் மிக உன்னதமான கைத்தொழில், பொருளாதார நிலையைக் கொண்டுள்ளது.

இதன் காரணமாக கியுபெக் மாநில மக்கள் தமது தனித்துவத்தைப் பேணும் வகையில் பிரிந்து செல்ல விரும்பினார்கள்.

எனவே, கனடாவில் கியுபெக் மாநிலம் குறித்து நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு அம்மாநிலத்தை தொடர்ந்து கனடாவுடன் இணைத்து வைத்திருப்பதா? அல்லது பிரிந்து செல்ல அனுமதிப்பதா? என்பதைத் தீர்மானிப்பதாகவே இருந்தது.

ஆனால், கியுபெக் விவகாரத்தை இலங்கை இனப்பிரச்னையுடன் எவ்வகையிலும் ஒப்பிட முடியாது.

ஏனெனில், கியுபெக்

யோசனைகளை அரசாங்கம் முன்வைத்துள்ளபோதிலும், அப்பிரதேச மக்கள் சுயமாக தீர்மானங்கள்–முடிவுகளை எடுக்க வேண்டிய அம்சங்கள் பலவற்றிலும் அரசின் தலையீடுகள் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கை ஒரு பௌத்த நாடு என்று அத்தீர்வுயோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பௌத்தம் என்பது ஓர் உன்னதமான மதம் என்பதை முழு உலகமுமே நன்கறியும். ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை பௌத்தம் என்ற பெயரில் இடம்பெறும் பாதகங்கள் எண்ணிலடங்காதவை.

இலங்கையில் தீர்வுத்திட்டங்கள் என்று முன்வைக்கப்பட்ட போதெல்லம் பௌத்த மதத்தின் பேரால், புத்த சந்நியாசிகளே அத்தீர்வுத்திட்டங்களைக் குழப்பியிருந்தனர்.

இலங்கையின் பெரும்பாலானவர்கள் பௌத்த சிங்களவர்கள் என்பது தெரிந்ததே. ஆனால் இலங்கையில் பௌத்த-சிங்களம்

அரசியல் தீர்வு யோசனைகளை ஆட்சியாளர்கள் முன்வைத்திருக்கலாம்; ஆனால் வடக்கு-கிழக்கின் தமிழ் பேசும் மக்களின் கோரிக்கைகள் என்பன முழு அளவில் சமஷ்டி அடிப்படையிலான சுயநிர்ணயக் கோட்பாட்டை வலியுறுத்துவதாகவே இருக்கின்றன.

ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் இனத்தகராறு என்பது இலங்கையில் இருக்கவில்லை. ஆங்கிலமே முதன்மை மொழியாக இருந்தது.

நிர்வாகம், நீதி, நியாயம், கல்வி என்பன அனைத்துமே ஆங்கிலமயமாகவே இருந்தது.

தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் மற்றும் பௌத்தம், இந்து, இஸ்லாம் என்ற பேதங்கள் யாவும் ஆங்கிலேயர் காலத்தில் வீடுவரையில் மட்டுமே இருந்தது.

இலங்கையில் நாகரிகம், கல்வி, மற்றும் சமூக, பொருளாதார விடயங்களை மேம்படுத்த விரும்பிய

மேற்கொள்ளலானார்கள்.

ஆனால், தமிழ் மக்கள் தாமிருக்கும் பிரதேசம் தம்முடையதே என்று வாழ்ந்ததுடன், அதனை அரசியல் ரீதியாக துண்டாடுவதற்குக்கூட எண்ணியிருக்கவில்லை.

ஆனால் தமிழர்களை அவர்களது பிரதேச பாதுகாப்புக் குறித்து விழிப்படைய வைத்ததும், பேரின வாதிகளின் அத்துமீறிய குடியேற்றங்களே என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிங்களம் மட்டுமே என்ற மொழிவாதம், பௌத்தநாடு என்ற மதவாதம், இதனையடுத்து அத்துமீறிய குடியேற்றங்களின் மூலம் பிரதேசவாதம் ஆகியனவற்றைத் தூபமிட்டவர்கள் பேரினவாத சிங்கள அரசியல் வாதிகளே என்பதனை எவருமே மறுக்க முடியாது.

ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது அடிப்படை அம்சமாகின்றது.

இதில் பிளவு, அல்லது துண்டாட்டம் என்று ஏற்படும்போது தீர்வுக்கான முயற்சிகள் சிக்கலடையவே செய்யும்.

அரசின் தீர்வுத்திட்டத்தில் வடக்கு-கிழக்கு இணைப்புக்குறித்த விடயம் எவ்விதத்திலும் தெளிவு படுத்தப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில், எல்.ரி.ரி.ஈ.யினரது தரப்பிலிருந்து மட்டுமல்ல, ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளிடமிருந்தும்

மாநில சுயாட்சி பற்றிப்பேச இலங்கையின் ஆட்சியாளர்கள் எவ்விதத்திலும் அருகதையற்றவர்கள்.

ஒரு சமஷ்டி அடிப்படையிலான ஆட்சியமைப்புக்கும் சுயநிர்ணய உரிமைகளுடன் கூடிய நிர்வாக அமைப்புக்கும் கியுபெக் மாநிலம் ஒரு நல்ல உதாரணமாக இருக்கின்றது.

சிறந்த சமஷ்டி அமைப்புடன் இருந்த கியுபெக் மக்கள் தனிநாடு கோரியதாலேயே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டதே தவிர அவர்களது தனித்துவத்தையும், மாநில ஒருங்கிணைப்புக் குறித்தும் தீர்மானிக்க கனடாவில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை.

கியுபெக் வாசிகளின் தனித்துவம், மாநில சுயாட்சி என்பன ஏற்கனவே மிகவும் உன்னதமான

என்ற பதம் கொடிய இனவாதம் சார்ந்ததாவே இருக்கின்றது.

இந்நிலையில் தமிழர்களின் உரிமைகள், கோட்பாடுகள், பிரதேச பாரம்பரியங்கள், தனித்துவங்கள் என்பவற்றைச் சரிவர உறுதி செய்வதற்கு இத்தீர்வு யோசனைகளில் மேலும் பல அம்சங்கள் சேர்க்கப்பட வேண்டியிருப்பது அவசியமானதாகின்றது.

எது எப்படியிருந்தபோதிலும் அரசு முன்வைத்துள்ள இத்தீர்வு யோசனைகளை எடுத்த எடுப்பிலேயே நிராகரிப்பதை விட அதுகுறித்து ஆரோக்கியமான முறையில் வாதப்பிரதி வாதங்கள் மற்றும் பேச்சுக்களை நடத்தி ஆக்க பூர்வமான தீர்வை நோக்கி நாடுவதே புத்திசாலித்தனம்.

அரசியல் அணுகுமுறைகள் மூலமே ஒரு நிரந்தரத் தீர்வைக் காணமுடியுமென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

## அரசியல் அணுகுமுறைகளை நிராகரிப்பதைவிட ஆக்கபூர்வமானதாகவும், அர்த்தமுள்ளவையாகவும் மாற்றியமைப்பதே சிறந்தது



இலங்கையர்கள் அனைவரும் தம்மிடையிலான பேதங்களை நீக்கி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு விசுவாசமாகவே விளங்கியிருந்தனர்.

நாளடைவில் இலங்கையின் சுதந்திரத்துக்கான போராட்டங்கள் ஆரம்பித்த போதும் கூட இலங்கையர்கள் என்ற உணர்வே அன்றைய அரசியலாளர்கள் மட்டத்தில் முனைப்படைந்திருந்தது

இத்தகைய நச்சுத்தனமான வாதங்களே நாளடைவில் இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் மட்டங்களில் நன்கு பரந்து விரிந்து, இன்று அது ஒரு புற்று நோயாகவே உருமாறியுள்ளது.

எனவே இந்த விஷ விதைகளை விதைத்தவர்களே இன்று அவற்றை அகற்ற வேண்டியவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இந்நிலையில் இன்று தமிழர்கள் வடக்கு-கிழக்கில் எதிர்நோக்கும் அரசியல்

கூட வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படாத தீர்வுக்கு எதிர்ப்பே ஏற்படச் செய்யும்.

கடந்த ஆண்டில் கனடாவின் கியுபெக் மாநிலம் தனிநாடாகப் பிரிந்து செல்வதைத் தீர்மானிக்கும் வகையில் சர்வஜன வாக்கெடுப்பொன்று கனடாவில் இடம் பெற்றது.

இந்த வாக்கெடுப்பில் கியுபெக் மாநிலம் தொடர்ந்து கனடாவின் ஒரு மாநிலமாகவே இருக்கவேண்டும்; அது ஒரு தனிநாடாகப் பிரிந்து செல்லக் கூடாதென்று மக்கள் தீர்ப்பளித்திருந்தார்கள்.

நிலையிலேயே உள்ளன.

ஆனால் இலங்கையில் தமிழ் மக்கள் வாழுகின்ற வடக்கு-கிழக்கு மாகாணம் எவ்வளவு தூரம் பூரண சுயாட்சி கொண்ட கியுபெக் மாநிலம், அல்லது அயல்நாடான இந்தியாவின் தமிழகத்துக்கு இணையாக உள்ளதென்பதே இன்றைய கேள்வியாக உள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான தீர்வு

இவ்வகையில் இந்த அரசியல் அணுகுமுறையை மேலும் பலம் மிக்கதாகவும், அர்த்தமுள்ளதாகவும் மாற்ற அனைத்து தரப்பினரும் முயலவேண்டும்.

நிராகரிக்கவேண்டியவற்றை நிராகரித்து சேர்க்க வேண்டியவற்றைச் சேர்க்கவும் வேண்டும்.

இதன் மூலமே இரத்தப் பிரவாகத்துக்கு நிரந்தரமாக முடிவு கட்டமுடியும்.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# லம்ப் லேன் ராணிகள்



இலண்டனில் லம்ப் லேன் பகுதியை பாகிஸ்தானின் தலைநகர் என்று வேடிக்கையாக குறிப்பிடுவது வழக்கம். பெரும்பான்மையான பாகிஸ்தானியர்கள் அங்கு வசிப்பதால்தான் அந்தப் பெயர்.

அங்குள்ள பாகிஸ்தானியர்களுக்கு தீராத தலைவலி போல ஒரு பிரச்சனை. அதனால் அடிக்கடி சச்சரவுகளும் ஏற்படுகின்றன.

அது என்ன பிரச்சனை? லம்ப் லேன் பகுதியில் மாலையானால் போதும். கவர்ச்சிப் பாவைகள் தங்கள் வாடிக்கையாளர்களைத் தேடி வந்துவிடுகிறார்கள். எல்லோருமே வெள்ளையினப் பெண்கள்.

அங்குள்ள மசூதிகளின் முன்பும் அந்தப் பெண்கள் நின்று கொண்டிருப்பதால் முஸ்லிம்களால் சகிக்கமுடியவில்லை.

அவர்களை விரட்டலாம் என்று பார்த்தால், பெண்களின் ஏஜெண்டுகள் சண்டைக்கு வந்துவிடுவார்கள்.

இதற்கு ஒரு முடிவு கட்டப் போவதாகச் சொல்லி ஒரு தொலைக்காட்சி நிறுவனம் லம்ப் லேன் பகுதியில் படம் எடுத்ததாம். லம்ப் லேன் பகுதி விபசாரிகள் பற்றியும், அதனால் ஏற்படும் தொல்லைகள் பற்றியும் படம் சொல்லியிருந்தது. பிரபல நடிகைகள் சிலரும் நடித்திருந்தனர். அதனால் காட்சிகளில் மெருகேற்ற சூடான காட்சிகளையும் கலந்திருந்தனர்.

தொலைக்காட்சி படத்துக்கு பலத்த வரவேற்பு. கோடிக்கணக்கான இரசிகர்கள் மெய்மறந்து இரசித்தனர்.

அந்தத் தொலைக்காட்சிப் படத்தின் பின்னர் லம்ப் லேன் பகுதியில் நடந்த சங்கதிதான் வேடிக்கை.

வாடிக்கையாளர்கள் குவியத் தொடங்கிவிட்டார்கள். வாடகைப் பெண்களுக்கு ஒரே கொண்டாட்டம்.

## ஹலோ டாக்டர்



# வயதானால் என்னாகும்?

**"வணக்கம் டாக்டர்! இன்று மூன்றே மூன்று சின்னச்சின்ன கேள்விகள் மட்டும். முதலில் வரும் கேள்வி-வயிற்றில் இரைச்சல் ஏற்படுவது ஏன்?**

"பால், பருப்பு, முட்டை, உருளைக் கிழங்கு, வாழைக்காய், பயறு வகைகள் போன்ற உணவுப் பொருட்களை அதிகமாக உண்ணும்போது உணவுப்பாதையில் இவை வாயுவை உற்பத்தி செய்யும். இந்த வாயு குடலில் திரவநிலையில் உள்ள உணவுடன் பயணம் செய்யும்போது இரைச்சலை ஏற்படுத்தும். அதுதவிர, வயிற்றுப்போக்கு, கொலரா, சீதபேதி, குடல் காசநோய், இரப்பைப் புண், ஜீரணக் கோளாறுகள், உளவியல் கோளாறுகள் ஆகியவற்றின்போது குடல் அசைவுகள் அதிகமாவதால் வயிற்றில் இரைச்சல் கேட்கும்."

• **"நீரிழிவு நோய்க்கு வெந்தயம் சாப்பிடுவது நல்லதா டாக்டர்?"**

"வெந்தயத்தில் 'ட்ரை கொனல்லின்' என்ற காரப்பொருள் உள்ளது. இதற்கு சீனியை சிறிதளவு குறைக்கும் சக்தி உண்டு. அதனால் வெந்தயத்தை தினமும் உணவில் சேர்த்துக் கொண்டால் இரத்தத்தில் சீனியின் அளவு கூடுவதை ஓரளவு தவிர்க்கலாம். அதற்காக நீரிழிவு நோய்க்கு வெந்தயம்தான் மருந்து என்று இருந்துவிடக்கூடாது."

• **"எனது நண்பரின் மகனுக்கு 10 வயது. காலையில் எழுந்ததும் அரைமணி நேரத்திற்கு தொடர்ந்து தும்மல் வருகிறது. மூக்கு ஒழுகுகிறது. பகலில் சரியாகிவிடுகிறது. ஏன் டாக்டர்?"**

"ஒவ்வாமைதான் இதற்கு முக்கிய காரணம். ஒவ்வாமையை அகற்றுவது தான் சிறந்த வழி. குளிர்ந்த காற்று உடம்பில் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தவிர காற்றில் கலந்துவரும் பஞ்சு, தூசு, ஒட்டடை, பூக்களின் மகரந்தம், சாம்பிராணிப் புகை ஆகியவற்றாலும் அப்படி ஏற்படலாம். மருத்துவர் உதவியுடன் எந்தப் பொருளுக்கு ஒவ்வாமை உள்ளது என்று கண்டுபிடித்து தகுந்த சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்."

• **"முதியவர்களுக்கு நினைவு குறைவது, பார்வை மங்குவது எதனால்?"**

"வயதானவர்களுக்கு 'செரிபெரம்' என்ற பகுதி சுருங்க ஆரம்பித்துவிடும். இதற்குபதில் மூளைத்திரவம் விரிய ஆரம்பிக்கும். இதனால் நினைவு குறையும். காது மந்தமாகும். இது 'அல்சைமர்' நோய் எனப்படும்."

**"நன்றி டாக்டர்."**

## டொலர் பாபா



இந்தியாவில் அந்நிய செலாவணியை அதிகளவில் சம்பாதிக்கும் தனிநபர் யார் தெரியுமா? புட்டபர்த்தி சாய்பாபாதான். இந்திய சுற்றுலாத்துறையே அதனை அறிவித்திருக்கிறது.

தனது 70 வது பிறந்தநாளை சாய்பாபா கொண்டாடியபோது ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டுக்காரர்கள் திரண்டு வந்து பரிசுகளை வாரிக்கொடுத்தனர். பல கோடிகள் தேறும்.

முன்னர் ஹரே கிருஷ்ணா இயக்கம்தான் இந்தியாவில் அதிக அந்நிய செலாவணியை சம்பாதித்தது. இப்போது நிலமை மாறிவிட்டது. வெளிநாட்டு பக்தர்களிடம் சாய்பாபாவுக்குத்தான் மவுசு.

இந்தியாவில் உள்ள பிரபல தலைவர்கள் பலர் பாபாவின் காலடியில் கிடக்கிறார்கள். ஜனாதிபதி, பிரதமர், தேர்தல் ஆணையாளர் சேஷன், கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர் என்று பலதரப்பட்ட பிரபலங்கள் சாய்பாபாவை சந்திக்கிறார்கள்.

மதுபான மன்னர் விஜய் மல்லய்யாவும் பாபாவின் பக்தர்கள் பட்டியலில் இருக்கிறார். அவருக்கு எற்பட்ட பிரச்சனை ஒன்றை சம்பத்தில் சுமுகமாக தீர்த்துவைத்திருக்கிறார் சாய்பாபா.

# அவள் அப்படித்தான்

பிரிட்டன் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த பிரதிபா பார்மர் என்னும் பெண்மணி பெரிய சர்ச்சையை கிளப்பிவிட்டார்.

கடந்த பதின்மூன்று வருடங்களாக ஷாஹீன் ஹக் என்னும் தோழியுடன் தனது செக்ஸ் வாழ்க்கையை பகிர்ந்து கொள்வதாக அவர் கூறியதுதான் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

பிரதிபாவுக்கு இப்போது 40 வயது. ஆவணங்கள் சம்பந்தப்பட்ட திரைப் படங்கள் எடுப்பதுதான் இவரது தொழில்.

இவரது பேட்டியைப் பார்த்து குடும்பத்தினரே அதிர்ச்சியடைந்து விட்டனராம். "ஒரு ஆணுடன் உன்னுடைய வாழ்க்கையை பகிர்ந்து கொள்ளக்கூடாதா?" என்று தாயார் அடிக்கடி நச்சரித்துக் கொண்டிருக்கிறாராம். பிரதிபா அசைந்து கொடுப்பதாக இல்லை.



டென்னிஸ் வீராங்கனை நவ்ரத்திலோவாவும் இப்படியான அதிரடி அறிவிப்பு செய்து முன்னர் கர்ச்சை கிளப்பியிருந்தார்.

---

வெறும் வார்த்தைகளால் மட்டும் பாராட்டினால் போதுமா? என்று கேட்டாள் குரோச்சியா.



கார்லோஸின் தோற்றங்களில் ஒன்று

**சென்ற வாரம்**

**வியன்னாவில் சர்வதேச எண்ணெய்வள நாடுகளது மாநாடான 'ஒபெக்' மாநாடு நடைபெற்றது. ஈராக் உபஅதிபர் சதாம் ஹுசைனின் திட்டப்படி மாநாட்டுக்குள் புகுந்தனர் கார்லோஸ் குழுவினர். சவுதி அரேபியா, ஈரான் எண்ணெய்வள அமைச்சர்களை தீர்த்துக் கட்டுவதுதான் நோக்கம். 11 நாடுகளது அமைச்சர்கள் உட்பட 70 பேர் பணயக்கைதிகளாக கார்லோஸ் குழுவினரால் மடக்கப்பட்டனர்.**

**இப்போது அவர்களின் முடிவு கார்லோஸ் குழுவினரின் கையில்.**

**இனி..**

# சூடுபட்டும் துவளாத மனிதன்

## மனித வெடிகுண்டு



கார்லோஸ் குழுவினரது கண்களில் படாமல் நழுவிய அந்த உருவம் ஒரு அறைக்குள் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டது.

அந்த அறையில் தொலைபேசி இருந்தது. கார்லோஸ் குழுவினர் தொலைபேசித் தொடர்பை துண்டிக்க மறந்துவிட்டனர்.

தொலைபேசி மூலமாக அந்த உருவம் வியன்னா பொலிஸ் தலைமையகத்திற்கு செய்தி சொல்ல,

பொலிஸ் நிலையம் முழுவதுமே பதட்டம் தொற்றிக்கொள்ள,

தகவல்கள் நாலாபக்கமும் பறந்து முதலில் ஒஸ்ரியவை குலுக்கிவிட்டு,

செய்தித் தொடர்பு சாதனங்கள் உபயத்தில் உலகம் எங்கும் வியன்னா கடத்தல் பற்றியே பேசவைக்க,

வியன்னா பொலிஸ் சுறுசுறுப்பாக செயற்பட்டு, எதற்கும் துணிந்த பொலிஸ் குழுவை உடனே அமைத்து,

அதற்கு லியோபோல்டர் என்னும் பொலிஸ் அதிகாரியை பொறுப்பாக நியமித்து,

இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் மாநாட்டு மண்டபத்தை நோக்கி அனுப்பி வைத்தது.

கார்லோஸ் அடுத்தடுத்து பிறப்பித்த உத்தரவுகளுக்கு அமைய மாநாட்டு மண்டபம் முழுவதும் கார்லோஸ் குழுவினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

ஒபெக் செயலாளர் நாயகம், மற்றும் ஒபெக் பிரதிநிதிகள், செயலக ஊழியர்கள் உட்பட 70 பேர் பணயக்கைதிகளாக்கப் பட்டனர்.

உள் அறையில் இருளில் தரையோடு குப்புற படுத்துக் கிடந்த 11 அமைச்சர்களும் மூச்சுவிடக்கூட பயந்துகொண்டிருந்தனர்.

திடீரென்று கார்லோஸின் குரல் அந்தக் கேள்வியை வீசியது.

"யமானி யார்? யார் யமானி?"

குப்புறக்கிடந்த யமானி மெல்ல தலை உயர்த்தி, முழங்காலில் எழுந்து நின்று, கார்லோஸ் நின்ற திசை நோக்கி சலாம் வைத்தார்; வியர்த்துப் போயிருந்தார்.

"சவுதி அரேபியாவின் எண்ணெய் வள அமைச்சருக்கு சாவுக்களை முகத்தில் தெரிகிறது" என்று ஜோக்கடித்தான் கார்லோஸ்.

தனது அருகில் நின்ற யூசுப்பிடம், "மண்டபத்தை வளைத்து வெடி குண்டுகளைப் பொருத்திவிடு. எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் அவற்றுக்கு வேலை இருக்காது. கோரிக்கைகளில் ஒன்று மறுக்கப் பட்டாலும் மதிப்பிற்குரிய அமைச்சர்கள் மண்டபத்தோடு மரண தேவதையை அணைத்துக் கொள்ளட்டும்."

யூசுப் வெளியேறினான். யமானி பேயறைந்தது போல முகத் தோற்றம் காட்டிவிட்டு, மறுபடி குப்புறப் படுத்துக்கொண்டார்.

வியன்னா பொலிஸ் குழு மண்டபத்தை சுற்றிவளைத்துக் கொண்டது.

மண்டபத்தின் நான்குபுற வாயில்களிலும் இயந்திரத் துப்பாக்கி ஏந்திய பொலிசார் நிறுத்தப்பட்டனர்.

மண்டபத்துக்குள் அதிரடியாய் புகுந்து கொள்ளும் திட்டத்தோடு தன்னோடு மூன்று பொலிஸாரை சேர்த்துக்கொண்டார் அதிகாரி லியோபோல்டர்.

இயந்திரத் துப்பாக்கிகளால் குண்டுகளைப் பொழிந்துகொண்டு, உள்ளே புகுந்தனர் பொலிஸ் குழுவினர்.

உள்ளே மண்டப வாயிலில் கலீன் மட்டுமே காவலுக்கு நின்றுகொண்டிருந்தான்.

முதலில் திகைத்துபோதும், பின்னர் உஷாராகிய கலீனின் இயந்திரத் துப்பாக்கி சீறத் தொடங்கியது.

பொலிஸ் குழுவின் தலைமை அதிகாரி லியோபோல்டருக்கும், கலீனுக்கும் இடையே மூன்று நிமிடங்கள் வரை துப்பாக்கிச் சமர் நடந்தது.

கலீனின் துப்பாக்கிக் குண்டு லியோபோல்டரின் இடதுபுற தோளில் பாய்ந்தது.

தனிஒருவனாக நின்று தொடர்ந்து தாக்குப்பிடிக்க முடியாது என்று உணர்ந்து சுட்டபடியே மண்டபத்துக்குள் பின்வாங்கிச் சென்றான் கலீன்.

வெளியே துப்பாக்கி முழக்கங்கள் கேட்கத் தொடங்க, உள்ளே கார்லோஸ் குழுவினர் உஷாரானார்கள்.

குரோச்சியாவை அழைத்து சட்டளை விட்டான் கார்லோஸ்:

"முன்னேறவிடாதே! வெடி குண்டை வீசி தடுத்து நிறுத்து. நாங்கள் தோற்கக் கூடாது."

குரோச்சியா வெடிகுண்டோடு ஓடினாள்.

அதேநேரம் லியோபோல்டரின் துப்பாக்கிக் குண்டு கலீனின் வயிற்றில் பாய்ந்தது.

கலீன் விழவில்லை. உதட்டை கடித்து வலியைப் பொறுத்துக்கொண்டு, சுட்டுக்கொண்டே, ஒரு அறையைத் திறந்து புகுந்து கொண்டான்.

அதேநேரம் குரோச்சியா வெடிகுண்டை வீசினாள்.

பயங்கர சத்தத்துடன் வெடிகுண்டு வெடிக்க, பொலிஸ் குழு பின்வாங்கத் தொடங்கியது.

லியோபோல்டரை வெடிகுண்டின் சிதறல்கள் காயப்படுத்திவிட்டன.

லியோபோல்டர் தவழ்ந்தபடி பின்வாங்கிக் கொண்டிருந்தார். மண்டபக் கதவுகளை அறைந்து மூடினாள் குரோச்சியா.

உள்ளே கலீன் தனது வயிற்றை வெளிச்சத்தில் பார்த்தான். ஓட்டை விழுந்திருந்தது. ஆச்சரியமாக இரத்தம் அதிகம் வெளியேறவில்லை. கலீன் ஒரு சிகரெட்டை பற்றவைத்துக் கொண்டு வலியை துரத்த முயன்றான்.



'கலீன்' மாநாட்டு மண்டபத்திலிருந்து வெளியே.....

குப்புறக்கிடந்த அமைச்சர்கள் மத்தியில் வெனிசுலா நாட்டின் அமைச்சரும் கிடந்தார்.

அவரது பாதத்தை யாரோ சுரண்டினார்கள். தலை உயர்த்திப் பார்த்தார். இருளில் யார் என்று உடனே தெரியவில்லை. குரல்மட்டும் காதோடு இரகசியம் பேசியது.

"பயப்படவேண்டாம். எழுந்திருங்கள். உங்கள் உயிருக்கு சேதம் வராது" என்று சொன்ன குரலை அமைச்சர் இனம் கண்டு கொண்டார். சற்று முன்னர் அதிகாரத் தோரணையில் முழக்கமிட்ட கார்லோஸின் குரல்தான் அது.

எழுந்தவரை அழைத்து வெளியே கொண்டுசென்றான்.

"யார் நீ? என்னை எப்படித் தெரியும்?" என்று சந்தேகம் பூசிய குரலில் கேட்டார் அமைச்சர்.

"நானும் வெனிசுலா நாட்டுக்காரன் தான்."

"உண்மையாகவா?"

"பொய் சொல்லவேண்டிய அவசியமில்லை. என் உண்மையான பெயர் ராமிரெஸ் சாஞ்செஸ்."

"நீ ஏன் இங்கே..?"



பணயக்கைதிகள் தரம் பிரிக்கப்படுகின்றார்கள்.

"பாலஸ்தீன புரட்சியில் நானும் ஒரு அங்கம். எங்கு ஒடுக்குமுறை எழுகிறதோ அங்கு கார்லோஸ் இருப்பான். இரும்புக் கரங்களுக்கு பதிலடி கொடுப்பான்."

அதற்குப்பின்னர் அமைச்சர் எதுவும் கேட்கவில்லை. தனது உயிருக்கு ஆபத்து நேராது என்பது மட்டும் சற்று ஆறுதலாக இருந்தது.

பணயக்கைதிகள் எழுபது பேரையும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கச் சொன்னான் கார்லோஸ்.

முதல் பிரிவில் எதிரிகள்.

இரண்டாம் பிரிவில் நடுநிலையாளர்கள்.

மூன்றாம் பிரிவில் நண்பர்கள்.

சவுதி அரேபியா, ஈரான், அபுதாபி, மற்றும் கட்டார் நாடுகளைக் சேர்ந்தவர்கள் எதிரிகள்.

ஈராக், அல்ஜீரியா, லிபியா, குவைத் நாடுகளது பிரதிநிதிகள் நண்பர்கள்.

காபோன், நைஜீரியா, ஈக்குவேடர், வெனிசுலா மற்றும் இந்தோனேசியா நாடுகளின் பிரதிநிதிகள் நடுநிலையாளர்கள்.

மண்டப ஊழியர்கள், இரு பிரிட்டிஷ் பிரஜைகள் ஆகியோரும் நண்பர்கள் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

தரத்துக்கு ஏற்பவே தாக்குதல் நடக்கும். கார்லோஸின் சைகை கிடைத்ததும் யூசுபின் முதல் தாக்குதலில் எதிரிகள் மடிவர்.

கார்லோஸின் இரண்டாவது சைகை கிடைத்தால் நடுநிலையாளர்களை வெடிகுண்டுகள் சாய்க்கும்.

மூன்றாவது சைகை கிடைத்ததும் நண்பர்கள் தரப்பும் தவிர்க்க முடியாமல் தாக்கப்படும்.

கார்லோஸ் தனது திட்டத்தை அனைவருக்கும் கேட்கக்கூடியதாகவே விபரித்தான்.

கேட்கக், கேட்க, பணயக்கைதிகளுக்கு மயக்கம் வராதது ஒன்றுதான் குறை.

கார்லோஸ் குரோச்சியாவை தனியாக அழைத்துச் சென்று பாராட்டினான்.

"அபாரமாக செயற்படுகிறாய். இந்த நடவடிக்கையில் வெற்றி அல்லது மரணம் தான் நமது முடிவாக இருக்கவேண்டும்."

## ரசிகன்

அவளின் தோளில் தட்டிவிட்டு கார்லோஸ் நகர, தோளில் தட்டிய கரத்தை தனது கையால் பிடித்திழுத்தாள், கார்லோஸ் கேள்வியாய் நோக்க,

"வெறும் வார்த்தைகளில் மட்டும்தான் பாராட்டா?" என்றவளை, சட்டென்று நெருங்கி, இரு கன்னங்களையும் உள்ளங் கைகளால் அழுத்தியபடி இதழ்களில் ஆழமாய் முத்தமிட்டான் கார்லோஸ்.

குரோச்சியாவின் மார்புகள் கார்லோசின் மார்பில் அழுத்தமாய்ப் பதிய, கார்லோஸ் தடுமாறி சூழலை நினைத்து சுதாகரித்து, "இது அட்வான்ஸ் மாதிரித்தான்" என்று கண்ணடித்து அவள் கன்னத்தில் கிள்ளிவிட்டு, கலீனை தேடிப்போனான்.

கலீனுக்கு உடனே சிகிச்சை தேவையாக இருக்கிறது. இல்லாவிட்டால் உயிராபத்து நிச்சயம் என்று கார்லோஸ் நினைக்க,

"வேண்டாம். என்னைப்பற்றி யோசிக்க வேண்டாம். எடுத்த காரியத்தை முடித்தால் போதும். உயிர் போனால்கூட திரும்பிவந்துவிடும்" என்றான் கலீன்.

கார்லோஸ் வெளியே வந்து பணயக் கைதிகளிடம், "உங்களில் யாராவது டாக்டர் இருக்கிறீர்களா?"

நைஜீரியா அமைச்சர் முன்னால் வந்தார். கலீனை பரிசோதித்துவிட்டு, உதட்டைப் பிதுக்கினார்.

"உடனே அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டும். அதுவும் இன்னும் சில மணி நேரங்களில்." என்று பதட்டமாகச் சொன்ன டாக்டரை, கலீன் சிரித்துக் கொண்டே, "டாக்டர் பூச்சாண்டி காட்டுகிறார்" என்று சொல்லிக் கொண்டு சிகரெட் பற்றவைத்துக்கொண்டான்.

'இப்படியும் ஒரு மனிதனா? என்று டாக்டர் வியப்போடு அவனைப் பார்க்க, கலீனை எப்படியாவது சிகிச்சைக்கு அனுப்பியே தீருவது என்று முடிவுக்கு வந்தான் கார்லோஸ்.

அடுத்துவந்த ஐந்து நிமிடத்தில் கலீனை வெளியே மருத்துவ மனைக்கு அனுப்ப ஏற்பாடு செய்தான் கார்லோஸ். செயலக ஊழியரான ஒரு பெண்ணின் உதவியோடு வெளியே அழைத்துச் செல்லப்பட்டான் கலீன்.

மாநாட்டு பிரதிநிதிகளில் ஒருவர் தான் காயமடைந்து வெளியே கொண்டு வரப்படுவதாக நினைத்து, வெளியே நின்ற பொலிசாரும் உதவினார்கள்.

அதற்கிடையே பத்திரிகையாளர்கள் கலீனை மொய்த்தனர்.

தனது பெயர் 'அஞ்ஜ்' என்று சொன்னான் கலீன். புகைப்படம் எடுக்க முற்பட, தனது முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டான்.

உள்ளே கார்லோஸ் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தயாரானான்.


(பதட்டம் தொடர்கிறது)



படிப்பகம்

www.padippakam.com

## உ...உ...யர்ந்த நாற்காலி



உலகிலேயே பெரிய நாற்காலி எது வென்றுகேட்டால், உடனே பெரிய பதவியை யோசிப்பீர்கள். உண்மையிலேயே உலகில் பெரிய நாற்காலி படத்தில் இருப்பதுதான். இதில் அமர்ந்து கொள்பவரை உலகில் உயர்ந்த நாற்காலியில் இருப்பவர் என்று அழைக்கலாம்தானே. இதன் உயரம் பத்து மீட்டர். கோலாலம்பூரில் தளபாட கண்காட்சி ஒன்றில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. பார்வையாளர்களுக்கு எல்லாம் இந்த நாற்காலியில் ஒரு மோகம் ஏற்பட்டாலும், அதற்கு கொடுக்க வேண்டிய விலை நெருங்க முடியாமல் செய்துவிட்டது. இதன் விலை 7 ஆயிரத்தி 840 அமெரிக்க டொலர். நம்நாட்டுப் பெறுமதிப்படி கிட்டத்தட்ட 4 இலட்சத்து 31 ஆயிரத்து இருநூறு.



## பலியாடுகள்

உலக வரலாற்றில் நடைபெற்ற மிக கொடூர சம்பவங்களில் ஒன்றை இப் புகைப்படம் சித்தரிக்கிறது.

1952 முதல் 1956 வரை கென்யா நாடு பிரித்தானியாவின் காலனி நாடாக மாட்டியிருந்தது. எதிர்த்து போராடியவர்கள் மவு மவு தீவிரவாதிகள் என்று அழைக்கப்பட்டனர். பிரிட்டிஷ் படைகள் தீவிரவாதிகள் என்று சொல்லி 80 ஆயிரம் பேரை சிறையிலிட்டது. கென்யாவில் இருந்த பொம்மை அரசு பிரிட்டனின் விருப்பப்படி ஆடியது. 11 ஆயிரம் தீவிரவாதிகளை ஆடு மாடுகள் போல சுட்டுத்தள்ளியது. கென்யாவின் சித்திரவதை முகாம் ஒன்றில் மனித உயிர்கள் படும் பாட்டை இந்தப் புகைப்படம் தத்ரூபமாக சித்தரிக்கிறது. உலகப் புகழ்பெற்ற படங்களில் ஒன்று இது. புகைப்படம் எடுத்தவரின் துணிச்சலை பாராட்டலாம்




## பம்பர வித்தை

உடல் ஊனமுற்றுவிட்டால் பிச்சையெடுப்பதுதான் வழி என்று நினைக்கவில்லை. வித்தை காட்டி சம்பாதிக்க நினைத்துவிட்டாள் இந்தப் பெண். கைகளால்தான் பம்பரம் சுழற்றிப் பார்த்திருக்கிறோம். இரு கைகளும் இல்லாத இப்பெண் தனது கால்களால் பம்பரத்தை சுழற்றி பார்வையாளார்களை கவர்கிறாள். இப்படி வித்தை காட்டி தினசரி 200 ரூபாய் சம்பாதிக்கிறாள். பம்பாயில் 'கிளிக்' செய்யப்பட்ட காட்சி. சின்னக் கவுண்டரில் சுகன்யாவின் வயிற்றில் விஜயகாந்த் பம்பரம் விட்டது படத்திற்காக. இது வயிற்றுப் பாட்டுக்காக.

## தகவல் பெட்டி

### வாவ்! ஒரு வால்!

தமிழ் நாட்டில் மணவாளக் குறிச்சி பள்ளித் தெருவில் வசித்து வருபவர் அபுபக்கர். ஒரே நாளில் உலகப் பிரபலம் ஆகிவிட்டார். காரணம், அவர் வளர்த்த "கோழி முட்டையிட்டது. அதில் ஒன்றும் ஆச்சரிய மில்லை, ஆனால் அந்த முட்டையில் வால் போன்று ஒன்று முளைத்திருந்ததுதான் அதிசயம்.



## "தண்ணீர் இல்லாத கார் வேண்டும்"



ஹிட்லரின் போர் வெறி உலகில் பல நாசங்களுக்கு காரணமானது என்பது பொதுவாகவே தெரிந்த சங்கதி.

அதேவேளை சில உருப்படியான காரியங்களும் ஹிட்லரின் கட்டளைப்படி வேகமாக நடந்தன.

கார்களுக்கு றேடியேற்றர் இருக்கும். அதில் தண்ணிர் விட்டால்தான் என்ஜின் குளிரும். யுத்தச் சூழ்நிலையில் றேடியேற்றரில் தண்ணீர் இருக்கிறதா என்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கவா முடியும். ஆகவே விஞ்ஞானிகளே "றேடியேற்றரே இல்லாத கார்களை உடனடியாக உற்பத்தி செய்யுங்கள் என்று கட்டளையிட்டார் ஹிட்லர்.

விஞ்ஞானிகள் ஓடுபட்டுத் திரிந்து யோசித்து, றேடியேற்றர் இல்லாத கார்களை உற்பத்தி செய்து முடித்தனர். இராணுவ தாங்கிகள், கவச வாகனங்களின் என்ஜின்களாக இயங்கியவை காராக மாற்றப்பட்டன. 'வோக்ஸ் வாகன்' என்று பெயர் வைக்கப்பட்டது. சர்வதேச அளவில் 1955ல் மவுசு உள்ள கார்களாக மார்க்கெட்டை எட்டிப்பிடித்தன.

உலகெங்கும் கிராக்கி இருந்ததால் ஜெர்மனில் உற்பத்தி குவிந்தது. ஒரு ஜெர்மன் தொழிற்சாலையில் 1955 இல் உற்பத்தியாகி தயாராகி நின்ற 3 இலட்சத்து 30 ஆயிரம் கார்களின் ஒரு தொகுதிதான் படத்தில். இதனால் வந்த லாபம் ஹிட்லரின் போர் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டது.

தற்போது பலரகத்தில் நவீனகார்கள் வந்துவிட்டாலும் இந்த பழைய காரின் அழகே தனிதான். 'ஓல்ட் இஸ் கோல்ட்'



படிப்பகம்

# சினிவிசிட்

## பொங்கலுக்கு வந்தவை

தைப்பொங்கல் வெளியீடுகளாக வந்துள்ள படங்களின் பட்டியல்:

பரம்பரை (பிரபு-ரோஜா), தாயகம் (விஜயகாந்த்- ரஞ்சிதா), திரும்பிப்பார் (சரவணன்-யுவராணி), டாப் ஹீரோ (பாலகிருஷ்ணா, சௌந்தர்யா), வான்மதி (அஜித்குமார்-சுவாதி), அம்மன் (சுரேஸ்-ரம்யாகிருஷ்ணன்), லவ்பேர்ட்ஸ் (பிரபுதேவா- நக்மா;, கிழக்கு முகம் (கார்த்திக்- ரேஷ்மா), அருவாவேலு (நாசர்-ஊர்வசி), கோயமுத்தூர் மாப்ளே (விஜய்-சங்கவி), மீண்டும் சாவித்திரி (ரமேஷ் அரவிந்த்- ரேவதி), கல்லூரி வாசல் (பிரசாந்த்-பூஜாபட்- அஜித்குமார்).

## மணியான விளக்கம்

மனிஷா கொய்ராலா தற்போது குடிப்பதை நிறுத்தி விட்டாராம். அமிதாப்பச்சனுடன் ஒரு படத்திலாவது நடித்துவிட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

இதற்கிடையே கோவாவில் நடந்த படப்பிடிப்பில் நானாபட்டேகருடன் மனிஷா தனியாக தங்கியது பற்றி கிசுகிசுக்கள் கிளம்பிவிட்டன.

அதற்கு மனிஷா சொல்லும் விளக்கம் பிரமாதமாக இருக்கிறது.

"எனக்கு அவர் நடிப்புப் பற்றி சொல்லிக் கொடுத்தார். அவருடன் விவாதித்துக் கொண்டு இருந்ததால் நேரம் போனதே தெரியவில்லை. அவருடன் நீண்ட நேரம் தங்கிவிட்டேன். ஏன் தங்கினேன் என்று கூட பின்னர் நினைத்ததுண்டு. இதற்கு மேல் இது பற்றிப் பேசவேண்டாம். எனக்கு இப்போதுதான் 20 வயது தாண்டியுள்ளது. இப்போதுதான் முன்னணியில் வந்து கொண்டிருக்கிறேன். நான் வித்தியாசமான பெண். என் குணம் தெரிந்து பழக யாருக்கும் ஓரிரு ஆண்டு பிடிக்கும். நானாவுடன் நட்புண்டு. நெருக்கம் உண்டு. அவர் அருமையான மனிதர்."


இதுதான் மனிஷாவின் மணியான விளக்கம்.

## நிறுத்தமும்—தொ...

சிவாஜிகணேசன், மோகன்லால், நெப்போ...
மலையாளப் படம் 'சொர்ண சாமரம்' படப்பி...
தொடரும் உத்தேசம் இல்லையென்று தகவல்...
அதே நேரத்தில் சிவாஜியும், மோகன்...
புதிய படமொன்றுக்கு பூஜை போட்டுவிட்டார்...
மொழி' அதுவும் மலையாளப் படம்தான். க...
இயக்கம், பிரதாப் போத்தன். இசை; இளைய...
ஒலிப்பதிவு செய்யப்படவுள்ளன.

## வரம்...

தமிழ்த்திரைப்பட வரலாற்றில் முதன் முறையாக நாற்பது பேர் நாற்பது இடத்தில் மாய்ந்து, மாய்ந்து கதை பண்ணிக் கொண்டிருக்கி...
யாருக்கு வரம் தருவார் என்று தெரியவி...
கலைப்புலி தாணு ஏ.வி.எம், ஜீ. வெ...
திருக்கும் தயாரிப்பாளர்கள் பட்டியல் ரீல்...
ஆர். வீரப்பனின் சத்யா மூவிஸுக்கும்,...
புக்கள்...
நர் சு...
ரஜினி...
வார் எ...
இருக்க...



விஜயகாந்த்-ரோஜா
படம்: தமிழ்ச் செல்வன்



மனிஷா கொய்ராலா

## இரண்டு ஹீரோ

'அரவிந்தன்' படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்க இருந்தார் பார்த்திபன். இப்போது அவரது பாத்திரத்தை பெரிதாக்கி இரண்டாவது ஹீரோவாக மாற்றிவிட்டார்கள். ஆக, அரவிந்தனில் சரத்குமாரும், பார்த்திபனும் ஹீரோக்கள்.

தமிழ்வாணன் என்ற பெயருள்ள முரட்டு இளைஞராக நடிக்கிறார் பார்த்திபன்.

## வாடலாமா?

முத்துவில் நடித்திருந்தார் விசித்ரா. போனஸாக ஒரேயொரு கவர்ச்சி நடனமாவது விருந்தாகத் தருவார் என்று எதிர்பார்த்து ஏமாந்து போனார்களாம் அவரது ரசிகர்கள். ரசிக மகாஜனங்களின் வருத்தத்தைப் போக்க ராஜாளி படத்தில் கவர்ச்சி விருந்து படைத்திருக்கிறார் விசித்ரா. தாராள குணம்.

## சஞ்சய் தயாரா...

சஞ்சய்தத் இப்போது கெ...
நிலைக்கு திரும்பிக் மனக்ச...
காதலி ரியாவை மனக்...
நடந்து வருகின்றன.
அமெரிக்காவில்...
உயிருக்குப் போரா...
சஞ்சய்தத்தின் ம...
விரைவில் விவா...
விரைவில்...
நடைபெற...

## 95இல் நடிகைகளின் நிலவரம்

நடிப்புத் திறமையில் முன்னணியில் உள்ளவர்கள் மூவர். ராதிகா, ரேவதி, ஊர்வசி.

ஊர்வசி நடித்த ஐந்து படங்கள் 95 இல் வெளிவந்தன. 'நான் பெத்த மகனே', 'தாய்க்குலமே தாய்க்குலமே', 'புள்ள குட்டிக்காரன்' மாயா பஜார் 1995, ஆயுத பூஜை. ஆயுத பூஜை தவிர ஏனையவை தோல்விப்படங்கள். ஆனால் ஊர்வசியின் நடிப்பு சகல படங்களிலும் சூப்பர் ஹிட்.

ராதிகா நடித்த படங்கள், 'பசும்பொன்' உதவும் கரங்கள், ராசய்யா, 'நான் பெத்த மகனே', ராணி மகாராணி, 'வில்லாதி வில்லன்.' இவற்றில் ராதிகாவுக்கு நல்ல பெயர் கிடைத்தாலும், படங்கள் ஹிட்டாகவில்லை.

ரேவதிக்கு மூன்று படங்கள். 'அவதாரம்' படம் படு தோல்வி. ரேவதியின் நடிப்புக்கு மகாவரவேற்பு. 'தொட்டாச்சிணுங்கி' ரேவதிக்கு வெற்றிப்படம்.

கவர்ச்சி விருந்து படைக்கும் மின்மினி நடிகைகளில் நக்மா மூன்று படங்களில் நடித்தார். ரோஜாவுக்கு ஆறு படங்கள்.

மீனாவின் காட்டில்தான் மழை. ஆறுபடங்கள். 'முத்து' 'மாமன் மகள்' இரண்டும் வெற்றிப் படங்கள்.

குஷ்பு எட்டுப் படங்களில் நடித்தார் 'தேடிவந்த ராசா' வெற்றி பெற்றது. குஷ்புவுக்கு நிகராக எட்டுப் படங்களில் நடித்தார் ரஞ்சிதா. 'மக்களாட்சி', 'கர்ணா' இரண்டும் வெற்றிப் படங்கள். எனினும் ரஞ்சிதாவுக்கு இறங்கு முகம்தான்.

வினிதா நடித்தது ஐந்து படங்கள். அவரது நிலையும் பரிதாபம்தான்.

சங்கீதாவுக்கு மூன்று படங்கள். 'சீதனம்' படுதோல்வி. எல்லாமே என் ராசாதான் வெள்ளிவிழா.

சங்கவி கவர்ச்சிப்புயல். 'லக்கிமேன்' 'விஷ்ணு' இரண்டும் நன்றாக ஓடவில்லை என்பதால் கவலையில் இருக்கிறார்.

சுகன்யா, ஹீரா, கனகா, கஸ்தூரி, பானுப்பிரியா, சௌந்தர்யா, யுவராணி ஆகியோரும் முகம் காட்டினார்கள். இவர்களில் யாருக்குமே திருப்பு முனையில்லை.

## ரகுமான் இசையில்

ஏ.ஆர்.ரகுமான் கடவுளின் குழந்தை என்று பாராட்டியிருந்தார் ரஜினிகாந்த். ரங்கீலா படத்திற்கு பின்னர் இந்தியில் நிறைய வாய்ப்புக்கள் வந்தன. நான்கு படங்களை மட்டுமே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இந்தியன், ஆனந்தம், காதல் தேசம், லவ்ஸ்டோரி, மிஸ்டர் ரோமியோ, மின்சாரக் கனவு ஆகிய தமிழ் படங்கள் ஏ.ஆர்.ரகுமான் இசையில் வளருகின்றன.

ரகுமானுக்கு புத்தாண்டு பரிசாக கிடைத்த பெண் குழந்தைக்கு இன்னும் பெயர் சூட்டவில்லை. இசையமைப்பதில் மட்டுமல்ல, பெயர் வைப்பதிலும் மெதுவாகத்தான் இருக்கிறார்.



விக்னேஷ்-சுவலட்சுமி
படம்: வாணி மஹால்



ஜுஹி

## காதோடு சொல்லுகிறோம்

ரஞ்சித நடிகை மாவீரன் பெயர் கொண்ட நடிகருடன் ராசியாகியிருக்கிறார். நடிகருக்கே மார்க்கெட் ஆட்டம் கண்டுள்ள நிலையில் ராசியாகி என்ன பயன் என்று கேலி செய்கிறது விஷய மறிந்த சினிமா வட்டாரம்.

இளையதிலகத்தை சந்தித்து மனம்விட்டுப்பேச தூதுவிட்டாராம் 'பூ' நடிகை. தூது சென்றவருக்கு திலகம் வீட்டில் நல்ல சாத்துப் படி கிடைத்ததாம். நடுங்கிப்போயிருக்கிறார் 'பூ' நடிகை.

பம்பாய் வரவுகளின் போட்டியை சமாளிக்க புதிய தந்திரங்களில் இறங்கத் தொடங்கிவிட்டார்களாம் கோடம்பாக்கம் நடிகைகள். தயாரிப்பாளரையும், இயக்குநரையும் மனம் கோணாமல் கவனிப்பதும் அதில் அடக்கமாம். 'சங்க' நடிகை முன்னணியில் இருக்கிறார்.

பம்பாயில் கொடி பறக்காமல் போனதால் திரும்பிவந்த ஹீர நடிகை மீண்டும் 'சர' நாயகனோடு சமரசமாக விரும்பினாராம். இனி அந்தப் பேச்சுக்கே இடமில்லை. பட்டதெல்லாம் போதும் என்று ஒரேயடியாகச் சொல்லிவிட்டாராம் 'சர' நாயகன்.

'பா' இயக்குநரை 'ரோஜ' நடிகை புகழ்ந்து தள்ளிக் கொண்டிருக்கும் விவகாரம் தொடர்ந்து புகைகிறது. மணியான இயக்குநர் நெஞ்சில்தான் புகைச்சல். ஆனால் நடிகையோ புகழ்வதை விட்டபாடில்லை.

## எச்சரிக்கை

போர்த்திக் கொண்டு நடித்தது போதும். கொஞ்சம் அப்படி இப்படி நடித்தால் தான் தமிழ் பட ரசிகர்களிடம் தங்கமுடியும் என்று சங்கீதாவை எச்சரித்து விட்டனராம் பெரும் புள்ளிகள். சீதனம் படம் மண்ணை கவ்வியபின்னர்தான் இந்த எச்சரிக்கை. ம்ஹும், சங்கீதா துணியை இழக்கும் உத்தேசத்தில் இல்லையாம்.

## ரஜினியின் துப்பாக்கி

நடிகர்களில் துப்பாக்கி லைசென்ஸ் வைத்திருப்பவர்கள் கமல்ஹாசன், சரத்குமார். தற்போது ரஜினியும் துப்பாக்கி வைத்திருக்கிறார். எல்லாம் ஒரு தற்பாதுகாப்புக்குத்தான்.

ஜெயலலிதாவின் எதிரிகள் எல்லோரும் தாக்கப்படுவது வழக்கம் என்பதால் ரஜினியும் தயாராக இருக்கிறார்.

## முடிவில் மாற்றம்

'வாணி மஹால்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார் சுவலட்சுமி. 'அரவிந்தன்' படத்தில் இரண்டு கதாநாயகிகளில் ஒருவராக நடிக்க வாய்ப்பு வந்தது. இரண்டு கதாநாயகிகளில் ஒருவராக நடிக்க மாட்டேன் என்று சொன்னதை மூட்டை கட்டி வைத்து விட்டு நடிக்க சம்மதித்துவிட்டார். நாயகன் சரத்குமாரல்லவா.


தினமுரசு
ஜன.28–பெப்.03,1996

www.padippakam.com

## சபதம்

ஜூகி சாவ்லாவுக்கு இந்தியில் நம்பர் 1 ஆகும் வாய்ப்பு இருந்தது. ஸ்ரீதேவி விட்ட இடத்தை பிடிக்கலாம் என்று படாத பாடுபட்டார். மாதுரி டிக்ஷித் முந்திக்கொண்டார். மனிஷா கொய்ராலா இரண்டாவது இடத்திற்கு போட்டி போடுகிறார். ஜூகி சாவ்லா வெறுத்துப் போய் இருக்கிறார். எப்படியும் முன்னேறிக் காட்டுவது என்று சபதம் எடுத்திருக்கிறாராம்.

## இரண்டாவது இந்தியன்

இந்தியன் படத்தில் கமலுக்கு ஜோடியாக நடிக்கிறார் மனிஷா கொய்ராலா. இந்தியில் தர்மேந்திரா தயாரிக்கும் படம் ஒன்றின் பெயரும் 'இந்தியன்'. அதிலும் கதாநாயகி மனிஷா கொய்ராலாதான். கதை மட்டும் வேறு. பெயர் ஒன்று.

சோனாலிக்கு போகவிருந்த வாய்ப்பு மனிஷாவுக்கு கிடைத்துள்ளதாம்.

## மறுப்பு

ஜே.ஜேசுதாசையும், எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தையும் இணைத்து நடிக்கவைக்க பிரபல பட நிறுவனமொன்று முயற்சி செய்தது. நல்ல கதையையும் தயார் செய்து ஜேசுதாசை அணுகினார்கள். "நான் என்றைக்குமே பாடகனாக மட்டும் இருப்பேன்" என்று ஜேசுதாஸ் மறுத்துவிட்டார்.

## வணக்கம் மட்டும்தான்

முன்னாள் உலக அழகி சுஷ்மிதா சென்னுக்கு தமிழில் தெரிந்த ஒரேயொரு வார்த்தை, வணக்கம். 'ரட்சகன்' படத்தில், நடிக்கப்போகும் சுஷ்மிதா இதுவரை தமிழ் படங்கள் எதுவுமே பார்க்கவேயில்லை. ஹிந்தியில் மொழி மாற்றம் செய்யப்பட்ட 'பம்பாய்', 'காதலன்' படங்களை மட்டும் பார்த்திருக்கிறார். விரைவில் தமிழ் கற்றுக் கொள்ளப் போகிறார். சுஷ்மிதா சென் போட்டுள்ள முக்கிய நிபந்தனை "முத்தம் கொடுக்க மாட்டேன்."

## புத்தாண்டுக்கு பழம்

'ஞானப பழம்' படம் சித்திரைப் புத்தாண்டுக்குத்தான் திரைக்கு வருகிறது. பாக்யராஜ் ஞானப்பழம் கொடுத்திருப்பது சுகன்யாவுக்கு.

அதனையடுத்து 'வேட்டியை மடிச்சுக் கட்டு' படம் தயாராகப் போகிறது. கிரைம் கலந்த கதையாக இருக்குமாம். ஊர்வசியும் நடிக்கப் போகிறார். 'முந்தானை முடிச்சு' படத்தில் பாக்யராஜின் அறிமுகத்தால் வளர்ந்தவர்தானே ஊர்வசி. மறுபடியும் ஜோடி சேருவதில் ரொம்ப விருப்பத்தில் இருக்கிறார்.

ஏற்கெனவே பாக்யராஜ் தயாரித்து வெளிவந்துள்ள 'ஆயுத பூஜை' படத்திலும் ஊர்வசி நடித்திருக்கிறார். அதில் ஊர்வசியின் நடிப்பைப் பார்த்து விட்டு பாக்யராஜ் புல்லரித்துவிட்டாராம்.




## 95இல் நட்சத்திர நிலவரம் ரஜினி - கமல் முதல் வரிசை

தமிழ் படவுலகில் 95ம் ஆண்டில் அதிஷ்டக்காற்று வீசிய நடிகர்களின் பட்டியலைப் பார்ப்போமா?

இந்த ஆண்டும் தமது முதலிடத்தை தக்கவைத்துள்ளவர்கள் ரஜினியும், கமலும்தான்.

வசூல் நிலவரப்படி பார்த்தால் ரஜினிக்கு அடுத்த நிலையில்தான் வருகிறார் கமல்.

95இல் ரஜினி நடித்து வெளியான படங்கள் 'பாட்ஷா', 'முத்து'.

'பாட்ஷா' சூப்பர் ஹிட். 'முத்து' இப்போதும் வெற்றி நடை.

கமலுக்கு 95இன் ஆரம்பத்தில் வந்த சதிலீலாவதியும், ஆண்டுக் கடைசியில் வந்த குருதிப்புனலும் வெற்றியைக் குவித்துள்ளன.

இவர்களுக்கு அடுத்த நிலையில் இருப்பவர்கள் விஜயகாந்த், சத்யராஜ், பிரபு, சரத்குமார், அர்ஜுன், கார்த்திக், அரவிந்தசாமி, பிரபுதேவா, ராஜ்கிரண்.

பிரபுதேவாவும், ராஜ்கிரணும் 95இல் தலா ஒரு படம் மட்டுமே நடித்தனர்.

ராஜ்கிரணுக்கு 'எல்லாமே என் ராசாதான்' வெள்ளிவிழாப் படம். பிரபுதேவாவுக்கு பலத்த அடி- ராசய்யா படு தோல்வி கண்டது. என்றாலும் அவரது மார்க்கெட் சரியவில்லை.

அரவிந்தசாமி நடித்தது இரண்டு படங்கள் 'பம்பாய்', 'இந்திரா'. இதில் 'பம்பாய்' சூப்பர் ஹிட். 'இந்திரா' எதிர்பார்த்தளவுக்கு ஓடவில்லை. எனினும் தோல்விப்படமல்ல என்பது ஆறுதல்.

விஜயகாந்த் நடித்து மூன்று படங்கள் 95இல் திரைக்கு வந்தன. 'கருப்பு நிலா' 'காந்தி பிறந்த மண்', 'திருமூர்த்தி'. மூன்றும் வசூலில் பிரமாதப் படுத்தாவிட்டாலும், ஏமாற்றவில்லை.

சத்யராஜ் நடித்து வெளியான படங்களில் ஆண்டு இறுதியில் வெளியான 'மாமன் மகள்' வெற்றிப் படம். 'எங்கிருந்தோ வந்தான்' தோல்வியைத் தழுவியது. 'வில்லாதி வில்லன்' எதிர்பார்த்தளவு ஓடவில்லை. எனினும் சத்யராஜ் மார்க்கெட் ஆட்டம் காணவில்லை.

அர்ஜுன் படங்களில் கர்ணா வெற்றிப் படம். 'முதல் உதயம்' தோல்வி. 'ஆயுத பூஜை' சுமாரான வெற்றிப் படம்.

சரத்குமார் நடித்து வெளியானவை நான்கு படங்கள். 'கூலி', 'வேலுச்சாமி', 'நாடோடி மன்னன்',' ரகசியப் பொலீஸ்'. முதல் இரண்டும் தோல்விப்படங்கள். பின்னது இரண்டும் சுமார் ரக வெற்றி மட்டும்.

கார்த்திக் ஐந்து படங்களில் நடித்தார். ஐந்தும் தோல்வி. 'முத்துக்காளை' மட்டும் நல்ல படம் என்று பெயரெடுத்தது. வசூலில் காலை வாரிவிட்டது.

பிரபுவும் ஐந்து படங்களில் நடித்திருந்தார். 'பெரிய குடும்பம்' வசூல் கொடுத்தது. 'மிஸ்டர் மெட்ராஸ்' சுமார் ரக வசூல். ஏனையவை தோல்வி.

மூன்றாம் நிலை நடிகர்களான பிரசாந்த், நெப்போலியன், பார்த்திபன், பாண்டியராஜன், பாக்யராஜ், ஜெயராம், மம்முட்டி, ராம்கி, முரளி, டி.ராஜேந்தர், விஜய் ஆகியோரில் மம்முட்டி நடித்த 'மக்களாட்சி' மட்டும் சூப்பர் ஹிட்.

ராமராஜனுக்கு சென்ற ஆண்டு ராசியாக அமைந்தது. 'தேடி வந்த ராசா' வசூல் குவித்தது. இப்போது நான்கு படங்களில் நடிக்கிறார் ராமராஜன்.

## சூடான 2 சண்டை

இசைப்பயணம் படத்தின் படப்பிடிப்புக்கள் தொடங்கி ஒரு வருடமாகிவிட்டது. இப்போது விஜயசாந்தியை நடிக்கவைத்து படப்பிடிப்பு தொடர்கிறது.

துப்பறியும் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார் விஜயசாந்தி. இரண்டு சூப்பர் சண்டைக்காட்சிகளிலும் நடிக்கிறார்.

சண்டைக்காட்சிகளில் நடிப்பதற்கு முன்னர் ஒரு மணிநேரம் உடற்பயிற்சி செய்து உடலை சூடாக்கிக் கொள்வாராம் விஜயசாந்தி.

## 15கோடி தேவை

விஜயகாந்த் நடிக்க இருந்த ஆங்கிலப்படத்தின் பெயர் 'தி மே டே'. எங்கே படத்தைக் காணவில்லையே, கைவிடப்பட்டுவிட்டதோ என்று கேட்டால், "இல்லை" என்கிறார் இப்ராகீம் ராவுத்தர். தயாரிப்புச் செலவாக 15 கோடி ரூபா தேவை. அதற்காகத்தான் தாமதம் என்கிறார். பணம் எப்போது கிடைக்கும், படம் எப்போது தொடங்கும்?

தற்போது வெளியாகியுள்ள 'தாயகம்' படத்தின் கதையை எழுதியதும் இப்ராகீம் ராவுத்தர்தான். தயாரிப்பும் அவரே. அடுத்து தயாரித்துக்கொண்டிருக்கும் படம் 'உளவுத்துறை.'

'வோட்டர் வேல்ட்' படத்தைப் போல ஆறு ட்ரக் டிஜிடல் சவுண்ட் சிஸ்டத்தில் பிரமாண்டமாக தயாராகும் படம் 'உளவுத் துறை.'

## மினி சினி

*பிரபு நடித்த 'பெரிய குடும்பம்', பொங்கலுக்கு வெளியான 'பரம்பரை' ஆகிய படங்களை இயக்கியுள்ள கே.எஸ்.ரவிக்குமார், மீண்டும் பிரபு நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

*கேயார் முதன் முறையாக இயக்கிய படம் 'ஈரமான ரோஜாவே'. தற்போது இயக்கிவரும் படம் இரட்டை ரோஜா. இதற்கு அடுத்ததாக இயக்கும் படத்திற்கு 'காதல் ரோஜாவே' என்று பெயர் வைத்துள்ளார்.

*ராம்கி-ரஞ்சிதா இணைந்து நடித்த 'தொட்டில் குழந்தை' படத்திற்குப் பின்னர் 'ப்ரியாவின் காதலன்' என்ற படத்தை இயக்கித் தயாரிக்கிறார் நட்சத்திர இயக்குநர் எஸ்.பி.முத்துராமன்.

*நெப்போலியன் புதிதாக நடிக்கும் படமொன்றிற்கு 'பகத் சிங்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இப்படத்தை 'செவத்தப்பொண்ணு' படத்தை இயக்கிய சந்திரகுமார் இயக்குகிறார்.

*பாரதிராஜா தயாரிப்பில் பாண்டியராஜன் இயக்கி நடிக்கும் 'சைவக் கொக்கு' படத்திற்கு முதலில் 'கற்புக்கரசன்', 'ரீல்மன்னன்' எனப் பெயர்கள்வைக்கப்பட்டு மாற்றப்பட்டன.

*மம்முட்டி-அரவிந்தசாமி நடிக்கும் 'புதையல்'என்ற படத்தை இயக்கி வரும் செல்வா, அடுத்து புதுமுகங்களான நவீன்-சிந்து நடிக்கும் 'கள்வன்' என்ற புதிய படத்தை இயக்கவிருக்கிறார்.

*பிரபுதேவா-நக்மா நடித்த 'லவ்பேர்ட்ஸ்' படத்தை அடுத்து விஜயகுமாரின் மகன் அருண்குமாரை கதாநாயகனாக வைத்துப் படமொன்றை இயக்கவுள்ளார் பி.வாசு.

*'நாளைய செய்தி', 'கலைஞன்' ஆகிய படங்களை இயக்கியவர் ஜி.பி.விஜய். இவர் தற்போது ராஜீவ் மேனனிடம் 'மின்சாரக் கனவு' படத்திற்காக உதவி இயக்குநராகப் பணிபுரிகிறார்.

*'பசும்பொன்' படத்தை தயாரித்திருந்த ஆனந்தி பிலிம்ஸ் நிறுவனம் அடுத்துத் தயாரிக்கும் படத்திற்கு கலைஞர் மு.கருணாநிதியின் மகள் கனிமொழி கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கப் போகிறார்.

*வி.சி.குகநாதன் இயக்கத்தில் நீண்ட காலத் தயாரிப்பில் இருக்கும் 'மைனர் மோசஸ்' விரைவில் 'மைனர் மாப்பிள்ளை' என்ற பெயரில் வெளிவர இருக்கிறது.

## சுவாதியின் காதல்

'வான்மதி' படம் வெளியாகியுள்ளது. அதனோடு வெளியாகியுள்ள மற்றொரு சமாச்சாரம் அஜித்குமார்- சுவாதி காதல் விவகாரம். படப்பிடிப்பின்போது வளரத் தொடங்கிய காதல் தற்போது செழித்து கிளை பரப்பிவிட்டதாம். சுவாதியிடம் கேட்டால், மறுக்காமல் புன்னகை மட்டும் பதிலாக வருகிறது. அதற்கு என்ன அர்த்தம்?

அஜித்குமார் இப்போதுதான் வளர்ந்து வருகிறார். வளர முன்னரே காதல் வளர்ந்து விட்டது. என்ன செய்யப் போகிறாரோ?






படிப்பகம்

www.padippakam.com

# காதுப் பிரச்சனையைக் கவனியுங்கள்



செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அல்லவா? குழந்தைகளின் காதைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமை. அவர்களுக்காக சில டிப்ஸ் இதோ:-

1. மருத்துவர் ஆலோசனையின்றி எந்த மருந்தையும் நீங்களாகக் குழந்தைகளுக்கு கொடுக்காதீர்கள். அது அவர்களது செவியைப் பாதித்து காது கேட்காத நிலைமை ஏற்படலாம்.

2. நிறைமாத கர்ப்பிணிகள் மிகவும் ஏற்பட்டாலொழிய எக்ஸ்-ரே எடுத்துக் கொள்ளக் கூடாது. வயிற்றிலுள்ள குழந்தையின் செவியை எக்ஸ்-ரே கதிர்கள் பாதிக்கக் கூடும். சிகரெட் புகையும் வயிற்றில் வளரும் குழந்தையின் செவியைப் பாதிக்கலாம்.

3. மருத்துவ ஆலோசனை பெற்று தடுப்பு ஊசிகளைத் தவறாமல் போட வேண்டியது அவசியம்.

4. குழந்தைக்குப் பாலூட்டும் போது சரியான பொஸிஷனில் வைத்து பாலூட்ட வேண்டும். நன்றாக மல்லாக்கப் படுக்க வைத்து பாலூட்டுவதால் கிருமிகள் இயூஸ்டேசியன் டியூப்பினுள் புக வாய்ப்பு இருக்கிறது.

5. குழந்தையின் காதை சுத்தம் செய்வதற்காக பின், தீக்குச்சி, பஞ்சு போன்றவற்றை காதினுள் விடாதீர்கள்.

6.குழந்தையின் காதில் எண்ணெய் விட்டு சுத்தம் செய்வது கூடவே கூடாது.

7.குழந்தைக்கு காதில் வலி ஏற்பட்டால் மருத்துவர் ஆலோசனை இன்றி காது மருந்து வாங்கிக் காதில் விடக் கூடாது.

8. எக்காரணம் கொண்டும் மிகுந்த கோபம் வந்தால் கூட குழந்தையின் காதில் அறையாதீர்கள். வாழ்நாள் முழுவதும் காது கேட்காத நிலை வரலாம்; எச்சரிக்கை.

9. அசுத்தமான தண்ணீரில் குளிக்கவோ, நீந்தவோ உங்கள் குழந்தையை அனுமதிக்காதீர்கள்.

10.குழந்தையை மம்ஸ், அம்மை, டி.வி. மெனிஞ்சைடிஸ் நோய் தாக்கினால், குணமானதும் காது சரியாகக் கேட்கிறதா எனப் பரிசோதிக்கவும்.

கீதா தெய்வசிகாமணி

# முகப்பருவை தடுக்க என்ன செய்யலாம்?

டீன் ஏஜ் பருவத்தின் மிகப்பெரிய தொல்லை எது தெரியுமா? முகப்பரு. முகப்பரு சிலருக்கு அதிகமாக வந்து முகத்தையே பாழ்படுத்தி விடுகிறது. முகப்பரு வராமல் தடுக்க சில எளிய யோசனைகள் இதோ:

1. முகத்தை அழுக்கு சேராதபடி சுத்தமாக வைத்துக் கொண்டாலே முகப்பரு வராமல் தடுக்கலாம். ஒரு நாளைக்கு நான்கு தடவைகளாவது முகத்தைச் சவர்க்காரம் போட்டு கழுவ வேண்டும்.
2. ஒவ்வொரு முறையும் சுத்தமான துவாயால் முகத்தைத் துடைக்க வேண்டும். அப்போது தான் முகத்தில் முகப்பரு வந்தாலும் பரவாமல் தடுக்கலாம்.
3.பழச்சாறு, பச்சைக் காய்கறிகள் போன்றவற்றை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். காய்கறிகளை வேக வைத்துச் சமைப்பதைக் காட்டிலும் பச்சையாக சாலட் தயாரித்து உண்பதே நல்லது. ஒரு நாளைக்கு ஒரு கப் பழச்சாறு அருந்த வேண்டியது அவசியம்.
4. தண்ணீர் அதிகமாகக் குடிக்காதவர்களுக்கே முகப்பரு நிறைய ஏற்படும். எனவே கொதித்தாறிய நீரை நிறையப் பருக வேண்டும். ஒரு நாளைக்கு பத்து டம்ளர் தண்ணீர் குடிப்பது நல்லது.
5.மலச்சிக்கல் இருந்தாலும் முகத்தில் அதிக பருக்கள் ஏற்படலாம். பழச்சாறு அருந்துவதாலும், தண்ணீர் நிறைய குடிப்பதாலும் மலச்சிக்கல் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளலாம்.
6. முகப்பரு வந்தால் மருத்துவர் ஆலோசனை பெற்ற கிறீம்களையே வாங்கி உபயோகிக்க வேண்டும். விளம்பரங்களைப் பார்த்தோ, பிறர் சொல்லவதைக் கேட்டோ நாமாக மருந்தை வாங்கி உபயோகிக்கக்கூடாது. சில மருந்துகள் சில தோல்களுக்கு அலர்ஜி (ஒவ்வாமை)யாக இருக்கக் கூடும்.
7.முகப்பரு வந்தால் தாமாகக் காய்ந்து உதிரட்டும் என விட்டு விடவேண்டும். கை வைத்துப் பிதுக்கி சுத்தம் செய்யக் கூடாது. அவ்வாறு செய்வதால் முகப்பரு பரவுவதுடன் தழும்பு ஏற்பட்டு முகத்தையே விகாரப்படுத்துகிறது.
8. முகப்பரு அதிகம் வருபவர்கள் அதிக காரம், எண்ணெய் சேர்த்த உணவுப் பொருட்களை உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.



9. வெண்ணெய், சொக்கலேட், ஐஸ்கிறீம் போன்ற பதார்த்தங்களை உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.
10. நீங்கள் என்னதான் முகத்தைப் பாதுகாத்தாலும் முகப்பரு நிறைய வருகிறதா? தகுந்த தோல் மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுங்கள்.

# முகத்துக்கு ஏற்ற முடியலங்காரம்

சிகை அலங்காரத்தில் அக்கறை உள்ளவரா நீங்கள். எந்த முகத்திற்கு எந்த சிகை அலங்காரம் பொருத்தமாக இருக்கும் என்பதை கீழே உள்ள படங்கள் விளக்குகின்றன.




# பாத்ரூமில் கல்யாணம்

தாய்வானில் லீவாங்ஃபெங்கும், சியூ



சியூகுய்யும் காதலர்கள். இவர்கள் இருவரும் பெரிய பணக்காரர்கள்: இரண்டு பேருமாகச் சேர்ந்து மத்திய தாய்வானில் உள்ள பார்க் ஒன்றில் மிகப் பெரிய பாத்ரூம் ஒன்றை ஒரு மில்லியன் டொலர் செலவில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வளவு செலவு செய்து எதற்காக ஒரு பாத்ரூம் என்றால், ஆடம்பர அலங்காரங்களுக்காகவாம். ஆடம்பரமும், அலங்காரமும் பாத்ரூமுக்கு எதற்கு?

இவர்களின் திருமணம் அந்த பாத்ரூமில் தான் நடைபெறப் போகிறதாம். இவர்களுடன் சேர்ந்து மேலும் ஐந்து தம்பதியருக்கு அந்த பாத்ரூம்களிலேயே திருமணம் நடத்தி வைக்கப்போகிறார்களாம். 'பாத்ரூமில் நடத்திய திருமணங்கள்' என்று கின்னசில் இடம் பெற வேண்டும் என்பதற்காக இப்படியொரு முயற்சி. எதற்காக பாத்ரூமைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?

"நாம் எல்லோரும் அடிக்கடி போய் வரும் இடம் அதுதானே? அங்கே திருமணம் வைத்துக் கொள்வதில் என்ன தப்பு?" என்றார்கள் இருவரும்.

தப்பே இல்லை சாமி. ஆளை விடுங்கள்.

# வேலன் ஸ்பெஷல்

## ஜோடிகள் தெரிவு

ஷங்காயில் ஒரு நிறுவனம் ஜோடிகளைத் தேர்ந்தெடுத்துத் தரும் சேவையை ஆரம்பித்திருக்கிறது. ஒரேயொரு நிபந்தனை என்னவெனில், இங்கே தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்பவர்கள் காதலில் தோல்வியடைந்திருக்க வேண்டும். காதலில் தோல்வியுற்று மனமுடைந்தவர்கள் இங்கே பதிவு செய்து கொண்டால், அவர்களுக்கு ஏற்ற ஜோடியைத் தேர்ந்தெடுத்துத் தரும் பணியை நிறுவனம் செய்கிறது. இதுவரை காதலில் தோல்வியடைந்த மொத்தம் இருநூறு பெண்கள் இங்கே பதிவு செய்து கொண்டிருக்கிறார்களாம். ஆனால் இதுவரை பத்துப் பேருக்கு மட்டும்தான் புதிய காதலர்கள் கிடைத்திருக்கிறார்கள்.

"வெளிநாட்டு ஆண்களும் முன்வந்தால் தான் காதலில் தேல்வியுற்ற பெண்களின் நொறுங்கிய மனதை மலர வைக்க முடியும்." என்கிறார் இதன் நிறுவனர்.

# ஐந்து கட்டளைகள்



மனக்கவலையைப் போக்க இந்த ஐந்து கட்டளைகள் உதவும்.

1. மகிழ்ச்சியாக இருக்க திட்டமிடுங்கள்.
2. பிறருக்கு உதவப் பழகுங்கள்.
3. அன்றாடம் உடற்பயிற்சி செய்யுங்கள்.
4. பிரகாசமான இடத்தில் இருங்கள்.
5.பயனுள்ள பணிகளையே மேற்கொள்ளுங்கள்.

ஸ்போர்ட்ஸ்

# உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி

## பெப்ரவரி 14 முதல் மார்ச் 17 வரை




ஆறாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் இம்முறை இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் நடைபெறுகின்றன.

இந்த வில்ஸ் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் டெஸ்ட் போட்டிகள் விளையாடும் அணிகளான இங்கிலாந்து, இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, இலங்கை, தென்னாபிரிக்கா, சிம்பாப்வே ஆகிய ஒன்பது நாடுகளுடன் கென்யா, ஹொலன்ட், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாட்டு அணிகளும் முதன் முறையாக உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்கின்றன.

பெப்ரவரி 11ம் திகதி இந்தியாவின் முக்கிய நகரங்களில் ஒன்றான கல்கத்தாவில் வில்ஸ் கிண்ண போட்டிகளின் துவக்க விழா நடைபெறுகிறது.

குறாப் 'A', குறாப் 'B' என இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு நடைபெறும் லீக் போட்டிகளின் கால அட்டவணை விபரங்கள் இதோ:

### குறாப் 'A'

| | | |
|---|---|---|
| பெப்ரவரி 16 | மேற்கிந்தியத்தீவுகள் எதிர் சிம்பாப்வே | ● ஹைதராபாத் |
| " 17 | இலங்கை எதிர் அவுஸ்திரேலியா | ▲ கொழும்பு |
| " 18 | இந்தியா எதிர் கென்யா | ● கட்டாக் |
| " 21 | இந்தியா எதிர் மேற்கிந்தியத் தீவுகள் | ● குவாலியர் |
| " 21 | இலங்கை எதிர் சிம்பாப்வே | ▲ கொழும்பு |
| " 23 | அவுஸ்திரேலியா எதிர் கென்யா | ● விசாகப்பட்டினம் |
| " 25 | இலங்கை எதிர் மேற்கிந்தியத் தீவுகள் | ▲ கொழும்பு |
| " 26 | சிம்பாப்வே எதிர் கென்யா | ● பாட்னா |
| " 27 | இந்தியா எதிர் அவுஸ்திரேலியா | ● பம்பாய் |
| " 29 | மேற்கிந்தியத் தீவுகள் எதிர் கென்யா | ● புனே |
| மார்ச் 01 | அவுஸ்திரேலியா எதிர் சிம்பாப்வே | ● நாக்பூர் |
| " 02 | இந்தியா எதிர் இலங்கை | ● டெல்லி |
| " 04 | மேற்கிந்தியத் தீவுகள் எதிர் அவுஸ்திரேலியா | ● ஜெய்ப்பூர் |
| " 06 | இந்தியா எதிர் சிம்பாப்வே | ● கான்பூர் |
| " 06 | இலங்கை எதிர் கென்யா | ▲ கண்டி |

### குறாப் 'B'

| | | |
|---|---|---|
| பெப்ரவரி 14 | இங்கிலாந்து எதிர் நியூசிலாந்து | ■ அகமதாபாத் |
| " 15 | தென்னாபிரிக்கா எதிர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | ■ ராவல்பிண்டி |
| " 17 | நியூசிலாந்து எதிர் ஹொலன்ட் | ● பரோடா |
| " 19 | இங்கிலாந்து எதிர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | ■ பெஷாவர் |
| " 20 | தென்னாபிரிக்கா எதிர் நியூசிலாந்து | ■ பைசாலாபாத் |
| " 22 | இங்கிலாந்து எதிர் ஹொலன்ட் | ■ பெஷாவர் |
| " 24 | பாகிஸ்தான் எதிர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | ■ குஜ்ரன் வாலா |
| " 25 | இங்கிலாந்து எதிர் தென் ஆபிரிக்கா | ■ ராவல் பிண்டி |
| " 26 | பாகிஸ்தான் எதிர் ஹொலன்ட் | ■ லாகூர் |
| " 27 | நியூசிலாந்து எதிர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | ■ பைசாலாபாத் |
| " 29 | பாகிஸ்தான் எதிர் தென்னாபிரிக்கா | ■ கராச்சி |
| மார்ச் 01 | ஹொலன்ட் எதிர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | ■ லாகூர் |
| " 03 | பாகிஸ்தான் எதிர் இங்கிலாந்து | ■ கராச்சி |
| " 05 | தென்னாபிரிக்கா எதிர் ஹொலன்ட் | ■ ராவல்பிண்டி |
| " 06 | பாகிஸ்தான் எதிர் நியூசிலாந்து | ■ லாகூர். |



### கால் இறுதிப் போட்டிகள்

1. மார்ச் 09- குறாப் 'A'யில் முதலாவது இடம் பிடித்த அணி எதிர் குறாப் 'B'யில் 4வது இடம் பிடித்த அணி ■- பைசாலாபாத்.

2.மார்ச் 09- குறாப் 'A'யில் 3வது இடம் பிடித்த அணி எதிர் குறாப் 'B' 2வது இடம் பிடித்த அணி ●- பெங்களூர்.

3.மார்ச் 11-குறாப் 'A'யில் 4வது இடம் பிடித்த அணி எதிர் குறாப் 'B'யில் முதலாவது இடம் பிடித்த அணி ■- கராச்சி.

4.மார்ச் 11-குறாப் 'A'யில் 2வது இடம் பிடித்த அணி எதிர் குறாப் 'B'யில் 3வது இடம் பிடித்த அணி ●- சென்னை.

### அரை இறுதிப் போட்டிகள்

1.மார்ச் 13- கால் இறுதிப் போட்டியில் முதலாவது, இரண்டாவது இடம் பிடித்த அணிகள் ●- கல்கத்தா.

2.மார்ச் 14- கால் இறுதிப் போட்டியில் மூன்றாவது, நான்காவது இடம் பிடித்த அணிகள் ●- சண்டிகார்.

### இறுதிப் போட்டி

மார்ச் 17- அரையிறுதிப் போட்டியில் வென்ற இரு அணிகள் ■- லாகூர்.

●- இந்தியா ▲- இலங்கை ■- பாகிஸ்தான் குறியீடுகள் குறிப்பது போட்டி நடைபெறும் இடங்களின் நாடுகளையே.

# எமனின் சிரிப்பு

அவருக்குப் பல சரித்திரப் படங்களுக்கும், புராணப்படங்களுக்கும் நான்தான் மேக்கப் போட்டிருக்கிறேன்.

ஒரு படத்தில் அவருக்கு எமனுக்குரிய ஒப்பனை செய்யவேண்டி இருந்தது. அந்தப் பருத்த சிவந்த கம்பீரமான மேனி முழுவதும் கறுப்பு வர்ணத்தை நான் பூசியபொழுது வேறு வழியின்றி பொறுமையோடு சகித்துக் கொண்டார்.

தொடர்ந்து பயங்கரமான தோற்றம் தர விசேஷ வர்ணங்களை பூசிய பொழுது, "என் உயிரை வாங்குகிறீர்களே பீதாம்பரம்?" என்றார் வேடிக்கையாக. உடனே நான், "நீங்கள் அல்லவா எமன்? நான் எப்படி உங்கள் உயிரை வாங்க முடியும்?" என்றேன். ஏற்றுக்கொண்ட எமன் வேடத்திற்கு ஏற்ப பயங்கரமாகச் சிரித்தார்.



மரணமில்லாத கலைஞர் என்.ரி. ராமராவ்

-ஒப்பனையாளர் பீதாம்பரத்தின்
-நினைவுக்குறிப்பிலிருந்து.


# தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 23

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கபடுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



வாரம் ஒரு பட்டுச் சேலை S

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி:03-02-1996




படிப்பகம்

www.padippakam.com

# தேன் கிண்ணம்

## மனதைப் பாருங்கள்!

இன்னும்
இந்த பூமி
கறுக்க வேண்டாம்.

துயரம்
கருக் கொண்டு
விழிகள்
மழை பெய்தது போதும்.

இதுவென்ன
முடிவில்லாத இரவா?

எரிந்து
அலதியைக் கரைத்துவிட்டு
யார்.....
யாருக்காக.....
எதற்காக வாழப் போகின்றோம்?

தோலை
உரித்துக் கொண்டு
வெய்யிலில்
எத்தனைகாலம் காய்வது?

புகைந்து
சாம்பலான கனவுகளை
மீண்டும்
மீட்க வேண்டாமா?

புதைந்து
சவடு தெரியாமல் போன
சந்தோசங்களை
எப்போது காண்பது?

விடிவுக்கு
விரக்தியென்றால்
முடிந்து கொண்டிருப்பது
எங்கள்
சுவாசங்களல்லவா?

புன்னகை மலர்ச்சி பூசி
இதயத்தை அலங்கரிக்க
எத்தனை ஆசை!

நாம்
முடங்கிக் கிடப்பது
முட்டை
இட்டுக்குள்தான்!

புறப்படுங்கள்
புதிய குஞ்சுகளாக!

மனதை மட்டும்
சிலுவையில்
அறைந்துவிட்டு
வெறும் கூடுகளாக நாம்!

கோடை
இரவு
இங்கு மட்டும்!
இது
கல்லில் எழுத்தா?

மாற்றமே
ஏமாற்றத்தில்!
இழுத்துவா
சூரியனை..!
விடியல்
கொடி ஏற்று!

இந்த
கோடையினை
கொன்றுவிட்டு
மாரிகாலத்தை
மடியில்வை!

இந்த
நீண்ட இரவு
பிரிந்து செல்ல
சூரியனைப் பிடுங்கி
இங்கே நடு!
காலத்தை
களங்கப்படுத்திய குற்றம்
சந்ததியை
தீண்டுமுன்.

மலர்களை
எறிந்துவிட்டு
நூலை மட்டும்
கழுத்தில் போட்டால்
மாலையாகிடுமா?

பற்கள் பழுதானால்
பொய்ப்பற்கள்
கட்டிக் கொள்ளலாம்.
முரசையே
சிதைத்துவிட்டால்
சரி செய்வது எப்படி?

மனதை இழுத்து
போர்த்திக் கொண்டு
விடிகிறதா என்று
வானத்தைப் பார்க்காதீர்கள்.
மனதைப் பாருங்கள்!

நிந்ததாசன்.

## தங்கைக்கோர்! கவிதை

பவுண் விலை போல்
உன்-
பெறுமதி பெரிது!
*
குரும்பெட்டிக்கோதுபோல்
சுருண்டு
குண்டு மணிபோல்
சிவந்த உன்
உதடுகளுக்கிடையிலிருந்து
உதிர்ந்து விழுவது
வார்த்தைகளல்ல,
வைரக்கற்கள்!
*
பழுப்பில் போட்ட
தங்கம் போல்
உன் நிறத்திற்கு
பிரகாசம் அதிகம்!
*
நாட்டிய மாடிக்
கொண்டே
நடக்கும்- உன்
நடையும்
24 கரெட்!
*
உன் புன்னகையும்
தங்கத் தண்ணீரில்
நனைந்திருக்கிறது!
*
நீ பர்தாவுக்குள்
பதுங்கிக் கொள்!
காற்றும்,
சூரிய ஒளியும்
உன்னில் உரசி
உன் அழகை
பறித்துக் கொள்ளலாம்!
*
அவசரப்பட்டு
வெள்ளிகளின்
விண்ணப்பங்களுக்குள்
விழுந்து விடாதே!
*
உன்
பெயர்
இன்னொரு பெயருடன்
இணைத்துப்
பேசப்படும்போது
உன் தரம்
20, 18 என்று....
குறைக்கப்படலாம்!
*
பவுண் விலைபோல்
உன்
பெறுமதி பெரிது!
*
தங்கமே!
பொறுத்திரு..!
உன்னில்
ஒரு மாணிக்கத்தைப்
பதிக்கிறேன்!

மீராவோடை எஸ்.நஸீம்.

## வியப்பான விளம்பரங்கள்

என்னை வீண்
விரயம் செய்யாதீர்கள்!
-தண்ணீர்-

எங்களை தொந்தரவு
செய்யாதீர்கள்!
-மிருகக்காட்சிசாலை
மிருகங்கள்-

வீட்டுக்காரரின் அனுமதியுடன்
வாருங்கள்.....!
பதுங்கிக் கொண்டு வராதீர்கள்!
நன்றியுள்ள -நாய்கள்-

என்னைத் தொடாதீர்கள்!
-மின்சார ட்ரான்ஸ்போமர்-

போகும் போது
பூட்டிவீட்டுப் போங்கள்!
-படலை-

ஐயோ! எங்களைக் கழுவுங்கள்
-தூசியோடு ஓடித்திரியும் பஸ் வண்டிகள்-

ஒருதரம் அழுக்கினால் போதும்!
-மின்சார பெல்-

ஜே.எஸ். மரியதாஸ்-பாலையூர்.

## தவறு

அவள்,
தோழியைப் பார்க்கத்தான்
திரும்பினாள்.
••
அவளைக் காணத்தான்
அடிக்கடி
என் வீட்டு வீதியில்
வந்து போனாள்.
••
சிரித்தது
அவள் சொன்ன
கதை கேட்டுத்தான்.
••
அழுததும்
அவளுக்காகத்தான்.
••
காகம் இருந்தது
பழமே விழவில்லை.
பனைமரமே சாய்ந்ததாக
கனவு கண்டது
என் மனது!!

அ.டக்ளஸ் ஜெய சேகரன்,
வவுனியா.



## கறுப்பு இரத்தம் வீரியம் பெறட்டும்

எங்கள்
மலைகளின்
அடிமைச் சேரிகளின்
அவலங்களை கிளர்ந்தெழுந்தால்
உலகெங்கனும் உன் பெயர்
வியாபித்திருக்கிறது!
⇨ ⇨
நண்பனே!
எங்கள் தேசியத்தின்
குரலையும் சேர்த்து
நீ
செதுக்கிய சாதனைகள்
'கிரிக்கெட்' உலகில்
பொன் எழுத்துக்களால்
பொறிக்கப்படப் போகின்றன.
⇨ ⇨
முத்தையா முரளிதரனுக்காக
இனம், மதம், மொழி கடந்த
தேசிய- சர்வ தேசிய குரல்களுடன்
நாம் சங்கம மாகின்றோம்!
நீ நிரபராதி..!

வெள்ளைத் தோல்களில் சில
நல்ல தோல்கள்!
உனக்காகவும் குரல்
கொடுக்கின்றன.
கறுப்புத் தோலுடன்,
கவாஸ்கர், ரிச்சர்ட்சன்-
நீ நிரபராதி!
நீ நிரபராதி!
⇨ ⇨
நண்பனே!
வெள்ளை ஓணான்களின்
மாமிச பசிக்கு நீ
குற்றுயிராக்கப்படுகிறாய்!
எமர்சன், கெயர்
வெள்ளையின, வெறித்தனத்தின்,
கூட்டுப் பிரசவங்கள்...
ஐ.சீ.சீ இன்னொரு காலனித்துவ
கட்டமைப்பு.
நீ...தி கேட்கவா முடியும்!
⇨ ⇨
நண்பனே!
எங்கள் கறுப்பு இரத்தத்தின்,
வீரியமாய் நீயிருப்பாய்!
⇨ ⇨
ஆம்!
வெண்ணிற ஓநாய்களை மீறி
உன்கறுப்பு இரத்தம்
வீரியம் பெறட்டும்
வரலாறு உன்னை
விடுதலை செய்யும்!

பொன்.பிரபாகரன், மலையகம்.

## தூரமான காதலிக்கு!....

அன்பே!
உன் புன்னகை மழை
இன்றி, வெடித்துக் கிடக்கிறது
என் மனத்தோட்டம்!
○○
உன்னைக் கண்டு
யுகங்கள் பல
கடந்து விட்டதைப் போல்
என் டயறியின்
பக்கங்கள் வெறுமையாய்
கிடக்கின்றன.
○○
நீ தூரமான போது,
உடைக்கப்பட்ட எனது
சந்தோஷச் சிறகுகள்,
கவிதை வானைவிட்டு
என்னை தூரமாக்கி விட்டன!
○○
உன்னைத் தவிர்த்து
கவிதையொன்றுக்கு எப்படி
நான் உருக்கொடுப்பேன்....?
○○
நீயும் நானும் இருப்பது
பார்க்க முடியாத தொலைவுதான்!
எனினும் நம்
மனக் கண்ணாடிகள்
பிரதிபலித்துக் கொண்டிருக்கும்
பிம்பங்களை எப்படி
ஏமாற்றுவது....?
○○
அன்பே!
நான் தூரமாகியது
உடலால் மட்டும்தான்;
என் உயிர்!...
அது எப்போதும்
உன்னைச் சுற்றியே
உருகிக் கொண்டிருக்கும்.

காத்தான்குடி- டி.எம்.சுபைர்கான்.

## கண்களால் பூத்த கவிதை

மூடிக்கிடக்கும்
இமைக் குழிக்குள்
நிலா சுரக்கும்.
...
மஞ்சள் வண்ண
தண்டுகளின்
காம்பில்
மரங்கொத்தியின்
சொண்டுகள்
முளைக்கும்.
...
விழாக்காலத்து
தேர்போல
ஒரு நளினம்
ஒவ்வொரு
உயிரணுக்களிலும்
தன் ஈர உதட்டால்
காயப்படுத்தும்.
...
அட்சய பாத்திரமாய்
அமுதூறிய
ஹிருதய கிண்ணத்தில்
ஒரு துளி
விஷம் கலந்ததால்
கண்ணீர் சுனையொன்று
ஊற்றெடுக்கும்.
...
வசந்தத்தில்
குளித்தெழும்பிய
இளமை,
ஜீவிதம் இல்லாமல்
தன்
ஆடைகளை இழந்து
அம்மணமாகும்.
...
இதய முனிவரின்
தவ வலிமையால்
மேனகைக் காடுகளில்
விசுவாமித்திரர்கள்
முளைத்தெழுவார்கள்!
ஒரு...
இந்திரலோகத்து
காற்றில்
மேனகைக் காடுகளில்
விசுவாமித்திரர்கள்
பிடுங்கி வீசப்படுவார்கள்.

சம்மாந்துறை- ஏயெம்மே நிஸாம்.

## கண்மூடிப் பூனைகள்

நாடு
சமநிலைப்படுகிறது.
வடக்கு-தெற்கு

செயற்கை அழிவு
அங்கே..!
இயற்கை அழிவு
இங்கே...!

நியாயம் கூற
வரவில்லை
சிந்திக்கச் சொல்கிறேன்!

ஏசி அறையில்
ஒசிக் காசில்
ஆலோசனைக் கூட்டம்.

அறியாதவர் சாகிறார்கள்.

எங்கும் உயர் மட்டம்
நிம்மதியாய்...
அடிமட்டம்
கலங்குகிறது.

21ம் நூற்றாண்டில்
வெளிநாட்டவர்
இலங்கையில்;
இங்குதான்
எவரும்
இருக்க மாட்டாரே?

சுபாவரன், கண்டி.

## ஏன் பிறந்தாய்?

ஏன் மகனே நீ பிறந்தாய்,
ஏழை எந்தன் வயிற்றினிலே?
தேன் தமிழை பேசிடவே
சிரித்தேன முளைத்து வந்தாய?.

கருவறையில் நீ வளர,
கஞ்சிக்கும் விதி யற்று
பெரும்பாடு பட்டேதான்
பெற்றேன் சிறு மகனே.....

வந்து வீழ்ந்த ஷெல்வீச்சின்
மத்தியிலும் உயிர் தப்பி,
நொந்து ஓடிக் காடுகளில்
நுழைந்து சுமந்து வந்தேன்.....

சூரியனாய் சுடர் விழிகள்
சுழன்றுவர முகம் நிமிர்த்தி,
போரினிலே குதித்தாடும்
பூமியிலே ஏன் வந்தாய்?

சேர சோழ பாண்டியர்கள்
சேர்ந் தொன்றாய் வாழாத
பாரினிலே ஏன பிறந்தாய்...?
பற்றி வயிறு எரிகிறதே!

-கேணிப்பித்தன்-

## தடுமாற்றம்

எனக்கென்ன
வேலை
என்கிறாயா?
நீ
வார்த்தை
தீயினால்
ஏற்படுத்திய
எரி
காயங்களுக்கு.

மருந்து
போடத்
தெரியாமல்
அவதிப்
பட்டுக்
கொண்டிருக்கிறேன்!
••
சோகங்களும் மனச்
சுமைகளுமே
தடம்பதித்த

இறந்தகாலத்தை
சொப்பனமாக்க
நினைத்து
அதில்
தோல்வி
கண்டு
கொண்டிருக்கிறேன்!
••

என்
உணர்வு
சிறகுகளை
நீ
ஒடித்துப்
போட்ட
ஞாபகம்

அடிக்கடி
என்
உள்ளத்தில்
வந்து
உட்கார்ந்து
கொண்டு
தொல்லைப்
படுத்துகிறது!
••



உன்னை
வெறுத்துவிட்டு
இருந்தாலும்,
மறக்க
முடியவில்லையே

என்னை
நானே வெறுத்துக்
கொண்டிருக்கிறேன்!

செல்வி.
சுப்பரமணியம் வாணீஸ்வரி,
அப்பர் கலஹா.

# இந்த வாரம் உங்கள் பலன்

( 28.01.96 முதல் 03.02.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

மகரம் -சூரியன், செவ்வாய்.
கும்பம் -சனி, வெள்ளி.
மீனம் -கேது.
கன்னி -இராகு.
தனு -வியாழன, புதன்,

★ சந்திரன்-மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| மீனம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு-தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 7 மணி |
| திங்கள்-புதிய முயற்சி, பொருள் பேறு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| புதன்- துயர் நீங்கும், அதிகார விருத்தி. | மு.ப. 9 மணி |
| வியாழன்- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| மேடம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மேன்மை, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| வியாழன்-உறவினர் உதவி, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | மு.ப. 9 மணி |
| சனி- துயர் நீங்கும், காரிய சித்தி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்:

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| இடபம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மனக் கலக்கம். | காலை 6 மணி |
| செவ்வாய்- வீண்துயர், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- புதிய முயற்சி, கௌரவம். | காலை 7 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், வெளியிட வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- கௌரவக் குறைவு, மனக்கலக்கம். | காலை 6 மணி |
| சனி- அந்நியர் சகவாசம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| மிதுனம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பணச் செலவு. | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனச் சந்தோஷம். | காலை 6 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| புதன்- புதிய முயற்சி, இனசன நன்மை. | காலை 7 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| சனி- பணக் கஷ்டம், தொழில் நிலை மந்தம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| கும்பம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | மு.ப. 9 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் விரயம், ஆடம்பரச் செலவு. | காலை 7 மணி |
| புதன்- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பி.ப. 1 மணி |
| வியாழன்-உயர்ந்த நிலை, தொழில் பேறு. | காலை 7 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், வெளியிடப்பயணம். | காலை 6 மணி |
| சனி- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-1

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| கர்க்கடகம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் முயற்சி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- மறைமுக எதிர்ப்பு, பணச் செலவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, துன்பம் நீங்கும். | காலை 6 மணி |
| புதன்- பணவரவு, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பொருள் விரயம். | காலை 6 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- இனசன நன்மை, செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| மகரம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பணச் செலவு. | காலை 7 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, மனக் குழப்பம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், துயர் நீங்கும். | மு.ப. 9 மணி |
| புதன் - பயனுள்ள செயல், மனமகிழ்ச்சி. | பகல் 2 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, பணக் கஷ்டம். | காலை 7 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- துயர் நீங்கும், தேகசுக நன்மை. | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| சிம்மம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- செய்தொழில் நன்மை, அந்நியர் சகவாசம். | காலை 7 மணி |
| புதன்- புதிய முயற்சி, தொழில் விருத்தி. | பி.ப. 2 மணி |
| வியாழன்-காரிய சித்தி, பெரியோர் வரவு. | காலை 7 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் மந்த நிலை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| தனு | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| புதன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்-பெரியோர் உதவி, முயற்சி தடை. | மு.ப. 9 மணி |
| வெள்ளி-புதிய முயற்சி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| விருட்சிகம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- மனக் கஷ்டம், பிரயாண மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| புதன்- காரியசித்தி, கௌரவம். | காலை 6 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், தூர இடப்பயணம். | பகல் 1 மணி |
| வெள்ளி- உறவினர் பகை, காரியக் கேடு. | காலை 7 மணி |
| சனி- வீண் முயற்சி, பணக் கஷ்டம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| துலாம் | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், உயர்ந்த எண்ணம். | பகல் 12 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். | மு.ப. 9 மணி |
| புதன்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், தொழில் கேடு. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- மனக் கலக்கம், உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| சனி- பிரயாண மிகுதி, துயர் அதிகம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| கன்னி | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் உயர்ச்சி, பொருள் வரவு. | காலை 6 மணி |
| திங்கள்- இனசன நன்மை, கௌரவக் குறைவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், பண விரயம். | காலை 6 மணி |
| புதன்- உறவினர் பகை, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, எதிர்பார்த்த நன்மை. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- காரிய சித்தி, கௌரவம். | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-1


படிப்பகம்






## மாலை நல்ல வேளை

வானில் வந்த சூரியன்
மறையும் நேரம் மாலையாம்;
பாடிப் பறந்த பறவைகள்
கூட்டைத் தேடும் வேளையாம்.

பாடு பட்ட உழவரும்
வீடு சேரும் மாலையாம்;
வேலை என்று சென்ற அப்பா
வந்து சேரும் வேளையாம்.



பாலர் நாங்கள் கூடியே
பாடி ஆடும் மாலையாம்;
தம்பி தங்கை எல்லோரும்
சேர்ந்து பேசும் வேளையாம்.

கை கால்கள் கழுவி இறை
புகழைப் பாடும் மாலையாம்;
பள்ளிப் பாடம் படித்திட
இனிய நல்ல வேளையாம்.

மிருது பாஷினி - பதுளை

கூட்டத்தில் கூடி நின்று
கூவிப்பிதற்ற லன்றி
நாட்டத்தில் கொள்ளா ரடீ!-கிளியே
நாளில் மறப்பாரடீ!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# மோதிரப் பொய்

ஓர் ஊரில் சின்னையா, பொன்னையா என்ற இரண்டு பணக்காரர்கள் வாழ்ந்தார்கள். இவர்கள் இருவரும் பணத்தை வட்டிக்குக் கொடுத்து காசு சம்பாதித்து வந்தனர்.

இவர்களில் சின்னையா ஆட்களுக்கு குறைந்த வட்டியில் பணம் கொடுத்து வந்தார். ஆனால் பொன்னையாவோ சின்னையா வாங்கும் வட்டியை விட இரண்டு மடங்கு அதிகமாக வாங்கி வந்தார்.

இதனால் பெரும்பாலானவர்கள் சின்னையாவிடம் மட்டும் கடன் வாங்கினர். பொன்னையாவுக்கு இது பொறாமையாக இருந்தது.

ஒரு நாள் பொன்னையா, சின்னையாவைச் சந்தித்து,

"நீ குறைந்த வட்டிக்குப் பணம் கொடுத்து என் வியாபாரத்தைக் கெடுக்கிறாய். நீ இப்படிக் குறைந்த வட்டிக்குப் பணம் கொடுக்கிறாயே! உன்னிடம் கடன் வாங்கியவர்கள் எல்லாரும் ஒழுங்காகப் பணத்தைத் தருகிறார்களா?" என்று கேட்டான்.

அதற்கு சின்னையா, "நான் நாணயமானவன். அதனால் எனது பணமும் நேர்மையான முறையில் வருகிறது. நீயும் அப்படி இருந்தால் உன் பணமும் திரும்ப வந்துவிடும்," என்றார்.


பொன்னையாவுக்குக் கோபம் வந்தது.

"நீ நேர்மையாக நடப்பதால் உன் பணம் உன்னை வந்து சேர்ந்துவிடுகிறது என்பது உண்மையானால் என்னிடம் ஆயிரம் ரூபாய் கடன் கொடு நான் அதைத் திருப்பித்தராமல் போனால் நீ எப்படி வசூலிக்கிறாய் என்று பார்ப்போம்," என்று சவால் விட்டுப் பேசினான்.

சின்னையா சிரித்தபடியே, "சரி நீ கேட்கிறபடியே நான் உனக்கு ஆயிரம் ரூபாய் கடன் தருகிறேன். அதற்கு ஈடாக நீ ஏதாவது ஒரு பொருளை என்னிடம் தரவேண்டும். ஆறுமாத அவகாசம். அது முடிந்ததும் என் நாணயத் திறமையால் உன்னிடமிருந்து என் கடனை வசூல் செய்து கொள்கிறேன். இதில் நான் வென்றால் நீ எனக்கு ஆயிரம் ரூபாய்தர வேண்டும். நீ வென்றால் நான் உனக்கு ஆயிரம் ரூபாய் தருகிறேன்," என்று பந்தயம் கட்டினார்.

பொன்னையாவும் அதற்குச் சம்மதித்து தன் விரலில் இருந்த தங்க மோதிரத்தைக் கழற்றி சின்னையாவிடம் ஈடாகக்கொடுத்து ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொண்டார்.

ஆறு மாதங்கள் முடிந்தது. மேலும் ஒரு மாதம் கழித்து பொன்னையாவே,



சின்னையாவைத் தேடி வந்தார்.

"ஏழு மாதங்களாக உன் பணம் என்னிடம் இருக்கிறதே, நிபந்தனைப்படி; வசூல் செய்ய உன்னால் முடியவில்லையே!" என்றார் பொன்னையா.

சின்னையா சிரித்தார். "என் பணத்தை நீ எப்போதோ திருப்பிக் கொடுத்து விட்டாய்," என்றார்.

பொன்னையா திடுக்கிட்டு, "எப்போது? எப்படி?" என்று கேட்டார்.

"போன ஞாயிற்றுக்கிழமை சரவணன் என்பவன் மோதிரம் ஒன்றை அடகு வைத்து உன்னிடமிருந்து ஆயிரம் ரூபாய் கடனாகப் பெற்று வந்தது நினைவிருக்கிறதா?" என்று கேட்டார் சின்னையா.

"ஆமாம்!" என்றார் பொன்னையா.

"அந்த மோதிரம் உன்னுடையதுதான். அதை ஈடாக வைத்துப் பணம் பெற்று வரச் சொன்னது நான்தான்," என்றார் சின்னையா.

"இது எப்படி நியாயமாகும்? பந்தயப் படி நான் தோற்றுப் போனதற்காகக் கொடுக்க வேண்டிய ஆயிரம் ரூபாயை உனக்குத் தரப்போவதில்லை," என்றார் பொன்னையா.

"அவசரப்பட வேண்டாம். நான் கொடுத்து அனுப்பியது போலி மோதிரம். தங்க முலாம் பூசியது. உன்னுடைய அடகு மோதிரம் என்னிடம்தான் இருக்கிறது. ஆயிரம் ரூபாய் பந்தயப்பணத்தைக் கொடுத்ததும் அந்த மோதிரத்தைத் தருகிறேன்," என்றார் சின்னையா.

பொன்னையாவுக்கு வேறு வழி தெரியவில்லை. ஆயிரம் ரூபாயைவிட மோதிரத்தின் விலை அதிகம். எனவே ஆயிரம் ரூபாயை சின்னையாவிடம் கொடுத்து விட்டுத் தனது மோதிரத்தைத் திரும்பக் கேட்டார் பொன்னையா.

அதைப் பெற்றுக்கொண்ட சின்னையா, "ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பது சரிதான். சரவணன் உன்னிடம் கொடுத்தது உண்மையான தங்கமோதிரம்தான். உன்னிடமிருந்து பந்தயப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவே போலி மோதிரம் என்று பொய் சொன்னேன்." என்றார்.

பொன்னையாவுக்கு இப்போது தான் சின்னையாவின் நேர்மையும், புத்திசாலித்தனமும் புரிந்தது. அவர் சின்னையாவைப் பார்த்து,

"இனிமேல் வியாபாரத்தில் தங்களைப் போலவே நேர்மையும், நியாயமும் உள்ளவனாக இருப்பேன்" என்றார்.

## வாரம் ஒரு நாடு குவைத்

தலைநகர்- குவைத் நகர்
பரப்பு- 17,656 சதுர கிலோ மீட்டர்
மக்கள் தொகை- 18,00,000
மொழி- அரபிக், ஆங்கிலம்
எழுத்தறிவு- 71%
சமயம்- இஸ்லாம்
நாணயம்- குவைத் டினார்
தனி நபர் வருமானம்- 19,700 டொலர்

வரலாறு:

பிரிட்டனுடன் 1899 இல் ஏற்பட்ட ஒரு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பிரிட்டனின் பாதுகாப்பிற்கு உட்பட்டது. 1961ல் இவ் வொப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து குவைத்திற்குத் தன்னாட்சி அதிகாரம் கிடைத்தது. 1990 ஆகஸ்ட்டில் ஈராக் குவைத்தை ஆக்கிரமித்தது. ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையில் அமெரிக்கா உட்பட 28 நாடுகள் ஒன்று சேர்ந்து 1991 மார்ச்சில் குவைத்தை மீட்டெடுத்தன. பின்வாங்கும்போது குவைத்தின் எண்ணெய்க் கிணறுகள் பலவற்றிற்கு ஈராக் தீயிட்டது. மிகப்பெருமளவிலான அயல்நாட்டு நிதி உதவி கிடைத்ததால் பொருளாதாரச் சிக்கல் ஏதும் உண்டாகவில்லை. புனர்நிர்மாணப் பணிகள் நிறைவடைந்து வருகின்றன. 1992 அக்டோபரில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் எதிர்க் கட்சிகளுக்கு அறுதிப்பெரும்பான்மை கிடைத்தது. ஆளும் கட்சிக்கு உறுப்பினர்களை நியமனம் செய்ய முடியும். எனவே ஆட்சி மாற்றம் ஏற்படவில்லை.


பொருளாதாரம்:

விவசாயத்திற்குப் பயன்படும் நிலம் வெறும் 8 சதவிகிதமே. விவசாயப் பரப்பை அதிகரிக்க முயற்சிகள் மேற்



கொள்ளப்பட்டு வருகின்றன. எண்ணெய் வளம், படகு கட்டுதல், பெட்ரோ கெமிக்கல்ஸ் போன்ற தொழிற்சாலைகள் உள்ளன.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.02.1996.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 126
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு


## வர்ணம் தீட்டும் போட்டி இல: 124

பரிசுக்குரியவர்:
ஜநந்தினி. தெய்வேந்திரன்
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| இரா.கஜேந்திரன். மட்/மகாஜன கல்லூரி, மட்டக்களப்பு. | எ.பி.ரிஸ்வி அரபா வித்தியாலயம், அட்டாளைச்சேனை. |
| செல்வி.கி.திபதர்ஷனா சென்மேரிஸ் மகா/வி/பொகவந்தலாவ. | செல்வி. சக்திலிங்கம் கஜவதனா கதிரேசன் மத்திய கல்லூரி, நாவலப்பிட்டி. |
| ந.ரதீஸ்வரன் கார்மேல் பாத்திமா தேசிய கல்லூரி, கல்முனை. | பி.விஸ்வநாதன் உடப்புத் தமிழ் மகாவித்தியாலயம், புத்தளம். |
| செல்வி. நிரோஷா மாதவன், பெனிதுடுமுல்லை வீதி, நாவலப்பிட்டி. | பி.புனிதசாந்தனி கிரான்லி.த.பாடசாலை, அக்கரப்பத்தனை. |
| செல்வி. ஹம்சத்வனி சிவநாதன். அன்டர்சன் தொடர்மாடி, நாரகேன் பிட்டி. | ஹனிபா முகம்மது றஸ்மித்தீன் சம்ஸ் மத்திய கல்லூரி மருதமுனை. |

## இராமேஸ்வரம் கோவில்



* இராமேஸ்வரம் எங்கே இருக்கிறது?
இந்தியாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு சிறிய தீவுதான் இராமேஸ்வரம். தமிழ்நாடு மாநிலத்தில் இருக்கிறது.

* இந்தத் தீவிற்கு இராமேஸ்வரம் என்ற பெயர் வந்ததற்கு காரணம் என்ன?
இராவண சங்காரம் முடிந்து இலங்கையிலிருந்து திரும்பிய இராமபிரான் இந்த இடத்தில் வந்துதான் சிவனை வழிபட்டாராம். அதனால் தான் இதற்கு இராமேஸ்வரம் என்று பெயர் வந்தது.

*இந்தக் கோவிலைக் கட்டியவர் யார்?
சேதுபதி வம்சத்தைச் சேர்ந்த மன்னன் உதயணன் என்பவர்தான் இக்கோவிலைக் கட்டினார்.

*இந்தக் கோவில் எப்போது கட்டப்பட்டது?
பதினைந்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

*இந்தக் கோயிலின் மிகச் சிறந்த அம்சம் எது?
நாலாயிரம் அடி நீளத்தில் கட்டப்பட்டுள்ள ஆயிரங்கால் மண்டபம்தான் இக்கோயிலின் சிறப்பம்சம்.

## ஒரு வரிச் செய்திகள்

* மக்கள் தொகையில் மூன்றாவது மிகப் பெரிய நாடு அமெரிக்கா.
* இந்தியாவில் 85 சதவிகித குழந்தைகள் வீடுகளிலேயே பிறக்கின்றன.
* வண்ணத்துப் பூச்சிகள் தன் பின்னங்கால்களால்தான் சுவையை அறிகின்றன.
* கண்ணிற்குப் புலப்படாத ஒளியைக் கூட தேனியால் பார்க்க முடியும்.
* வானில் பறக்கும் விமானியின் கண்களுக்கு வானவில் முழு வட்டமாகத்தான் தெரியும்.
* நேபாள நாட்டில் மாலை நேரத்தில் மட்டுமே மழை பெய்கிறது.
* உலகம் முழுவதும் சுமார் 40 ஆயிரம் கொசு வகைகள் உள்ளன.
* பென்குயின் பறவையின் ஆயுட்காலம் 25 வருடங்கள்.
* காலில் காதுள்ள ஒரே உயிரினம் வெட்டுக்கிளி.
* கொம்பில் கண்ணுள்ள ஒரே உயிரினம் நத்தை.

## ஐ.நா. தகவல்கள்



* 1975ல் இரசாயன, உயிரியல் ஆயுதங்களைத் தடைசெய்க, கோரும் உலகக் கருத்தரங்கு தீர்மானம் நிறைவேறியது. இதற்கு மானத்தை மீறிய நாடுகளே அதிகம். சித்திரவதைகளைக் கண்டனம் செய்யும் பிரகடனம் ஒன்று பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டது. ஆயினும் அடக்கு முறைகளைத் தவிர்க்க முடியவில்லை.

* 1979ல் எகிப்து- இஸ்ரேல் சமாதானப் பேச்சுவார்த்தை துவங்கியது. இன்றும் இப் பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன.

## விடுகதைகளும் விடைகளும்

1.இரவெல்லாம் முழிப்பு, பகலெல்லாம் ஒளிப்பு அது என்ன?
2.ஒரு கேணியில் ஒரே ஒரு ஆமை அது என்ன?
3.காலிலே தூங்கும் கடிவாளக் குதிரை அது என்ன?
4.கையினால் பிடிபடாத கறுப்பு நிழற்கற்றை அது என்ன?
5.பச்சைப் பாம்பின் வாயிலே கல்லு. அது என்ன?
6.முடியை வெட்டினால் முழி தெரியும் அது என்ன?
7.அன்னைக்கு அகன்ற முகம், பிள்ளைக்கு உருண்ட முகம். அவை என்ன?
8.ஒற்றைக் கால் தபசிக்கு ஒன்பது கைகள். அது என்ன?
9.பூமிக்கடியில் வாழும் வெள்ளை மீன்? அது என்ன?
10.சிவப்பு மூக்குத்திக்கு சிரசிலே மறு. அது என்ன?

விடைகள்

1. நட்சத்திரம்
2. நாக்கு
3. செருப்பு
4. புகை
5. புடலங்காய்
6. நுங்கு
7. அம்மி, குளவி
8. மரம்
9. முள்ளங்கி
10. குண்டுமணி.

தொகுப்பு:
ஏ.அகல்யா, நுவரெலியா.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## பட்டுக்கோட்டை பிரபாகர்

# விலை குற்றம் 20



"நாளைக்கு அந்தப் பள்ளிக்குப் போகலாம்."

"சரவணகுமாருக்கு இதற்குள் எதுவும் நேர்ந்து விடக் கூடாதே என்று கவலையாக இருக்கிறது."

"அவன் உயிருக்கு எந்த ஆபத்தும் நிச்சயமாகக் கிடையாது. அவனை உபயோகிக்கத்தான் கடத்தி வந்தார்களே தவிர, கொலை செய்ய அல்ல. அதனால் அவர்களுக்கு ஒரு லாபமும் இல்லை.

"போலீஸ் உதவி இல்லாமல் செயல்படும் போது இப்படி நிதானமாகத்தான் போக வேண்டி உள்ளது. போலீசிடம் போனால் கூட நமக்கு முழு ஒத்துழைப்பு கிடைக்குமா? என்பது சந்தேகம்தான்." என்றான் பரத், "நாம் மழுப்பப்படலாம்"

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"பார்க்கர் ஸ்மித் என்கிற தனி நபருக்கு சரவணகுமாரால் என்ன பிரேயாஜனம் இருக்க முடியும்? பார்க்கர் ஸ்மித் சி.ஐ.ஏவில் இருந்து ஓய்வு பெற்றவர். சி.ஐ.ஏவில் இராணுவ ரகசியங்கள் சம்பந்தப்பட்ட உளவு வேலைகளுக்கு நம் சரவண குமார் அற்புதமாக உதவுவான்."

"அவன் ஒத்துழைப்பு இல்லாமல் எப்படி பயன்படுத்த முடியும்?"

"வழிக்குக் கொண்டுவர ஆயிரம் வழிகள் உள்ளன சார். என்னதான் ஜீனியஸ் என்றாலும் சிறுவன்தானே? உயிர்மேல் ஆசையும் பயமும் இருப்பதால் தானே காப்பாற்றுங்கள் என்று ரகசிய செய்தி தயாரிக்கிறான். பிரெய்ன் வாஷ் செய்யக்கூடத் தயங்க மாட்டார்கள். எனக்கென்னவோ இந்தக் கடத்தலின் பின்னணியில் ஒரு பெரிய வலுவான அமைப்பு இருப்பதாகப் படுகிறது. அது சி.ஐ.ஏ.வாகக் கூட இருக்கலாம். அப்படி இருக்கும் பட்சத்தில் போலீசின் உதவி நமக்குக் கிடைக்காது. நாம் அவர்களை அணுகாதது நல்லதுதான். பார்க்கலாம். சொந்த முயற்சியாலேயே அதிகபட்சம் பார்க்கலாம்."

"சரி" என்று அனைவரும் புறப்பட...

"சுசி, நீ அவங்ககூட போய்டு. நானும், பப்புவும் சலூன் போய்ட்டு வந்துடறோம். என்ன பப்பு?" என்று கண்ணடித்தான் பரத்.

"உங்க கிராப்பு நல்லாத்தான் இருக்கு. ஒண்ணும் மாத்த வேண்டியதில்லை."

"வகிடில்லாமச் சீவிப் பார்க்கணும் சுசி. நல்லா ருக்கும்."

"நானும் வர்றேன்."

"அய்யய்ய! அது ஜெண்ட்ஸ் ஒன்லி சலூன்!"

"இருக்கட்டும். அமெரிக்கால சலூன் எப்படி இருக்கும்னு நான் பார்த்ததில்லை பரத்."

"இந்தியாவிலே மட்டும் பார்த்தியா என்ன? அதெல்லாம் உனக்கெதுக்கு. இதெல்லாம் ஆம்ப ளைங்க சமாச்சாரம். ஹோட்டலுக்கு போன்னா போயேன்!"

"இவ்வளவு அதட்டறிங்கன்னா, விஷயமிருக்கு. ஷோ பார்க்கணும். உங்களுக்கு அதுதானே? பேசாம வாங்க பரத். கெட்டுப் போய்டுவீங்க. அமெரிக்கால எய்ட்ஸ் ஜாஸ்தி!"

"சீச்சி. பாத்தால்லாம் வியாதி வராது."

"இப்ப வரப் போறிங்களா இல்லயா?" என்று பப்புவின் காரில் அமர்ந்து கொண்டு விடாமல் ஹார்ன் அழுத்த.. பெருமூச்சுடன் வந்து உம்மென்று அருகில் அமர்ந்து கொண்டு, கையைத் தொட்ட போது, வெடுக்கென்று எடுத்துக் கொண்டான் பரத். "உன்னை அழைச்சிட்டு வந்தது என் தப்பு."

மறுநாள்.

அந்தப் பள்ளி கல்லூரி போல இருந்தது. ஒவ்வொரு மாணவனுக்கும் தனி மேஜை. ஒவ்வொரு வகுப்பிலும் டி.வி இருந்தது. சுற்றிலும் மரங்களும், மக்களுமாக படிக்க ஆசையைத் தூண்டும் விதத்தில் இருந்தது.

ராபர்ட்டின் வகுப்புக்குச் சென்று ஆசிரியரிடம் அனுமதி பெற்று அவன் காட்டிய ஜிம்மியை அழைத்துக் கொண்டு வெளியே வந்த போது...

அவன் தன் தலைமுடியைக் கோதிக் கொண்டு, இரண்டு பாண்ட் பாக்கெட்டுகளிலும் கைகளைச் செலுத் திக் கொண்டு, "ஆமாம். என் அப்பாதான் வெஸ்லி" என்றான்.

"எங்கே இருக்கிறார் இப்போது?"

"எங்களுக்கே தெரியாது."

"ஏன்?"

"பார்க்கர் அங்கிளிடம் வேலை பார்த்தார். திடீரென்று கொஞ்ச நாட்களுக்கு என்னைத் தேடாதே என்று என் அம்மாவிடம் சொல்லி விட்டுப் போனவர்தான். அதன் பிறகு வரவே இல்லை."

"உன் அம்மாவும் நீயும் எங்கே தங்கியிருக்கிறீர்கள்?"

"என் சித்தப்பா வீட்டில். தற்சமயம் அம்மாவுக்கு உடல் நிலை சரியில்லை. ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள்."

"எந்த ஆஸ்பத்திரியில்?"

"மவுண்ட் சினாய் ஆஸ்பத்திரியில், அம்மாவுக்கு அபார்ஷன் ஆகி விட்டது."

"காட்! அபார்ஷன் என்றால் உனக்குத் தெரியுமா?"

"தெரியாது. சித்தப்பா சொன்னார் சித்தியிடம்."

"அம்மா பெயர் என்ன?"

"ரோஸ்லின்."

"சித்தப்பா விலாசம் சொல்வாயா?"

"சொல்வேன்."

சொல்ல... குறித்துக் கொள்ளப்பட்டது.

அவனை வகுப்புக்கு அனுப்பிவிட்டு நேராய் மவுண்ட் சினாய் ஹாஸ்பிடல் வந்தார்கள். விசாரணையில் விளக்க மாகச் சொல்லி விசாரித்து நான்காவது மாடியில் ஒரு விங்கில் அந்தத் தனியறைக்கு வந்து சேர்ந்தார்கள்.

ரோஸ்லின் கழுத்து வரைப் போர்த்திக் கொண்டு செய்தித் தாள் படித்துக் கொண்டிருந்தாள். அருகே ஸெலஃபன் காகிதச் சிறைக்குள் பூங்கொத்தும் மேலே 'சீக்கிரம் நலமடைய வேண்டும்' என்று ஆங்கில வரி தாங்கிய அட்டையும் இருக்க.. அந்த அட்டையில் 'மிஸஸ் ரெய்ஸா பார்க்கர்' என்று எழுதியிருந்ததைப் பார்த்ததும் அவசரமாக கென்னடி கேட்டார்.

"மிஸஸ் ரெய்ஸா இங்கே எப்போது வந்தார்கள்."

"இப்போதுதான். அவர்கள் வெளியேறினது கூட இப்போதுதான். ஏன்? நீங்கள் யார்?"

"அவரை உடனடியாகப் பார்க்க வேண்டுமே..."

ரோஸ்லின் தலைமாட்டின் அருகே இருந்த ஜன்ன லின் திரையை விலக்கி, "அதோ தன் காரை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள் பாருங்கள். சிகப்பு கவுண் அணிந்து.... அவர்கள் தான் ரெய்ஸா பார்க்கர்!" என்று சொல்லி முடிக்கும் முன்பே...

"நீங்கள் பேசிக் கொண்டிருங்கள். இதோ வந்து விட்டேன்" என்று கிட்டத்தட்ட ஓட்டமாய் லிஃப்ட்டை நோக்கி விரைந்தார் கென்னடி.

"எனக்கு எதுவும் புரியவில்லையே... நீங்கள் எல்லாம் யார்?"

"நாங்கள் இந்தியாவில் இருந்து வருகிறோம். ஒரு முக்கியமான காரியமாக உங்கள் கணவர் வெஸ்லியைப் பார்க்க வேண்டும். தயவுசெய்து, அவர் எங்கே இருக்கிறார் என்று சொல்ல முடியுமா?" பரத் எட்டிப் பார்க்க ரெய்ஸாவின் கெடிலாக் புறப்பட்டு விட... கென்னடியின் கார் புறப்பட்டது.

"யாருக்குத் தெரியும்? அவர் போக்கே முற்றிலும் மாறி விட்டது. மனைவி நான் உடல்நிலை சரியில்லாமல் இங்கே கிடக்கிறேன். வந்து பார்க்கவில்லை. ரெய்ஸா பார்க்கர் ஆறுதல் சொல்கிறாள். தன் கணவன் ஏதோ வேலை கொடுத்திருப்பதாகவும், விரைவில் அந்த வேலை முடிந்து என்னிடம் அவர் வருவாரென்றும். நடப்பது எதுவும் எனக்குப் புரியவில்லை. திடீரென்று வீட்டைக் காலி செய்ய வேண்டும் என்றார். தன் தம்பி வீட்டில் எங்களைத் தங்க வைத்தார். காணாமல் போய் விட்டார். உண்மையாக அவர் எங்கே இருக்கிறார், என்ன செய்கிறார் என்று எதுவும் தெரியாது. நீங்கள் ஏன் அவரைத் தேடு கிறீர்கள்?"

"சொல்கிறோம். மிஸ்டர் பார்க்கரின் விலாசம் தங்களுக்குத் தெரியுமா?"

"தெரியுமே."

"சொல்லுங்கள் தயவு செய்து."

"ஃப்ராங்ளின் தெருவில்..."

"அங்கே காலி செய்து விட்டார்கள். புதிய விலாசம் தெரியாதா உங்களுக்கு?"

"காலி செய்து விட்டார்களா? அவர்களுமா? ஏன் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்த போது கூடச் சொல்லவில்லையே அவர். சரி. நீங்கள் ஏன் என் கணவரைத் தேடுகிறீர்கள்? அதைச் சொல்லுங்கள்."

"இப்போது வேகமாகப் போனாரில்லையா, அவர் தான் எங்களை அழைத்து வந்தார். அவருக்குத்தான் விபரம் தெரியும். ஒரு வேளை வெஸ்லியின் தம்பிக்கு அவர் இருப்பிடம் தெரியலாமா?"

"மனைவி நானே தெரியாது என்கிறேன்: தம்பிக்கு எப்படித் தெரிந்திருக்கப் போகிறது? வேண்டு மென்றால் விசாரித்துப் பாருங்கள் . அவர் தம்பி ஜிம் மேக்முல்லன் பாரில் அட்டெண்டராக இருக்கிறார்."

அரை மணி நேரத்தில் கென்னடி திரும்பி வந்தார் ஏமாற்றத்துடன், "நான் போவதற்குள் புறப்பட்டு விட்டார்கள். துரத்திச் சென்றேன். டிராஃபிக் சிக்கலில் தொலைத்து விட்டேன். ஆனால் கார் நம்பரைக் குறித்து விட்டேன். இங்கே என்ன ஆயிற்று?"

"இவர்களுக்கே வெஸ்லியின் இடம் தெரியவில்லை."

கடைசிவரை காரணத்தைச் சொல்லாமல் புறப்பட் டார்கள். ஒரு நல்ல சந்தர்ப்பத்தைத் தவற விட்டுவிட்டதற் காகப் பெரிதும் வருத்தப்பட்டார் கென்னடி.. மற்றவர்ளை ஓட்டலுக்குப் போகச் சொல்லிவிட்டு அவர் மட்டும் தன் காரில் எதுவும் சொல்லாமல் புறப்பட்டுச் சென்றார்.

மதியம் ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தார்.

"அந்த எண்ணை வைத்துக் கொண்டு அதன் சொந்தக்காரர் முகவரியைக் கண்டுபிடித்துப் போனேன். பத்து நாட்கள் முன்பு வண்டியை விற்று விட்டானாம் பார்க்கர் ஸ்மித்திற்கு. இன்னும் புதிய பெயரில் மாற வில்லை. அவனும் பார்க்கர் ஸ்மித்தின் பழைய விலாசம் தான் சொல்கிறான். இந்த டீலிங்கில் ஈடு பட்டது பார்க்கரின் கார் டிரைவர் வெஸ்லி என்கிறான். அவன் விலாசமோ தெரியாது என்கிறான். ச்சே! எல்லா முனைகளிலும் தோல்வியே வருகிறது நமக்கு!"

"ஆனால் ஒன்று மிஸ்டர் கென்னடி, வெஸ்லிக்கு இதில் பெரிய பங்கு இருக்கிறது. மிகத் திட்டமிட்டு காரை விற்று, காரை வாங்கி, விலாசங்கள் மாற்றிக் கொண்டு... என்னவோ நடக்கிறது. வெஸ்லி அல்லது ஆனி இந்த இருவரில் ஒருவரை மடக்குவதுதான் நல்லது. ஆனால் எப்படி என்பது தான் புரியவில்லை." என்றார் நியூட்டன்.

பரத் கண்மூடி அமைதியாக இருந்தான்.

"என்ன பரத்?"

"ஆனியை மடக்க இன்னும் ஒரே ஒரு வழி தோன் றுகிறது. ஆனால் இதைக் கூட்டாகச் செய்ய முடியாது. ஒரு நபர்தான் செய்ய முடியும். கென்னடியோ, பப் புவோ தான் செய்ய முடியும்.

"என்ன, சொல்லுங்கள்?"

நியுயார்க்கர் பத்திரிகை அலுவலகத்தில் பேசிக் கொண்டிருந்த போது, அவர்கள் கடிதங்களை பழைய முகவரிக்கே அனுப்புவதாகவும், அதை ஆனி எப்ப டியோ கலெக்ட் செய்து கொள்வதாகவும் சொல்லப் பட்டது. ஒரு பத்திரிகை நிருபருக்கு ஒரு தினத்திற்கு நிறைய கடிதங் கள் வரும். ஆனி யின் பழைய விலாசமான எலக்ஸிங்டன் அவென்யுவில், அவள் போர்ஷன் வாசலில் உள்ள மெயில் பாக்ஸிலிருந்து யார் கடிதங்களை எடுக்கிறார்கள் என்று பொறுமையாகக் கண்காணிக்க வேண்டும். யாராவது வந்து நிச்சயம் எடுத்துச் செல்வார்கள். அந்த நபரை ரகசியமாகப் பின் தொடர்ந்தால் ஆனியின் புதிய இருப்பிடத்தைக் கண்டு பிடித்து விடலாம். அதன் பிறகு நாம் கூட்டாகச் சென்று வளைக்க முடியும்."

"நல்ல யோசனை மிஸ்டர் பரத். இதை நானே செய்கிறேன். இப்போதே போகிறேன். இரவுவரை கண்காணிக்கிறேன். பிறகு மறுபடி நாளைக் காலையில் இருந்து கண்காணிக்கிறேன். வெற்றியடைந்ததும் உங்களுக்குப் போன் செய்கிறேன். நீங்கள் வந்து சேரலாம்."

கென்னடி உடனே புறப்பட்டுச் சென்றார் வேகமாக.

நால்வரும் அறையிலே பேசிக் கொண்டு, வேறு எப்படிச் செயல்படலாம் என்று விவாதித்துக் கொண்டு இருக்க...

இரவு எட்டு மணிக்கு கென்னடி போனில் பேசினார்.

"பரத் கை கொடுங்கள்! சக்ஸஸ். ஆனியின் வீட் டைக் கண்டு பிடித்துவிட்டேன். நீங்கள் சொன்ன யோசனைப்படி. தனிவீடு. இருக்குமிடம்... போனை பப்புவிடம் கொடுங்கள் சொல்கிறேன். அவர் அழைத்து வருவார். நேராகவீட்டு வாசலுக்கே வர வேண்டாம். தெரு முனையில் ஒரு பார் இருக்கிறது. ரெஜினா பார்! அங்கே வந்து காத்திருங்கள். உடனே புறப்படுங்கள். பரத், உங்கள் பிஸ்டலை எடுத்து வாருங்கள்."

பரத் போனைப் பப்புவிடம் தர, அவன் அவர் சொல்லச் சொல்ல, "தெரியும், தெரியும். இதோ... புறப்படுகிறோம். சரி" என்றுவிட்டு வைத்தான்.

"என்ன உளறுகிறாய் ரெய்ஸா?" என்றார் பார்க்கர் ஸ்மித் சற்றுக் கோபமாக.

"ஆமாம். நான் ஒன்றும் உளறவில்லை. மவுண்ட் சினாய் ஆஸ்பத்திரியிலிருந்து அந்தக் கார் என்னை வேகமாகத் தொடர்ந்து வந்தது. என்னைத்தான் தொடர்கிறதா என்று அறிந்து கொள்ள வேண்டு மென்றே புதிய வழிகளில், குறுக்கு வழிகளில் எல் லாம் ஓட்டினேன். எல்லா வழிகளிலும் என்னைத் தொடர்ந்தது. உடனே நான் வேகம் கூட்டி, போக்குக் காட்டி அந்தக் காரைத் திணற வைத்து வந்து விட்டேன்."

"அதன்பின் தொடரவில்லையா?"

"இல்லை."

"அந்தக் காரின் எண் என்ன? கவனித்தாயா?"

"கவனித்தேன்" என்று சொல்ல, உடனே குறித்துக் கொண்டு பார்க்கர் ஸ்மித் இரண்டு முறை போனில் பேசிவிட்டு வைத்து, "மை காட்! அது இந்தியத் தூதரகத்திற்குச் சொந்தமான வண்டி. ஜோ அண்ட் ஜோ தொடர்ந்தாலாவது அர்த்தம் உண்டு. இவர்கள் தொடர்வதென்றால்....?"

பார்க்கர் ஸ்மித் உடனே முகம் சிவந்தார்.

வீட்டை விட்டுப் புறப்பட்டு பப்ளிக் பூத்தில் இருந்து வெஸ்லியுடன் பேசினார்!

"எதுவும் பிரச்சினையில்லையே?"

"இல்லை சார்."

"வெஸ்லி, உன் மனைவி நலமாய் இருக்கிறாள். நாளை டிஸ்சார்ஜ் ஆகிறாள். கவலைப்படாமல் இரு. பையன் எதுவும் பிரச்னை செய்யவில்லையே?"

"இல்லை."

திரும்ப வீட்டுக்கு வந்தார்.

"ரெய்ஸா, ஆனியை ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லி எச்சரிக்க வேண்டும். அவளின் புதிய விலா சத்தில் போன் இல்லை. நான் நேரில் போய் சொல்லி விட்டு வந்து விடுகிறேன்."

பார்க்கர் ஸ்மித் புறப்பட்டபோது இரவு மணி 8.30.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ். உதயகுமார்
வயது: 28
முகவரி: 203, காலி வீதி, கொழும்பு-03.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: ஏ. நாகேஸ்வரி
வயது: 20
முகவரி: புதிய எல்லை வீதி, பாலமீன்மடு, முகத்துவாரம், மட்டுநகர்.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, டி.வி.



பெயர்: ரி. லெனின்
வயது: 24
முகவரி: HAUPT-STR-94, 5085 SULZ AG, SWITZERLAND.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனா நட்பு.



பெயர்: அப்துல் நசார்
வயது: 23
முகவரி: 11 சவீவபுரம், புத்தளம்.
பொழுது போக்கு: பத்திரிகை வானொலி, டி.வி.



பெயர்: எம். பஸீர்
வயது: 24
முகவரி: 180/34, டி.டி., கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு-14.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, நண்பர் தொடர்பு.



பெயர்: எம். உவைஸ்
வயது: 25
முகவரி: P.O.BOX NO-979, TAIF, K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை, டி.வி., வானொலி.

பெயர்: எஸ்.ஐ. ஜின்னார்
வயது: 19
முகவரி: சின்னக் கிண்ணியா -01, கி.மா.
பொழுது போக்கு: வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: எம். அப்துல் ரஊப்
வயது: 22
முகவரி: 17, ஆஸ்பத்திரி வீதி, ஆலங்குளம்-17, இறக்காமம்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: ஏ. குமார்
வயது: 22
முகவரி: மியனவிற்ற எஸ்டேட், தெரணியகலை..
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: என். சந்திரகுமார்
வயது: 18
முகவரி: 6ம் வட்டாரம் நற்பிட்டிமுனை, கல்முனை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: கே. ரவி
வயது: 25
முகவரி: ROOM. B.10E, P.O.BOX-20942, RIYADH-11465, K.S.A.
பொழுது போக்கு: நாவல் படித்தல்.

பெயர்: ஐ. அப்துல் காதர்
வயது: 26
முகவரி: B.NO. 2605, P.O.B.OX-5520, JEDDAH-21432, K.S.A.
பொழுது போக்கு: பாடல்கள், பேனா நட்பு.



படிப்பகம்

www.padippakam.com

# மக்சீம் கார்க்கி

# தாய்

## 61

ரும்பிக்கொதிப்பைத் தவிர்ப்பதற்காக மனிதர்களால் நடத்தப்படும் அமைதியின்மை நிறைந்த போராட்ட வாழ்க்கைச் சித்திரங்கள் தாயின் கண் முன்னால் திரை விரித்துப் படர்ந்து தெரியும். எங்கு பார்த்தாலும் மனிதர்களை ஏமாற்றி ஏதாவது ஆதாயம் பார்ப்பதற்காகவென்று செய்யும் கொச்சைத்தனமான அப்பட்டமான முயற்சிகளையும் சொந்த சுயநலத்துக்காக மக்களைக் கசக்கிப் பிழிந்து அவர்களது கடைசிச் சொட்டு ரத்தம் வரையிலும் உறிஞ்சிக் குடிப்பதையும் அவள் தெள்ளத்தெளிவாகக் காண முடிந்தது. உலகத்திலே அமோகமான வளமும் செல்வமும் நிறைந்திருப்பதையும் அதே சமயத்தில் பெரும்பான்மையான மக்கள் இந்தச் செல்வவளத்துக்கு மத்தியிலேயும் கூட அரைப்பட்டினி குறைப்பட்டினியாக உயிர் வாழ்வதையும் எப்போதும் தேவையின் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி வாழ்வதையும் அவள் கண்டாள். தேவாலயங்களிலோ பொன்னும் வெள்ளியும் நிறைந்து கிடந்தன; அவற்றால் ஆண்டவனுக்கு எந்தப் பிரயோஜனமும் இருக்கவில்லை. அதே சமயத்தில், அந்தக் கோயில்களின் வாசல்களிலே பிச்சைக்காரர்கள் நடுநடுங்கிக் கொண்டே, தங்களுடைய கைகளிலே வந்து விழும் பிச்சைக் காசுக்காகப் பயனின்றிக் காத்துக் கிடந்தார்கள். இதற்கு முன்பு கூட அவள் இது மாதிரிக் காட்சிகளைக் கண்டிருக்கிறாள்: பணம் படைத்த தேவாலயங்களையும், பொன்னாபரணம் கொண்ட உடைகளை அணிந்த பாதிரிகளையும் அவள் கண்டிருக்கிறாள்; இந்த நிலமை பிச்சைக்காரர்களின் குடிசைகளுக்கும், கிழிந்து பழங்கந்தையாய்ப் போய் மானத்தை மறைக்கக்கூட இயலாத அவர்களது துணிகளுக்கும் எதிர்மறையான காட்சியாயிருப்பதையும் அவள் கண்டிருக்கிறாள். ஆனால், முன்பெல்லாம் அவள் இந்த மாதிரி எதிரும் புதிருமான வித்தியாசத்தை இயற்கை நியதி என்று கருதிச் சமாதானம் அடைந்தாள். இப்போதோ இந்த நிலைமை அவளால் தாங்க முடியாததாயிருந்தது. பணக்காரர்களை விட ஏழைகட்கு தேவாலயம் அருகிலேயும் தேவைமிக்கதாயும் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது; எனவே பிச்சைக்காரர்களுக்கு இழைக்கும் எந்தக் கொடுமையையும் அவளால் பொறுக்க முடியவில்லை.

அவள் பார்த்த கிறிஸ்து நாதரின் சித்திரங்களிலிருந்தும், கிறிஸ்துவைப்பற்றி அவள் கேள்விப்பட்டிருந்த கதைகளிலிருந்தும், கிறிஸ்து நாதர் எளிய உடைகள் தரித்து ஏழைகளின் நண்பராகவே இருந்தார் என்பதை அவள் அறிந்திருந்தாள். ஆனால், இந்தத் தேவாலயங்களிலோ கிறிஸ்து நாதரின் உருவத்தை அவர்கள் பளபளக்கும் பொன்னாலும், சரசரக்கும் பட்டாடைகளாலும் அலங்கரித்திருந்தார்கள்; பிச்சைக்காரர்கள் அவரது அருளை நாடி தேவாலயத்துக்கு வந்தால் அந்தப் பட்டுப்பட்டாடைகள் அவர்களைப் பார்த்துச் சீறிச் செருமுவதாகவே அவளுக்குத் தெரிந்தது. அப்போதெல்லாம் அவள் ரீபின் சொன்ன வாசகத்தைத் தன்னையும் அறியாமல் நினைத்துக் கொள்வாள்:

"கடவுளைக் கொண்டும் நம்மை ஏமாற்றிவிட்டார்கள்!" அவள் தன்னையும் அறியாமலே வரவரப் பிரார்த்தனை செய்வதைக் குறைத்துவிட்டாள். ஆனால், கிறிஸ்துவைப் பற்றி அதிகமாக நினைத்தாள்: அதுமட்டுமல்லாமல், கிறிஸ்து நாதரின்பெயரையே சொல்லாமல், அவரைப் பற்றித் தெரிந்து கூடக் கொள்ளாமல், அதே சமயத்தில் அவள் தனக்குள்ளாகக் கருதியதுபோல், கிறிஸ்து நாதரது கொள்கைகளின் படி வாழ்ந்து, அவரைப்போலவே இந்த உலகத்தை ஏழைகளின் சாம்ராஜ்யமாகக் கருதி, இவ்வுலகின் சகல செல்வங்களையும் மக்கள் குலத்தோர் அனைவருக்கும் சாரிகர் சமானமாகப் பங்கீடு செய்ய வேண்டும் என்று விரும்பி வாழ்கின்ற மக்களைப் பற்றியும் அவள் அதிகமாகச் சிந்தித்தாள். அவளது மனம் இந்த எண்ணத்தின் மீதே பதிந்து படிந்தது. அவளது சிந்தனைகள் அவளது மனத்துக்குள்ளாகவே விரிந்து வளர்ந்து அவள் பார்க்கின்ற பொருளனைத்தையும் கேட்கின்ற விஷயங்கள் அனைத்தையும், அணைத்து ஆரத்தழுவி, வரவரத் தீட்சண்ணியம் பெற்று வளர்ந்தோங்கின. அந்தச் சிந்தனைகள் வளர்ந்தோங்கி, ஒரு பிரார்த்தனையின் பிரகாசத்தோடு விளங்கின. இந்த இருள் சூழ்ந்த உலகத்தின் சகலதிசா கோணங்கள் மீதும் தமது சர்வ ஜன சமூகத்தின் மீதும், வாழ்க்கையின் மீதும், ஒளிப் பிரவாகத்தை எங்கெங்கும் ஒரே சமானமாகப் பாய்ச்சி ஒளி செய்தன. தான் என்றென்றும் ஒரு மங்கிய பரிவுணர்ச்சியோடு நேசித்து வந்த கிறிஸ்து நாதர்-துக்கம் கலந்த இன்பமும் பயங்கலந்த நம்பிக்கையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த குழப்ப உணர்ச்சியோடு நேசித்து வந்த அதே கிறிஸ்து நாதர்-தன்னருகே நெருங்கி வந்துவிட்டது போன்று தாய்க்குத் தோன்றியது. இப்போதோ, ஏசு கிறிஸ்து முன்னைவிட உயர்ந்த ஸ்தானத்தில் கண்ணெட்டும் தூரத்தில், ஒளிரும் முகத்தோடு மகிழ்வாய் வீற்றிருப்பது போல் அவளுக்குத் தோன்றியது. மனிதர்களின் நண்பராக கிறிஸ்துவின் பெயரைக்கூட, மரியாதையின் காரணமாகச் சொல்லக் கூசிய மக்கள், அவரது திருநாமத்துக்காகத் தங்கள் இரத்தத்தைத் தாராளமாகச் சிந்தினார்கள். அந்தப் புனித இரத்தத்தால் கழுவப்பெற்று புத்துணர்ச்சிபெற்று, உண்மையாகவே அவர் மீண்டும் உயிர்த்தெழுந்து வந்து விட்டது போல அவளுக்குத் தோன்றியது. தனது சுற்றுப் பிரயாணங்களை முடித்துவிட்டு, அவள் திரும்பி வந்து நிகலாயைச் சந்திக்கும் போது மிகுந்த உணர்ச்சியும் உவகையும் கொண்டவளாக இருப்பாள். வழியெல்லாம் அவள் கண்ட விஷயங்களும் கேட்ட விஷயங்களுமே அந்த உவகைக்குக் காரணம். தனது கடமையை நிறைவேற்றிவிட்ட திருப்தியில் அவள் மனம் குதூகலித்து நிறைவு பெறும்.

"இந்த மாதிரிச் சுற்றித்திரிந்து எவ்வளவோ விஷயங்களைக் காண்பது மிகவும் நன்றாயிருக்கிறது" என்று ஒரு நாள் மாலை அவள் அவனிடம் சொன்னாள். "இவற்றால் நாம் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஜனங்களோ வாழ்க்கையின் கடைக்கோடிக்கே தள்ளிச் செல்லப்பட்டிருக்கிறார்கள். வாழ்வின் எல்லைக் கோடியிலே அவர்கள் என்ன நடந்திருக்கிறது என்பதொன்றும் தெரியாது தட்டுத் தடுமாறித் தடவிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தங்களைப் பிறர் ஏன் இப்படி நடத்த வேண்டும் என்பதை மட்டும் அவர்களால் நினைத்து நினைத்து அதிசயப்படாமலிருக்க முடியவில்லை. அவர்களை ஏன் இப்படி விரட்டியடிக்க வேண்டும்? எல்லாமே நிறையப் பெருகிக்கிடக்கும் போது அவர்கள் மட்டும் ஏன் பசியால் வாட வேண்டும்? எங்கு பார்த்தாலும் கல்வியறிவு நிறைந்திருக்கும் போது, அவர்கள் மட்டும் ஏன் அஞ்ஞான இருளில் ஒன்றுமறியாத பாமரர்களாயிருக்க வேண்டும்? மக்களைப் பணக்காரன் என்றோ ஏழை என்றோ கருதாமல், தனது அன்பு மிக்க குழந்தைகளாகக் கருதும் அந்தத் தயாபரன், அந்தக் கடவுள் எங்கு போனார்? தங்களுடைய வாழ்க்கையைப் பற்றி, மக்கள் சிந்திக்கும் போது அவர்களுக்கு ஆத்திரம்தான் பொங்குகிறது. இந்த அநீதியைத் தவிர்க்க ஏதேனும் செய்யா விட்டால், அந்த அநீதியே தங்களைத் துடைத்துத் தூர்த்து அழித்துவிடும் என்பதை அவர்கள் உணர்கிறார்கள்."

மக்களது வாழ்க்கைக்கு இழைக்கப்படும் அநீதிகளைப் பற்றி அந்த மக்களிடமே தான் பேசவேண்டும் என்ற ஆசை அவளுக்கு எத்தனையோ சமயங்களில் எழுவதுண்டு; சமயங்களில் இந்த ஆசையை அடக்கியாள்வதே அவளுக்குப் பெரும் பாடாய்விடும்.

தாய் சித்திரப் புத்தகங்களைக் குனிந்து பார்த்துக் கொண்டிருப்பதை நிகலாய் கண்டுவிட்டால் உடனே லேசாகப் புன்னகை புரிவான்: அவளுக்கு உலகத்து அதிசயங்களில் ஏதாவது ஒன்றைப் பற்றிச் சொல்லுவான். மானுடத்தின் அசகாயத் துணிச்சலைக் கண்டுவியந்துபோய் அவள் திடுக்கெனக் கேட்பாள்.

> "மக்களைப் பணக்காரன் என்றோ ஏழை என்றோ கருதாமல், தமது அன்புமிக்க குழந்தைகளாகக் கருதும் அந்தத் தயாபரன், அந்தக் கடவுள் எங்கு போனார்? தங்களுடைய வாழ்க்கையைப் பற்றி, மக்கள் சிந்திக்கும்போது அவர்களுக்கு ஆத்திரம்தான் பொங்குகிறது."

"இப்படியும் நடக்க முடியுமா?"

தனது தீர்க்கதரிசனத்தின் உண்மையின் மீது தான் கொண்டுள்ள அசைக்க முடியாத, ஆணித்தரமான உறுதியோடு நிகலாய் அவளைத் தனது கண்ணாடியணிந்த கண்களால் அன்புததும்பப் பார்ப்பான்; பார்த்தவாறு எதிர்காலச் சித்திரத்தை விளக்கிச் சொல்லத் தொடங்குவான்:

"மனிதனுடைய ஆசைகள் அளவு கடந்தவை. அவனது சக்தியோ வற்றி மடியாதது! என்றாலும்கூட, இந்த உலகத்தில் ஆத்மபலம் சிறிது சிறிதாகத்தான் பெருகுகிறது. ஏனெனில், இன்று சுதந்திரமாக இருக்கப் பிரியப்படுபவர்கள் எல்லாம் அறிவைச் சேகரிப்பதை விட, பணத்தையே சேகரிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆனால், மாந்தர்கள் இந்தப் பேராசையைத் தொலைத்து, தங்களை அடிமைப் படுத்தும் பலவந்தமான உழைப்பிலிருந்து விடுதலை பெற்றால்..."

இந்த வார்த்தைகளின் அர்த்தத்தை அவளால் கண்டு கொள்ள முடியவில்லை. என்றாலும் அவற்றைத் தாண்டி விடும் அமைதி நிறைந்த நம்பிக்கை மட்டும் அவளுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரியத் தொடங்கியது.

"உலகத்தில் சுதந்திரமாக இருப்பவர்கள் மிகச் சிலரே: அதுதான் துர்ப்பாக்கியம்!" என்றான் அவன்.

அவளுக்கு இது மட்டும் புரிந்தும் பேராசையிலிருந்தும் குரோதத்திலிருந்தும் தம்மை விடுவித்துக் கொண்டவர்களை அவளுக்குத் தெரியும். அந்த மாதிரியானவர்கள் மட்டும் அதிகமாக இருந்தால், வாழ்க்கையின் இருளும் பயங்கரமும் தொலைந்து போகும்: வாழ்க்கை எளிமையாகவும் ஒளி பெற்றும், மகோந்நதமாகவும் விளங்கும்.

"கொடியவர்களாகும் நிர்ப்பந்தத்துக்கு மக்கள் ஆளாகிறார்கள்!" என்று துயரத்தோடு சொன்னான் நிகலாய்.

அதை ஆமோதித்து, அந்திரேய் முன்னர் சொன்ன வார்த்தைகளை எண்ணி, தலையை அசைத்துக் கொண்டாள் தாய்.

➡□➡

எப்போதும் வேலையிலிருந்து குறிப்பிட்ட நேரத்துக்கு வீடுதிரும்பி வரும் நிகலாய், ஒருநாள் வழக்கத்துக்கு மாறாக நேரம் கழித்துத் திரும்பி வந்தான். வந்தவன் தன்




னுடைய உடுப்புக்களைக் கூடக் களையாமல் கைகளைப் பதறிப்போய்ப் பிசைந்து கொண்டே சொன்னான்:

"நிலவ்னா! நம்முடைய தோழர்களில் ஒருவன் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டானாம், யாராயிருக்கலாம்? என்னால் கண்டு பிடிக்க இயலவில்லை...."

தாயின் உடம்பு ஆட்டம் கண்டு அசைந்தது.

"பாவெலாயிருக்குமோ?" என்று ஓர் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டே மெதுவாகக் கேட்டாள் அவள்.

"இருக்கும்!" என்று தோளை அசைத்துக் கொண்டே சொன்னான் நிகலாய்: "ஆனால் அவனை மறைத்து வைப்பதற்கு நாம் என்ன செய்வது? அவனை எங்கே கண்டு பிடிப்பது? அவனைக் கண்டுபிடித்து விடலாம் என்ற நம்பிக்கையோடு நான் தெருத் தெருவாய்ச் சுற்றி அலைந்தாய் விட்டது; அலைந்தது முட்டாள் தனம்தான். ஆனால், நாம் ஏதாவது செய்தாக வேண்டும். நான் பழையபடியும் போகிறேன்..."

"நானும் வருகிறேன்" என்று கத்தினாள் தாய்.

"நீங்கள் இகோரிடம் போய், அவனுக்கு ஏதாவது விஷயம் தெரியுமா என்று தெரிந்து கொண்டு வாருங்கள்" என்று சொல்லிவிட்டு, அவன் அவசர அவசரமாக வெளியேறினான்.

தாய் தன் தலை மீது ஒரு சவுக்கத்தை எடுத்துப் போர்த்திக் கொண்டு அவனைத் தொடர்ந்து தெருவுக்கு விரைந்து சென்றாள்: அவள் மனத்தில் நம்பிக்கை நிறைந்திருந்தது. அவளது கண்கள் செவ்வரிபடர்ந்து அசைந்தன; அவளது இதயம் படபடத்துத் துடித்து, ஓடுகின்ற மாதிரி அவளை வேகமாக விரட்டியடித்தது. அவள் தன் தலையைக் குனிந்தவாறே எதிரிலுள்ள எவற்றையுமே பார்க்காமல், தான் எதிர்பார்த்துச் செல்வதை எதிரே கண்டு விடலாம் என்ற எண்ணத்தோடேயே சென்று கொண்டிருந்தாள்.

"நான் அங்கே அவனைக் கண்டுவிட்டேன் என்றால்!"- அவளது இந்த நம்பிக்கையே அவளை விரட்டி விரட்டி முன்னேறச் செய்தது.

பொழுது உஷ்ணமாயிருந்தது. அவளும் களைத்துப் போய் மூச்சுவிடத் திணறினாள். இகோரின் வீட்டுப் படிக்கட்டுக்குச் சென்றவுடன் அவளால் ஒரு அடி கூட முன்னே செல்ல முடியவில்லை. அவள் நின்றாள், சுற்று முற்றும் பார்த்தாள்; திடீரென ஒரு கூச்சலிட்டுக் கண்களை மூடிக் கொண்டு விட்டாள்! அந்த வீட்டு வாசலில், தனது பாக்கெட்டுக்குள் கைகளை விட்டுக் கொண்டு நிகலாய் வெஸோவ்ஷிகோவ் நிற்பது போலத் தோன்றியது! அவள் மீண்டும் பார்த்த போது, அங்கு யாரையுமே காணோம்.

"இது என் மனப் பிராந்திதான்!" என்று நினைத்துக் கொண்டே படியேறினாள். காதுகளைத் தீட்டிக் கேட்டாள். வெளி முற்றத்தில் யாரோ மெல்ல மெல்ல நடக்கும் காலடி யோசை அவள் காதில் விழுந்தது. அவள் படியேறி மேலே சென்று, கீழே பார்த்தாள். மீண்டும் அதே முகம், அதே அம்மைத் தழும்பு விழுந்த முகம் தன்னைப் பார்த்துப் புன்னகை புரிந்துவாறு நிற்பதைக் கண்டாள்.

"நிகலாய்! நிகலாய்!" என்று கத்திக் கொண்டே ஏமாற்றத்தால் வேதனையடைந்த இதயத்தோடு அவனைநோக்கி ஓடினாள்.

"நீ போ, போ" என்று தன் கையை ஆட்டிக் கொண்டே அமைதியாகச் சொன்னான் அவன்.

அவள் விடுவிடென்று மாடிப் படியேறி இகோரின் அறைக்கு வந்தாள்: அங்கு அவன் ஒரு சோபாவில் படுத்திருப்பதைக் கண்டாள்.

"நிகலாய் ஓடி வந்து விட்டான்-சிறையிலிருந்து!" என்று அவள் திக்கித் திணறினாள்.

"எந்த நிகலாய்?" என்று கரகரத்த குரலில் கேட்டுக் கொண்டே தலையணையிலிருந்து தலையைத் தூக்கினான்;

"இரண்டு நிகலாய் இருக்கிறார்களே."

"வெஸோவ்ஷிகோவ். அவன் இங்கே வந்து கொண்டிருக்கிறான்!"

"சபாஷ்!"

இந்தச் சமயத்தில் நிகலாய் வெஸோவ்ஷிகோவே அறைக்குள் வந்து விட்டான்.

(தொடர்ந்து வரும்)

---

# விழுது

பிரசாத்!

அப்பாவான என்னைப் பார்த்தா நீ இப்படிக் கேட்கிற? கேட்டது தப்பல்ல... கேட்கப்படுகிற கேள்விதான்.

நினைவிருக்கிறதா பிரசாத்?

அப்போ உனக்கு அஞ்சு வயசிருக்கும். நம்ம ஊர் கல்லூரியில் நீதான் உன் வகுப்பில் முதல் ரேங்க். எங்களுக்குப் பெருமையா இருந்தது.

பெரிய கல்லூரி எதுன்னு விசாரித்து உன்னைப் படிக்க வைக்கத் திட்டம் போட்டேன்.

செயல் ஆற்றினேன்.

மூன்று ஊர்களைச் சுட்டிக்காட்டி, நீ எந்த ஊருக்குப் போற?ன்னு கேட்டேன். ஆனா அந்தப் பிஞ்சு வயசுல எங்களப் பிரிய மனமில்லாம அழுதாய்; அடம்பிடித்தாய்.

நீ படிக்கணும். பெரிய வேலைக்குப் போகணும்... 'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி...' குறள்தான் என் முன்னால் நின்றது.

வருஷத்திற்கு ஒரு முறை ஊருக்கு வருவாய். முதல் தடவை வந்தபோது உன் பாசம் புரிந்தது. அப்புறம் விடுமுறைக்கு வருவது இயல்பாயிற்று.

ஆமாம் நீ படிக்கிற இயந்திரமானாய். நாங்களோ படிக்க வைக்கிற இயந்திரமானோம்.

அம்மா இறந்தபோது கூட பெற்ற பாசத்திற்காக நீ அழுதாய். ஆனால் அம்மாவின் இழப்பை நீ உணரவே இல்லை.

ஏன் என்று எனக்குத் தெரியாமல் இல்லை. எங்களோடு நீ இருந்த காலம் கொஞ்சம்தான்.

'பாசம் எப்படிப்பா வரும்?' என்கிறாயா? உண்மைதான்.

நீ முன்னேறணும்... முன்னேறணும் என்பதுதான் எங்கள் கனவு. கனவை நனவாக்கினாய். உயர்ந்த பதவி... பெரிய இடத்துப் பெண்... மிக வசதியான வாழ்க்கை.



சாரதா நாகரத்தினம்

இந்த நேரத்தில்தான் நான் ஓய்வு பெற்றேன். என் கடைசிக்காலத்திலாவது உன்னுடன் சேர்ந்து வாழலாம் என்ற பிள்ளைப் பாசத்தில் உன்னைக் கேட்டேன்.

ஆனால் நீயோ... அன்று நான் கேட்ட அதே கேள்வியை இப்போது திருப்பிக் கேட்டு விட்டாய்.

"அப்பா... என் சூழ்நிலை உங்களுக்கு ஒத்து வராது. 'முதியோர் இல்லந்தான்' நீங்க தேடுற அமைதியான வாழ்வுக்கு வசதியா இருக்கும். எந்த ஊருக்குப் போறீங்க? என்று சொலுங்க. நான் ஏற்பாடு செய்யறேன்..."

பிரசாத்...

நீயா இப்படிக் கேட்கிற? கேட்டது தப்பல்ல. கேட்கப்பட வேண்டிய கேள்விதான்.

அன்று நான் வளர்த்தது ஆலமரமல்ல. போதிமரம்.

---

# சிகப்பு ரோஜா

காலையில் அலுவலகத்திற்குப் புறப்படுமுன் வழக்கம் போல் நித்யா சொன்னது நினைவுக்கு வந்தது சதீஷிற்கு. "என்னங்க இன்னிக்காவது வரும் போது சிகப்புக் கலர் பூ வாங்கி வாங்களேன் ப்ளீஸ்....."

"சரிம்மா.. இன்னிக்கு எப்படியாவது நீ விரும்பின சிகப்புக்கலர்ல பூ வாங்கி வர்றேன் ஓகே..." உடனே மோட்டார் பைக்கை ஸ்டார்ட் செய்து புறப்பட்டான்.

சதீஷ் பல நாட்களாக தினமும் பூ மார்க்கட்டிலுள்ள எல்லாக் கடைகளுக்கும் ஏறி இறங்கி விட்டான். நித்யா சொன்ன கலரில் பூ கிடைக்கவேயில்லை. அவன் மனதிற்குள் துவண்டு போனான். கல்யாணமாகி ஆறுமாதத்திலேயே தன் மனைவி வேண்டிக் கேட்டதெல்லாம் உடனே வாங்கிக் கொடுத்து விடுவான் சதீஷ். பல விலையுயர்ந்த



நிஸ்வா ஷமீம் – தர்காநகர்

பொருட்களையெல்லாம் வாங்கிக் கொடுத்த அவனால் ஓரிரு ரூபாய்க்குள் அடங்கிவிடும் அதிலும் அவளுக்கு மிகவும் பிடித்த பூவை வாங்கிக் கொடுக்க முடியவில்லையே என்று மிகவும் வருந்தினான். பணமிருந்தால் எல்லாம் வாங்கிடலாம் என்பது பொய். செயற்கைப் பொருள் என்றால் கிடைக்கும். இயற்கைப் பொருளுக்கு எப்பவும் கிராக்கி தான் என்பதை அவனுள்ளம் நினைத்துப் பார்த்து மேலும் குழம்பிப் போனது.

அன்று ஒரு முடிவோடு அலுவலகம் முடிந்து வெளியேறியவன் நேரே மோட்டார் பைக்கை பூமார்க்கட்டிற்கு செலுத்தினான். அவனைக் கண்டதும் பூக்கடைக்காரரெல்லாம் "சிகப்பு ரோஜா வருகிறார்" என்று கோரஸ் பாடினார்கள். அந்த அளவுக்கு சதீஷ் அவ்விடத்தில் மிகப் பிரபல்யமாயிருந்தான். அதாவது தினம் பூ வாங்க வந்து வெறுங்கையோடு திரும்பிப் போவதால்.

அன்றும் விதம்விதமான நிறங்களில் எல்லாம் பூக்கள் வந்திருந்தன. ஆனால் அவன் தேடி வந்த சிப்பு ரோஜா கிடைக்கவேயில்லை. அவன் சோர்ந்து போனான். பின் வேறு வழியில்லை என்பதையுணர்ந்த அவன் அருகேயிருந்த கடையில் வெள்ளை ரோஜாப்பூக்களை வாங்கிக் கொண்டு புறப்பட்டான். மாலை மயங்கிவிட்டது. நித்யா வீட்டில தனியா இருப்பாள் என்ற எண்ணம் அவனுள் எட்டிப்பார்த்ததும், மோட்டார் பைக்கை மின்னல் வேகத்தில் செலுத்தினான்.

அசுரவேகத்தில் முன்னால் வந்து கொண்டு இருந்த லாரியை அவன் கவனிக்கத்தவறி, ஒரு நொடியில் சதீஷ் இரத்த வெள்ளத்தில் மிதந்தான். நித்யா செய்தியறிந்து ஓடி வந்து உயிரற்ற சதீஷின் உடல் மீது விழுந்து கதறியழுதாள்.

"என்னங்க சிகப்புக் கலர் பூ வாங்கி வரேன்னிங்களே... எந்திரிங்க உங்க கையால பூ வைத்து விடுங்க" என்றவள் நிமிர்ந்த போது சதீஷின் அருகே வெள்ளை ரோஜாக்கள் அவனது இரத்தத்தில் நனைந்து சிகப்பு ரோஜாக்களாக அவளைப் பார்த்துச் சிரித்தன.



படிப்பகம்

www.padippakam.com

# சிறுகதை

# காதல் தீப்பிழம்பு குளிரும்

**மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்**



'தினமுரசு' 'வாங்கியவுடன் இக் கதையைப் படிப்பீர்களென்று தெரியும். ஆனால்.... ரசிகனைத் தொட்டு, சிந்தியாவைப் பார்வையால் வருடி... என் கதைக்கு வருவதற்குக் 'கொஞ்சம்' நேரம் ஆகியிருக்கும். அப்படித்தானே....?ஆக, அந்தக் 'கொஞ்சம்' நேரத்துக்குள்தான் எமது வீட்டார் (அப்பா, அம்மா, அக்கா, மச்சான்) எல்லோரும். பேராதனைப் பூந்தோட்டம் பார்க்கப் புறப்பட்டுப் போயிருந்தார்கள்.

இந்த நிமிடம் 'வீடு' வெறிச்...

நான் மட்டும் தனிமையில்....

ஆனால் மனதில் ஏராளமான குழப்பங்கள்...

கையிலிருந்த ஷ்ட்னி ஷெல்டனின் 'அதர் சைட் ஒப் மிட் நைட்' நாவலைக் கட்டிலில் எறிந்தேன்.ஹ்ப்சனின் கவிதை படித்தேன். மனம் ஒப்பவில்லை. மனம் ஒரு குரங்கு.

சிகரெட் பற்ற வைத்துக் கொண்டேன்.

புகை வந்தது. கூடவே, மனதில் ஜார்ஜ் பெர்னாட்ஷா வந்தார். சொன்னார்:.

"சிகரட் என்பது ஒரு துளி புகையிலையினால் சுற்றப்பட்ட ஒரு துண்டுக் காகிதம். அதன் ஒரு நுனியில் நெருப்பு இருக்கிறது. மறுமுனையில் முட்டாள் இருக்கிறான்."

நான் முட்டாளாகிவிட்டுப் போகின்றேன்.

ஆனால் இந்த நிமிடம் சிகரட் என் தேவை.

கோலிங்பெல் ஒலித்தது. மேற்கத்தைய சங்கீதமாய்..

'யாராயிருக்கும்?'

நினைத்துக் கொண்டு வராண்டாவுக்கு வந்தேன். அதற்குள் சிகரட்டை ஆஷ்ட்ரேயில் அமிழ்த்தியிருந்தேன்.

(வராண்டாவுக்குள் நுழைவதற்குள் என்னைப் பற்றிக் கொஞ்சம் சொல்லிவிடுவது உத்தமம்; நான்... இளைஞன். அமெரிக்கன் ஸ்டைலில் தலைமயிர் வெட்டியிருந்தேன். அரவிந்தஸ்வாமி தம்பி மாதிரி தோற்றம். வயது ஏதோ இருபத்தியாறின் ஆரம்பம். சிவில் இன்ஜினியரிங் படித்துவிட்டு மெல்லமாய் வேலை தேடிக்கொண்டிருக்கிறேன். வேலை தேடவேண்டிய 'குங்குமச் சிமிழ்' மோகனின் அவசரம் எனக்கில்லை. ஏனெனில்.... எனது அப்பா கஸ்டம்ஸ் ஆபிசர். நிறையப் பணமிருக்கிறது. செல்வாக்கு இருக்கிறது. அவருக்கு நிறையப் 'பெண்கள்' இருப்பதாகவும் கேள்வி. ஆனால் அம்மா கண்ணகிப் பரம்பரை... போதும்.)

முன் வாயில் கதவைத் திறந்தேன்.

அங்கே அவள் நின்றிருந்தாள்.

(ஹாவென்று வாயைப் பிளக்காதீர்)

பக்கத்து வீட்டுப் பதினெட்டு வயது மனிஷா கொய்ராலா.

அவளை எப்படியும் வர்ணிக்கலாம். வீண்வேலை. ஏனெனில் அப்துல் ரகுமானின் காதல் கவிதை வரிகளில் நிறையத்தடவை அவள் வர்ணிக்கப்பட்டிருக்கிறாள். ஒரே வார்த்தையில் உங்கள் திருப்திக்காக... அப்சரஸ்!

"என்ன?" என்றேன் புன்னகைத்தவாறு....

பின்புறம் வைத்திருந்த கையை நீட்டினாள். கையில் 'மாலைமதி.'

என்.ஸி.மோகன்தாஸின் 'அனல் காற்று' அது.

"பாத்துட்டீங்களா?" என்று வாங்கிக் கொண்டேன்.

"கதை சூப்பர்!" என்றவள் "வேறொரு புத்தகம் தாங்களேன் -பார்த்துவிட்டு தர்றேன்" என்றாள்.

"உள்ளே வாங்க."

"வந்தாள்."

"வீட்டுல ஒருத்தரும் இல்லியா?"

நான் ஸ்டாண்டில் இருந்து புத்தகமொன்றை எடுத்துக்கொண்டே சொன்னேன். "எல்லோரும் பேராதெனிய கார்டன் போயிருக்காங்க."

"என்ன புக்?" என்றாள்.

"ஐ லவ் யூ" என்றேன்.

"என்னது?" என்றவள் அதிரவில்லை. அவளது முகத்தில் குங்குமச் சிவப்பு வந்தது.

"நான் புத்தகத்தின் பெயரைச் சொன்னேன்..." என்றேன்.

"நான் தப்பாக நினைக்கலியே...."

என்றவள் "தாங்க்ஸ்" என்றாள், புத்தகத்தை வாங்கிக் கொண்டு..

"வர்றேன்!" என்று யதார்த்தமாய் நகர்ந்தவள் வாசலில் போய் நின்று திரும்பினாள்.

"சிகரட் குடிச்சீங்களா?" என்றாள்.

மவுனமானேன்.

"சிகரட்டை விடுங்க நாம ஒன்னு பண்ணலாம்" என்றாள்.

"என்ன?"

"நாம காதலிக்கலாமா?"

நான் அதிர்ந்தேன். "வாட்?"

"யெஸ்! நாம நிஜமாகக் காதலிக்கலாமா?" -அவள் போய்விட்ட பிறகும் நான் காற்றில் மிதந்தேன்.

அடுத்த நிமிடத்தில் இருந்து நிறைய சிகரட் புகைத்தேன்.

இப்படித்தான் என்னில் முதல் காதல் வந்தது. வளர்ந்தது.

நானும் "ஷர்மி"யும் நிறையவும் 'காதல்' பண்ணினோம்.

அப்படியே சிகரட்டை விட்டுத் தொலைத்தேன்.

"சீச்சீ...சிகரட்டாவது மண்ணாவது"

சிகரட் பழம் எனக்குப் புளித்தது.

❤ ❣ ❤ ❣ ❤

காதல் கதையில் இப்போதுதான் திருப்பம்.

அதே பேராதனைப் பூங்கா...

அதே நான்...

அதே 'ஷர்மி'...

ஆனால் அவள் விழிகள் கலங்கிப் போய்...

"ஐ யாம் ஸாரி" என்றாள்.

"காதலித்துட்டு மன்னிப்புக் கேக்கறது தப்பு..."

"ஆனாலும் முடியல..."

"ஏன்?"

"டாடி ஹார்ட் பேஷன்ட். ஆபரேஷனுக்காக இந்தியாவுல அப்பலோவுக்குப் போய் நிறைய லட்சங்கள் கடன் பட்டுட்டாரு. அதனால என்னை என் அத்தை மகனுக்கே கட்டி வைக்கப் போறாங்க. ஏன்னா...டாடி கடன் வாங்கினது என் அத்தை மகனிட்ட.. அதனால நீங்க என்னை மறந்துடுங்க..." அவள் அழுதாள். நான் எனக்குள் உடைந்தேன்.

என்னால் மறக்க முடியவில்லை.

ஏனெனில் இது 'காதல்'

காதல் கடன்பட்டு விட்டு அவள் போய்விட்டாள்.

நான் வீடு வந்து நிறைய அழுதேன்.

ஆனால் கண்ணீரில் காதல் என்றும் கரைவதில்லை.

மூன்றாம் நாள் "ஷர்மி"யின் கல்யாண அழைப்பிதழ் வந்தது.

வீட்டில் எல்லோரும் கல்யாணத்துக்குப் போய்விட....

நான் மட்டும் போகவில்லை.

மீண்டும் நிறைய.... நிறைய சிகரட் புகைத்தேன்.

சிகரட் என் காதல்!

✕ ♥❣♥ ✕

இப்போது நான் நிரம்பவும் மாறியிருந்தேன்.

இலேசாய் தாடிப்பயிர் வளர்த்திருந்தேன்.

சிவில் இன்ஜினியராக வேலையும் கிடைத்திருந்தது.

'ஷர்மி' போய் இரண்டு வருடங்கள் ஆகியிருக்கும்.

எப்படியோ...அவளைப் பலவந்தமாக மனதுக்குள் மறந்திருந்தேன்.

ஆனால் 'காதல்' மட்டும் மனதுக்குள் ஞாபகமாய் இருந்தது.

இப்படியிருக்க ஒருநாள்:

எனது நண்பன் என்னை 'அங்கே' அழைத்துப் போனான். மன ஆறுதலுக்கு மருந்து என்று சொன்னான். அதுவொரு 'பலான' இடம். குற்ற மனதோடு போனேன்.

சம்பிரதாயங்கள் முடிவடைந்து.....

நானும் அந்த 'மாதிரியான' அவளும் தனியறையில் தனித்து விடப்பட்டோம். 'ரேட்' கொஞ்சம் அதிகம் என்று ஆரம்பத்தில் தோன்றிய எனக்கு, இப்போது அது நியாயம் என்றே தோன்றியது. இன்னும் ஐநூறு மேலே போட்டுக் கொடுக்கலாம். அந்த அவள் அழகாயிருந்தாள். ஹாலிவுட் முதல்தர நடிகை டெமிமூர் பிச்சை வாங்கவேண்டும் அவளிடம்.

இரண்டு மணித்தியாலங்களுக்குள்....

அவளது சோகக் கதை கேட்டேன்.

அவள் பேசுவதற்கு உதடுகளைத் திறந்ததைவிட, போதை முத்தங்களுக்காக உதடுகளை விரித்ததே அதிகம். ஐஸ்கிறீம் உதடுகள் அவளுக்கு.

'சிக்' கெனக் கொஞ்சம் பேசினாள்.

கிக்காக-கிறக்கமாக நிறையத் தழுவினாள்.

என்னால் நழுவ முடியவில்லை.

இதமான சொர்க்கலோகப் புதுச்சுகம்.

எல்லாம் முடிந்து, ஓய்ந்து, எழுந்து வெளியேறும் முன் நான் அவளிடம் மெல்லமாய்-தீர்மானமாய்க் கேட்டேன்.

"நாம காதலிக்கலாமா?"

அவள் சட்டென அதிர்வது தெரிந்தது.

விலை போனாலும் அவளும் மாது தானே?

மீண்டும் கேட்டேன்.

"நெஜமா நாம காதலிக்கலாமா?"

---

# சாதி

**ரூபராணி**

"அவன் வாயிலிருந்து வந்த ஒவ்வொருவார்த்தையும் சவுக்கடியாய் விழுந்தது."



இரவு முழுவதும் ஓயாத ஷெல்வீச்சு. உயிர்போவதும் வருவதுமாயிருந்தது செல்லம்மாவுக்கு. பேரப்பிள்ளை அருணாவை அணைத்தபடி வண்டிலுக்கடியில் படுத்திருந்தாள். மூன்று நாட்களுக்கு முன்பு தன் ஒரே மகள் றஞ்சிதாவுக்குச் சூடுபட்டது. "அம்மா என்ரகுஞ்சு.." என்று அவள் சொல்லி முடிப்பதற்கிடையில் துடிப்பு அடங்கிப் போனது எல்லாம் செல்லம்மாவின் நினைவில் எட்டிப்பார்த்தன. கடைவிழிகளில் இருந்து கன்னங்களில் வழிந்த நீரை விரலால் சுண்டினவள் "பெருமானே! பழம் இருக்கேக்க பிஞ்சு விழுந்துபோச்சே" என்று முனகியபடி கண்ணயர்ந்து போனாள்.

வேட்டுச்சத்தங்களுடன் வேகமாகப் பொழுதும் புலர்ந்தது. வீடுவாசல் பாத்திர பண்டங்கள் எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்தாள் செல்லம்மா, எடுத்துச்செல்வதற்கென்று என்ன இருக்கிறது? காலங்காலமாகச் சேர்த்ததெல்லாம் கணப்பொழுதில் அழிந்து விட்ட அவலம் அவள் நெஞ்சை அடைத்தது. "அம்மா என்ர குஞ்சு..." றஞ்சிதாவின் ஈனக்குரல் மறுபடியும் செல்லம்மாவின் காதில் ஒலித்திருக்க வேண்டும். ஆவேசம் வந்தவள்போல் அருணாவை இழுத்துக்கொண்டு மாதகல்லை விட்டுப் புறப்பட்டு விட்டாள்.

செல்லம்மா அரண்மனைக்குச் சொந்தக்காரி இல்லை என்றாலும் அழகிய வீடுவாசல் வைத்து ஆட்சிசெலுத்தியராணி, பேரோடும் புகழோடும் வாழ்ந்தவள். வட்டிக் கணக்குப் பார்க்க வாசலில் வந்து நிற்கும் கூட்டம் நிச்சயம் அவளை மறக்க முடியாது.

செல்லம்மாவுக்கு ஐம்பது வயதானாலும் திடகாத்திரமானவள். அருணாவைத்தூக்கியும் நடத்தியும் ஒருபடியாய் ஒருமைலைத் தாண்டி விட்டாள். "பெத்தாச்சி... கால் வலிக்குது, பசிக்குது." அருணா அரற்றினாள், செல்லம்மாவின் இதயம் வலித்தது. மூக்கில் வடிந்த நீரை முந்தானையால் துடைக்கப் போனவளை அடிமடியில் இருந்த அரிசிக் குறுணல் வருடியது. அவள் முகத்தில் வந்த களை சட்டென்று வடிந்து போயிற்று. குறுணலைக் கூழாக்கித் தானும் பிள்ளையும் வயிறாறலாம் என்றால் சட்டி பானைக்கு எங்கே போவது? செல்லம்மாவுக்குத் தொலைவில் தெரிந்த ஒரு சின்னவீடு வயிற்றில் பாலை வார்த்தது. அங்குபோய்க் கூழ் காய்ச்சிக் குடிப்போம் என்று ஆசை காட்டி அருணாவை நடத்திச் சென்றாள்.

பனை ஓலையும் தகரமும் அந்தச் சின்னஞ்சிறு வீட்டின் வறுமையைப் பறைசாற்றின. எது எப்படியோ செல்லம்மா வந்து சேர்ந்துவிட்டாள். முற்றத்து மணலில் பனங்கொட்டைகள் சில தலைவிரித்துக் கிடந்தன. முழங்காலைக் கையால் தேய்த்தபடி உட்கார்ந்தவள் மடியில் அருணா முகம் புதைத்து அழுதாள்.

அரவங்கேட்டு வெளியே வந்தவன் வைரமுத்து. செல்லம்மாவுக்குப் 'பகீர்' என்றது, ஆயிரந்தேள் அவள் உடலில் ஒரேசமயத்தில் கொட்டிய உணர்வு, வைரமுத்து வேறுயாருமல்ல; செல்லம்மாவின் காணியில் கள்ளிறக்கியவன். 'உவனை எல்லாம் வீட்டுக்குள் எடுக்கமாட்டம். பின்வளவில் கைகட்டி நிற்பவனின் காலடிக்கல்லோ வந்திட்டம்' மனசுக்குள் நினைவுகளோடு போராடினாள் செல்லம்மா, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தாள். "பெத்தாச்சி.. பசிக்குது" புறங்கையால் கண்ணைத் தேய்த்து அழுதாள் அருணா. வைரமுத்துவிடம் எதையும் கேட்கும் நிலையில் செல்லம்மா இல்லை.

அருணாவின் பிஞ்சுமுகத்தைப் பரிதாபமாகப் பார்த்த வைரமுத்து உள்ளே போய் இரண்டு கோளாவில் ஒடியல் கூழை வார்த்து வந்துநீட்டினான். பசியின் கொடுமை அருணா அதைப்பருகிய விதத்தில் தெரிந்தது. வைரமுத்துவின் கண்களில் நீர் பனித்தது. ஆறுமாதங்களுக்கு முன்னால் பலியாகிப் போன அவன் மனைவியும் மகளும் நினைவில் வந்தனர்.

கோளாவைக் கையில் ஏந்தியபடி யோசனையில் ஆழ்ந்துபோன செல்லம்மாவைப் பார்த்த வைரமுத்து, "அம்மா உங்களின்ர நினைப்புப் புரியுது. நான் சாதியில குறஞ்சவன்தான், ஆனா நானும் மனுஷன். அதுவும் மனுஷத்தன்மை உள்ள தமிழன். பசியெண்டா என்னவெண்டு தெரிஞ்சவன்" என்று பவ்யமாகக் கூறினான். அவன் வாயில் இருந்து வந்து ஒவ்வொரு வார்த்தையும் செல்லம்மாவின் இதயத்தில் சவுக்கடியாய் விழுந்தது. முகம் மலரக் கூழைக் குடித்தவள், அரிசிக் குறுணலையும் வைரமுத்துவிடம் கொடுக்கத் தவறவில்லை.

செல்லம்மாவின் மனதில் சொல்ல முடியாத ஒரு அமைதி. அருணாவின் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு பாதுகாப்பான இடந்தேடி அவள் மீண்டும் நடக்கத் தொடங்கி விட்டாள்.

---

# விளையாட்டுப் பிள்ளைகள்




"எங்கேடா சாவி?" வாசற்கட்டில் நின்றும் சாய்ந்தும் வெவ்வேறு "போஸ்" கொடுத்த நண்பர்களான பாஹிமையும் பாஹிரையும் (இரட்டைப் பிறவிகள்) பார்த்துக் கேட்டான் நபீஸ்.

"சாவியா? நீ வாங்கி வரலியா? நீ போய் வாங்கி வருவேன்னு நினைச்சு நாங்களும் வாங்காம வந்திட்டோம்." நண்பர்கள் திருதிருவென விழித்தபடி பதிலிறுக்க நபீஸுக்கு கோபம் கோபமாய் வந்தது.

சுட்டெரித்தது வெயில். இந்த வெயிலில் இனி நடை நடந்து வீட்டுச் சொந்தக்கார ஆண்ட்டியிடம் போய் சாவியை வாங்கி வந்து குளித்து, சாப்பிட்டு பின்னேர கிளாஸுக்குப் போய்.. ஓய்வில்லாத அலைச்சல்.

நபீஸ், பாஹிர், பாஹிம் மூன்று பேரும் கல்லூரி மாணவர்கள். கண்டியிலுள்ள பிரபல கல்லூரியது. நல்ல கெட்டிக்கார மாணவர்கள். இருந்தும் குறும்புக்கும் கும்மாளத்துக்கும் குறைவில்லை. விளையாட்டு இல்லாத வாலிபம் ஏது?

ஒருவரையொருவர் ஏமாற்றிச் சிரிப்பதும், குறும்புகள் செய்வதுமென நேரம் கழியும். பாடசாலைக்கருகில் வீடொன்றை வாடகைக்கமர்த்தியிருந்தனர். வீட்டுச் சொந்தக்காரரின் வீடு இரண்டு தெருக்கள் தள்ளியிருந்தது. காலையில் வீட்டுத் திறப்பை அங்கு கொடுப்பதும் பின் வீடு திரும்பும் போது எடுத்து வருவதும் வாடிக்கை.

இன்று நபீஸ் சற்றுத் தாமதமாக வர நேர்ந்து விட்டது. மற்றைய இருவரும் திறப்பை வாங்காமலேயே வந்துவிட்டதை தெரிந்து திட்டிக் கொண்டே நடந்தான் நபீஸ். "நேரத்தோடு வந்ததல்லாமல் சாவியையும் வாங்காம வந்து நரி மாதிரி வாசலில் நிற்கிறான்கள்..." முணுமுணுத்தவாறு வீட்டுச் சொந்தக்காரரின் வீட்டை அடைந்தான்.

முன் "கேட்" மூடியிருந்தது. வழமை போலவே அதைத் திறக்காது மேலால் ஏறிப் பாய்ந்து கடந்தான். சி என்ன ஏமாற்றம். வாசலில் பூட்டு தொங்கியது. ஐயோ.. எங்கேயோ போய் விட்டார்கள். "இனி எப்படி. எப்போது சாவியை வாங்கி.....ம்...." மானசீகமாய் எரிச்சல் அதிகரிக்க வாசற்படியில் உட்கார்ந்தான்.

யுகமாய்க் கழிந்தது அரைமணித்தியாலம். இறுதியில் ஆண்ட்டி வந்தார். "என்ன மகன் இங்கே..?" விசாரித்தார். "ஆண்ட்டி.. சாவி..." இழுத்தான் நபீஸ். "சாவியா? அதை அப்பவே வாங்கிட்டு போய்ட்டாங்களே பாஹிரும் பாஹிமும்! ஏன் அவங்க அங்கே இல்லியா? ஒருவேளை மூடிட்டு எங்கேயாவது போய்ட்டாங்களோ.. என்னவோ? சாவியக் கொடுத்தப்புறம் தான் நான் டவுனுக்குப் போனேன்."

ஆண்ட்டி வசனத்தை முடித்துப் பார்க்கையில் நபீஸைக் காணவில்லை.

◇ ◇ ◇

"ஹி..ஹ்ஹி..ஹி.." என இளித்த நண்பர்களைப் பார்க்காது, பேசாது புறப்பட்டுப் போனான் நபீஸ். அவ்வளவு கோபம்.

மாலை. புத்தகங்களைப் புரட்டியவாறு மூவரும் உட்கார்ந்திருந்த போது டெலிபோன் ஒலித்தது. (புதிய இணைப்பு. வீட்டுச் சொந்தக்காரர் வீட்டில் தொலைபேசி இல்லை. ஆகவே, அவருக்கு வேண்டிய தகவல்கள் இங்கேதான்வரும். தகவல் கடத்துவதும் மூவரினதும் சம்பளமில்லாத வேலை.)

வழமைபோல் நபீஸ் தான் ரிசீவரை எடுத்தான். "ஹலோ" - வீட்டின் முன் பிரதான வீதி. ஓவென்ற இரைச்சலுடன் வாகனங்கள் செல்ல. "ஹலோ" என்பதை அதிகமாகவே சப்தமாய்க் கூறினான்.

"ஸ்... மெதுவா பேசுங்களேன்..." வழமைக்கு மாறான பெண்குரல் இனிமையாய் ஒலித்தது. "நீங்க யார் பேசுறீங்க? யாருக்கு பேசணும்?" நபீஸ் கத்தினான். மறுமுனை சிரித்தது. "பாஹிம் இருக்காரா? நான் அவரோட ம்... அவரோட... பேசணும்" மென்மையாய் ஒலித்தது.

பாஹிம் நடுங்கி விட்டான். 'அப்படி யார் தான்? அதுவும் என்னோடு?' "உங்களோட டியூசன் வரும் ரஷ்னா நான்- சும்மா பேசிப் பார்க்க நினைத்தேன். அதுதான். எப்படி இனி? என்ன செய்கிறீர்கள்? நாளைக்கு கிளாஸ் வருவீங்களா...?" எனத் தொடர்ந்து ஒலித்த குரல் பாஹிமை சிலிர்க்க வைத்தது.

ஆஹா.. ரஷ்னா.. பாஹிமின் இதயத்தில் ஒரு மூலையில் அவளைப் பார்க்கும் போதெல்லாம் குளிர்ச்சியாய் சில்லிடும். கடைக் கண்ணால் பார்ப்பான். லேசான புன்னகை சில நேரங்களில். இதுவரை பேசியதில்லை. ஆனால் இன்று? கனவா இது உண்மையா என தன்னைத் தானே கிள்ளிப் பார்த்தான் பாஹிம். ஏதோ உளறி வைத்தான். டெலிபோனை வைத்த பின்னும் வியர்த்தது. பாஹிர் சிரித்தான். "அடிச்சாச்சு லக்கி பிரைஸ்.." என்னும் பாடல் வேறு நபீஸும் சிரித்தான்.

நிறையக் கனவுகளோடு பாஹிம் தூங்கிப் போனான். காலையில் கல்லூரியிலும் இதே கதை.

மாலை. டியூசன் வகுப்பு செல்லும் வரை நிலை கொள்ளவில்லை. மூவரும் சற்று அதிகப்படி கவனமெடுத்து உடை உடுத்தி. தலைவாரி வகுப்பை அடைந்தபோது ரஷ்னா வாசலில் நண்பியருடன் நின்றிருந்தாள். புன்னகையோடு விசாரித்தான் பாஹிம். அவள் முகமாற்றத்தைக் கண்டு திகைத்தான். "பைத்தியமா? நான் "கோல்" பண்ணவேயில்லை." அவள் கடுகடுப்பாய்க் கூறிவிட வாடிப்போன பாஹிம் நபீஸின் முகத்தைப் பார்த்தான்.

"எனக்குத் தெரிந்த ஒருகேர்ள் கிட்ட உனக்கு இப்படி "கோல்" பண்ணச் சொன்னதே நான் தான். நேற்று சாவிக்காக என்னை அலைய வைத்த உங்களை சும்மா விடலாமா? என் ஆத்திரம் தீர வேண்டாமா?" கூறிய நபீஸை துரத்தியபடி ஓடினார்கள் நண்பர்கள் இருவரும்.



படிப்பகம்

www.padippakam.com



"எனக்குப் பயமாக இருக்கிறது" என்றாள் சொர்ணா.

"ஏன் பயம் களவா செய்கிறோம்; காதல்தானே செய்கிறோம்! நாசமா செய்கிறோம்: நேசம்தானே கொள்கிறோம்!"

என்றான் இளமாறன். போர்வீரன் ஒருவனுக்குரிய தோற்றம் அப்படியே இருந்தது. இடையில் தொங்கிய நீண்டவாள் அவன் ஒரு போர் வீரன்தான் என்று அடையாளம் காட்டியது.

"உங்களுக்கு என்ன சொல்லுவீர்கள். ஊரார் கண்கள் பட்டுவிட்டால், வீட்டார் கணைகளில் இருந்து நான் தப்பமுடியாது!"

என்றாள் சொர்ணா. இளமாறனை தனது மடியில் தலைவைத்து சாய்ந்திருக்க அனுமதித்திருந்தாள். சாய்ந்தவன் மல்லாந்திருந்தான் என்பதால், சொர்ணாவின் மார்புகளால் முகத்தில் மோதப்படும் அபாயத்தில் இருந்தான்.

பேசும் போதும், அசையும் போதும் அவனது இடது கன்னத்தில் மெல்லப் பட்டு விலகும் இதம் அவனுக்குத் தேவையாக இருந்தது. அவளுக்கோ அவஸ்தையாக இருந்தது. என்றாலும் அந்த அவஸ்தையை அவள் மனம் விரும்பி ரசித்துக் கொண்டிருந்தது. கையொன்றை நீட்டி முதுகின் கீழே செலுத்தி அவனை வளைத்துக் கொண்டான். முறைத்தாள்.

"இவ்வளவுதான். வேறொன்றும் செய்ய மாட்டேன். என்ன சொன்னாய்? பயம் என்று சொன்னாய்."

"அதற்கு நீங்கள் பதில் சொல்லி, அதற்கும் பதிலாய் நான் விளக்கமும் சொல்லி விட்டேன்! நீங்கள் நிச்சயமாக இங்கில்லை!"

"ஆம் சொர்ணா ஆம்! நான் வெளியே இல்லை! விளக்கில் இருக்கும் திரிபோல நான் உனக்குள் இருக்கிறேன்!"

"திரி என்றால் எரிந்து விடுமே?"

"அதுதான் பற்றவைத்துக் கொண்டிருக்கிறாயே!" என்றான் முகம் எதிரே தொங்கும் கனிகளை கண்களால் விழுங்கிக்கொண்டு.

"இடம் தந்தது தவறு!"

"இதயத்திலா?"

"மடியில்."

"நெஞ்சில் இருப்பது மெய்யானால்.."

"என்ன?"

"நான் உன் நெஞ்சில் இருப்பது மெய்யானால், இந்தச் தந்தச் சிலையே எனக்குத்தானே!" முதுகில் கை படர்ந்தது. படர்ந்த கரம் அழுத்த முன்நோக்கி தள்ளப்

## தருவது ரசிகன்



# வசை நேய்

பட்டதில் ஏற்பட்ட விளைவில்தான் அவனது விஷம நோக்கம் புரிந்தது. முகம் வெட்கிச் சிவக்க, முறைத்தாள்.

"முத்துமாலை என்ன புதிதா?" வலது கரத்தால் முத்துமாலையைத் தொட்டுப்பார்த்

# இலக்கிய நயம்

தான். அவன் நோக்கம் புரிந்தது. புரியாதது போல, "இல்லை" என்றாள். அவன் விரல்கள் நடுங்கியது. திருடனுக்கு வரும் நடுக்கம். திருடனுக்கு சற்று துணிச்சல் வந்தது.

"வேண்டாம்!" என்றாள்.

"ஏன்?"

"யாராவது வரப் போகிறார்கள்!"

"வரட்டுமேன்"

"நான் தொலைந்தேன்!" என்றாள் அவனை அனுமதித்துக் கொண்டு. வயிற்றில் முகம் புதைத்துக் கொண்டே உதடுகளை அசைத்து, "நான்தான் தொலைந்து கொண்டிருக்கிறேன்" என்றான்.

▫ ▫

"சொல்லடி உண்மை தானா?" என்று கேட்ட சொர்ணாவின் தந்தையின் வார்த்தைகளில் ஈட்டியின் கூர்மை இருந்தது.

தெரிந்து விட்டது. வெண்ணெய்க்குள் உள்ள நெய்யாக அவள் நெஞ்சுக்குள் மறைந்திருந்த காதல். திரை விலகிய விக்கிரம் போல ஊரார் பார்வையில் பட்டுவிட்டது. வீடு வரை ஊர்வாய் நீண்டு சொல்லி விட்டது.

புற்றுக்குள் புகுந்த பாம்பு போல, பயத்துக்குள் பதுங்கியது அவள் நெஞ்சுக்குள் படமெடுத்தாடிய காதல்.

ஊர்வாயை மகுடியாக நினைத்து இப்போது படமெடுத்தாடிக்கொண்டிருந்தார் தந்தை. இறுதியாக வீசினார் தந்தை. சாட்டைக்குப் பதிலாக வார்த்தைகளை!

"காதலாம் காதல்! என்னடி பெரிய காதல்! ஒருவாரம் வீட்டுக்குள் பூட்டிவைத்து பட்டினிபோட்டால் தெரியுமடி, பஞ்சாய் பறந்து விடும்!"

அந்த வார்த்தைகள்தான் அவளுக்குள் வன்மம் வளர்த்தன.

'அத்தனை கேவலமா காதல்!

உயிரின் துடிப்பை உணவோடுதானா முடிச்சுப்போடுவது? உடல் வாழத்தானே அன்னம்; அந்த உடல் போனாலும் அழியாதது அல்லவோ காதல் என்னும் வண்ண எண்ணம்!'

அப்பா போனபின்னர் அம்மா தொடர்ந்தாள். அவளும் பக்குவமாய் பேசவில்லை. இன் சொல்லால் வருடி ஏற்றவழி காட்ட முயலவில்லை. எரியீட்டிதான் அவளும் வீசினாள்.

"கொழுப்போடி உனக்கு? காலை முறித்துப் போட்டால் தெரியுமடி உனக்கு!"

'காதலுக்கு கால்கள் எதற்கு? எங்கிருந்தாலும் எண்ணங்கள் சிறகுமுளைத்து பறக்குமன்றோ! ஒன்றையொன்று தழுவுமன்றோ!' மனதில் நினைத்துக் கொண்டாள்.

யாருமே வருடிக்கொடுக்காமல் வசையாகப் பொழிந்தனர். தான் மட்டும்தான் இங்கே தனி. அவன் மட்டும்தான் தனக்கு துணை என்று அவளை நினைக்கவைத்தனர்.

தந்தையும், தாயும், ஊரும் வசைவாளை ஏந்திக்கொண்டு அவளை நோக்கிப் பாய்ந்தது. முற்றுகையிட்டது.

முதலில் பயந்து பின்வாங்கினாள். அத்தோடு விட்டிருக்கலாம்.

தொடர்ந்து துரத்தினார்கள். வசைவாள் தொடர்ந்து வீசப்பட்டது. இனியும் முடியாது என்ற எல்லையில், புற்றுக்குள் இருந்து சீறியெழும் பாம்பாக, பயத்துக்குள் சுருண்ட காதல் புயலாய் சுழன்றடித்துப் புறப்பட்டது.

எதிர்ப்பு எப்படியிருக்குமோ என்று பயந்தவளை நோக்கி, ஒரே வீச்சில் தமது பலம் முழுக்க பிரயோகித்து, எதிர்ப்பின் நீள அகல உயரத்தை, இவ்வளவுதான் என்று காட்டிவிட்டார்கள்.

☆ ☆

அதே அருவிக்கரை. அதே அவன். ஒரு மாற்றம், அவன் மடியில் தலை சாய்ந்தபடி அவள்-சொர்ணா.

அவன் கேட்டான்;

"சொர்ணா! சொன்னால் கோபப்பட மாட்டாயே!"

"என்ன?"

"இன்று ஆச்சரியமாக இருக்கிறது!"

"என்ன?"

"வழக்கமான பயம் எங்கே போயிற்று?"

"முளைவிட முன்னர் பயமிருந்தது. இப்போது நம் காதல் வேர்விட்டு விருட்சமாயிற்று. ஊருக்கும் வெளிச்சமாயிற்று! இனி ஏன் பயம் வரவேண்டும்?"

அவன் அவளை ஆச்சரியமாய் நோக்கி விட்டுச் சொன்னான்;

"நன்றி, உனக்கல்ல சொர்ணா; ஊருக்கு!"

"ஏன்?"

"நெய் வார்த்துவிட்டதற்கு! நெருப்பை நெய்யால் அணைக்க நினைப்பது போன்றதுதான், பழிச் சொல்லால் காதலுக்கு குழிவெட்ட நினைப்பதும்!"

"அடடே.. அருமையான உதாரணம்! சொன்ன வாய்க்கு.."

"சொன்ன வாய்க்கு?"

"பாராட்டுக்கள்!"

"அடச்சே.. பரவாயில்லை, சொன்னது நான் அல்ல, திருவள்ளுவர்!"

"எங்கே குறளைச் சொல்லுங்கள்."

"குறளைச் சொன்னவுடன் தேன் சுளையைத் தரவேண்டும். இதோ குறள்.

**"நெய்யால் எரிநுதுப்போம் என்றற்றால் -கௌவையால்**
**காமம் நுதுப்பேம் எனல்"**

(கௌவையால்= பழிதூற்றலால்.)

குறள்-1148. அதிகாரம்-115

## குறுக்கெழுத்துப் போட்டி இல-137

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | ■ | 3 | ■ |
| ■ | | ■ | 4 | | | |
| 5 | | | | ■ | | ■ |
| | ■ | 6 | ■ | 7 | | |
| 8 | | | | ■ | | ■ |
| | ■ | 9 | | | ■ | 10 |
| | ■ | ■ | 11 | | | |

### இடமிருந்து வலம்

01. அரசியல் வாதிகளில் சிலர் இதனை அணிவதில் அக்கறை காட்டுகிறார்கள்.
04. சிறப்பாகவும் பொருள் பொதிந்தும் காணப்பட்டால் இதனால் பலரும் சிறப்படைவார்கள்.
05. வடபுலத்து அகதிகளுக்கு போதுமான இவ்வசதி கிடைக்கவில்லை.
07. இளைஞனுக்கும் அரசியல் வாதிக்கும் இது அவசியம். ஆனால் இது தானாக வரவேண்டும்.
08. கதிரவனின் கடமை தவறாமல் இப்படி நடக்கும்.
09. இசைக்கும் பேர்போனது.
11. தம் பிள்ளைகளிடத்தில் பெற்றாருக்கு இது இல்லாதிருக்க முடியாதே!

### மேலிருந்து கீழ்

02. பணம் தேவைப்பட்டால் பலரும் இங்கு தான் ஓடுவார்கள்.
03. இந்நிலை ஏற்படும் பட்சத்திலும் சிரிக்கும்படி வள்ளுவரே கூறியிருக்கிறார்.
05. இதில் பெயர்பெற்றவர்களில் ஒருவர் ரவிவர்மா.
06. சக்கரம் சுத்தவேண்டுமானால் இதன் உதவி அவசியம்..
10. சகுனம் பார்ப்பவர்களுக்கு இது வேண்டாதது.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 03.02.1996இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-137
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-135ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 நு | க | ர் | ■ | 2 மி | யா | 3 மி |
| கு | ■ | 4 க | டு | க் | க | ன் |
| 5 ல | 6 கா | ன் | ■ | ■ | ■ | சா |
| ன் | 7 மு | று | க் | கு | ■ | ர |
| ■ | க | ■ | 8 மி | ரு | 9 க | ம் |
| 10 கீ | ர் | த் | தி | ■ | ட | ■ |
| ரை | ■ | 11 இ | லை | யா | ன் | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 135இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. என். காயத்திரி, பம்பலப்பிட்டி.
2. கே. பாஸ்கரன், கொட்டகலை.
3. செல்வி. என்.நஸீரா, மூதூர்.
4. எம். அமீன், ஹாலி-எல.
5. பி. வரதராஜன், நீர்கொழும்பு.
6. எவ். அருஸியா, கலுத்துறை தெற்கு.
7. ஆர். பாலகிருஷ்ணன், மாத்தளை.
8. திருமதி. விமலாதேவி துரைராஜா, வாழைச்சேனை.
9. பி. அஹமட், காத்தான்குடி.
10. ஜெ.ஞானப்பிரகாசம், சிலாபம்.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# சிந்தியா பதில்கள்

**★ அன்று கப்பல் ஓட்டியவன் தமிழன், கடல் கடந்தவன் தமிழன்... இன்று?**

எம். மகேந்திரன், இந்தகல மேற்பிரிவு.

கப்பலில் ஓடிக்கொண்டிருக்கிறான், திரவியம் தேடியல்ல: உயிரை திரவியமாக கையில் பிடித்துக்கொண்டு! கடல் கடந்த தமிழனின் பாரம்பரியத்தை காப்பதற்காகத் தான் கிளாலி கடல் ஏரிப் பாதை நிரந்தரமாகிவிட்டதோ?!

••

**★ என்.டி. ராமராவ் மறைந்துவிட்டாரே, அவரது வாரிசு யார்?**

கே. ஜெயந்தன், கொழும்பு-11.

பார்வதிக்குத்தான் வாய்ப்பு அதிகம். எம்.ஜி.ஆரின் இறுதிச்சடங்கில் ஜெயலலிதாவை அவமானப்படுத்தினார்கள். அவருக்கு அரியாசனம் கிடைத்தது. அதே ஸ்டைலில் பார்வதியை தள்ளி விழுத்தியிருக்கிறார்கள். அனுதாபம் திரளப் போகிறது பாருங்கள். அதற்குப் பின்னர் சாவுவீட்டில் தள்ளி விழுத்தப்படுவதுதான் நல்ல சகுனம் என்றாகிவிடும். யாராவது தள்ளி விழுத்தா விட்டாலும் ஆள்வைத்து தம்மை தள்ளிவிடச் சொல்லப் போகிறார்கள் அரசியல்வாதிகள்.

••

**★ ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும், புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை என்ன? வேறுபாடு என்ன?**

எஸ்.எஸ். ராஜ்மோஹன், லுணுகலை.

ஒற்றுமை: இருவருமே பாதுகாப்பில்லாமல் வெளியே வர முடியாது. வேற்றுமை: பல உண்டு. அதில் ஒன்று, பின்னவர் விசாரணைக் கமிஷன்கள் வைப்பதில்லை. உடனே தீர்ப்புத்தான்.

••

**★ ஒரு சிறந்த பாடல் எப்படியிருக்க வேண்டும்?**

கு.பிரேமாவதி, ஹட்டன்.

இலங்கை வானொலி தமிழ் சேவையில் நினைவூட்டுகிறோம் நிகழ்ச்சியில் செவிக்குள் தேன் கொட்டும் பாடல்கள் சிலவற்றை அனுபவிக்க முடிகிறது. நீங்களும் கேட்டுப் பாருங்கள். புரியும்!

••

**★ திரைப்பட நடிகர்கள் அரசியலுக்கு செல்வது பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?**

சி. புஷ்பராஜ், இறக்குவானை.

நடிகர்கள் அரசியலில் ஈடுபடுவது தவறில்லை. நடிகர்கள் என்ற தகுதியை மட்டும் வைத்துக்கொண்டு அரசியலில் ஈடுபடுவதுதான் தவறு.

••

**★ வாணி-கமல், டயானா-சாள்ஸ், ஒப்பிடுக?**

வ. சிவயோகநாதன், திருக்கோணமலை.

ஒத்துப்போகவில்லை என்பதைப் புரிந்துகொண்டு சர்ச்சையில்லாமல் உறவை கத்தரித்துக் கொண்டவர்கள் முன்னவர்கள். ஒத்திருக்க முடியாது என்று நூறு வீதம் தெரிந்த பின்னரும் வம்பு வாய்களுக்கு மெல்ல அவல் கொடுத்துக் கொண்டிருக்கும் ஜோடி பின்னது.

••

**★ ரஜினிகாந்த் எப்போது அரசியலுக்கு வருவார்? சரியாக சொல்லும் பார்க்கலாம்?**

எல். நூர்ஜஹான், பாணந்துறை.

அது ஆண்டவனுக்குத்தான் தெரியும் என்கிறார் ரஜினி: அவனிடம் கேட்கலாம் என்றால் ஆளையே காணவில்லை. ஆனால் ஒன்று, மரம் ஓய்வை விரும்பினாலும் காற்றுவிடாது என்பது ரஜினி விஷயத்தில் சரி. காற்று- அரசியல்வாதிகள்.

••

**★ நீதி தரவேண்டியவர்களே நீதி தவறினால் என்ன செய்யலாம்?**

ஏ. சுந்தரம், கண்டி.

நீதி சொல்ல வேண்டியோர் தவறுவது என்பது தொன்றுதொட்டே நிகழ்ந்துவரும் ஒரு செயல். அதனால் ஔவையாரும் மிக மிக வருத்தப்பட்டிருக்கிறார். நீதி தவறுவோருக்கு சாபமிட்டு ஔவையார் ஒரு பட்டியலே நீட்டுகிறார்.

நீதி தவறுகிறவர் வீட்டில் என்னவெல்லாம் நடக்கும் தெரியுமா?

"வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே-மூதேவி
சென்றிருந்து வாழ்வாளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை."

••



**★ ராமராவின் புதல்வர் தனது தந்தையின் மரணத்தில் சந்தேகம் கிளப்பியிருக்கிறாரே! உண்மை இருக்குமோ?**

எஸ். பவானி, கொழும்பு-5.

அது பாசத்தைக் குறிக்கவில்லை. பதவி ஆசையைக் காட்டுகிறது. பார்வதியை வாரிசுப் போட்டியில் இருந்து விலக்க சந்தேகக் கணை வீசப்படுகிறதே தவிர வேறொன்றுமில்லை.

••

**★ இ.தொ.கா. எதிர்வரும் குட்டித் தேர்தல்களில் பொதுஜனமுன்னணியோடு இணைந்து போட்டியிடுமா?**

கோ.மாரிமுத்து, அவிசாவளை.

தேர்தல் நெருங்கும் வரை முடிவைச் சொல்லாமல் புதிராகப் பேசுவார் தொண்டா. ஆனால் அவரது ஸ்டைலை புரிந்தவர்களுக்கு இப்போதே முடிவுதெரியும். ஆம். இணைந்து போட்டியிடும்!

••

**★ என்.டி.ராமராவ் மரணத்தால் யாருக்கு லாபம்?**

என்.வாகீசன், புத்தளம்.

பார்வதிக்கு.

••

**★ எதிர்வரும் தமிழக சட்டமன்றத் தேர்தலில் வெற்றியாருக்கு? கருணாநிதி முடி சூடுவாரா?**

பா. யோகேஸ்வரன், சிலாபம்.

வாக்குகள் சிதறினால் ஜெயலலிதாவுக்கு வெற்றிமுகம்! இ.காங்கிரஸ் கூட்டில்லாமல் தி.மு.க. ஆட்சியை பிடிப்பது சந்தேகம்தான். ஜெயலலிதாவோடு காங்கிரஸ் கூட்டுச் சேர்ந்தால் வெற்றிக்கு நூறுவீத உத்தரவாதம்.

••

**★ 'யாதும் ஊரே யாவரும் கேளிர்- எழுதியவர் யார்?**

வீ. நம்பிராஜ், மட்டக்களப்பு.

கவிஞர் பூங்குன்றனார்.

••

**★ அரசியல் தீர்வு யோசனை தீர்வைத் தருமா சிந்தியா?**

பி.ராஜேந்திரன், கொழும்பு-7

அதுதான் ஜனாதிபதியே சொல்லி விட்டாரே, தீர்வை எட்ட பல வருடங்கள் செல்லும் என்று. அவருக்கே தெரிகிறது தீர்வு யோசனை முடிவல்லவென்று.

••

**★ முத்தையா முரளிதரன் விடயத்தில் அவுஸ்திரேலிய நடுவர் மன்னிப்புக் கேட்டு விட்டாரல்லவா?**

ஆர். அன்வர் சதாத், கல்முனை.

யாருக்கு வேண்டும் அவர் மன்னிப்பு? நடுவர் வேலைக்கே தான் இனி லாயக்கில்லையென்று அவர் சொல்லியிருந்தால் மன்னிக்கலாம். தமது மண்ணில் உள்ளவரையும் ஆடாமல் செய்துவிட்டு, வெளியேறும்போது 'வெரி சொறி' சொல்வது என்ன நியாயம்?

••



படிப்பகம்

www.padippakam.com


# இராமாயணம் அங்கம் 17

## நாடாள வேண்டியவனை காடாள ஏகவைத்த நாசகாரச் செயல்

*இராமகாதையில் கூனி மந்தரை புகுந்திராவிட்டால் இராமாயணமே இல்லை. இராமர் தனக்குரிய பதவியை ஏற்காமல் கானகம் புகுந்ததைத் தொடர்ந்தே இக்காப்பியத்தின் உயிர்த்துடிப்பு எழுகிறது. கூனியின் செயல் காரணமாக அவள் தூற்றப் பட்டாலும் இராமாவதாரத்தின் குறிக்கோள் ஈடேற அவளே காரணகர்த்தாவாகிறாள்.*

தசரதன் கைகேயியிடம் வரும்போது எவ்வாறு அவள் நடந்து கொள்ள வேண்டும் என்பதை மந்தரை பாடமாகப் புகட்டினாள். கணவனிடம் ஊடல் செய்தே அறியாத கைகேயியை கடும் கோபக்காரியாகவும் பிடிவாதக்காரியாகவும் மந்தரை மாற்றி விட்டாள்.

மன்னர் பிரவேசிக்கும் வழி எங்கணும் கைகேகியியின் அணிகலன்களையும் பட்டாடைகளையும் பரப்பினார்கள். இதற்கு முன்னர் அந்தப்புரத்திலிருந்த ஏனைய சேடிப் பெண்களை அவ்விடம் விட்டகலுமாறு கைகேயி அனுப்பிவிட்டாள்.



அரண்மனையின் ஓரங்கமாக அந்தப்புரம் விளங்கும். அந்தப்புரத்தில்தான் அரசிகள் வசிப்பார்கள். பல வசதிகளும் அங்கிருக்கும். சேடிப் பெண்களும் நிறைந்திருப்பர். தசரதருக்கோ மூன்று மனைவியர். (தசரதருக்கு பல்லாயிரக்கணக்கில் மனைவியர் இருந்ததாகவும் கதைகள் சில கூறுகின்றன. அந்தக்கணக்கை நாம் மறந்து ஒதுக்கி விடுவதே நல்லது.) மூன்று மனைவியருக்கும் தனித்தனி மாளிகைகள் இருந்தன. இம் மாளிகை அல்லது அந்தப்புரத்துக்கு மன்னர் வருவதாகவிருந்தால் முன்னதாகவே தவகல் சொல்லி அனுப்பப்படும். அதேபோல் மன்னர் இருப்பிடத்துக்கு மகாராணி எவரேனும்-ஏதாவது அலுவல் காரணமாகச் செல்வதானாலும் முன்கூட்டியே தகவல் அனுப்பி வைக்கப்படுவதுண்டு.

கைகேயியின் அந்தப்புரத்தைப் பொறுத்தவரை இத்தகைய சம்பிரதாயத்தை சக்கரவர்த்தி தசரதர் கைக்கொள்வதில்லை. அயோத்திமாநகரில் அவர் இல்லாத நாளைத் தவிர ஏனைய நாட்களில் எப்படியும் கைகேயியிடம் போய்வருவதை தசரத மன்னர் ஒரு நிரந்தர வழக்காக வைத்திருந்தார்.

### சோர்வகற்றும் சாதனங்கள்

பொழுது புலர்ந்ததும் இராமருக்குப் பட்டாபிஷேகம் சூட்டுவதற்கான சகல பொறுப்புக்களையும் உரியவர்களிடம் ஒப்படைத்துவிட்டு அதிக களைப்படைந்தவராக மன்னர் காணப்பட்டார்.

உடல் வருத்தி வேலை செய்பவர்களை விட, அத்தகைய வேலைகளுக்கான திட்டங்களை-மூளையின் உதவியுடன் வகுத்து-உரிய பணிகளுக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுத்து-செயற்படுத்த உத்தரவளிக்கும் ஒருவருக்குத்தான் களைப்பும் சோர்வும் அதிகமாகும். இத்தகையோர் தமது உடற்சோர்வையும் களைப்பையும் போக்க "மானா" வரிசையில் இரண்டினை நாடுவது வழக்கம். மது-மாது-இவை இரண்டின் மூலமும் தமது சோர்வினை அகற்ற முனைபவர்கள் அன்று மிருந்தனர்; இன்றுமுள்ளனர்.

தசரதச் சக்கரவர்த்தியின் களைப்படைந்த மூளைக்கு புத்துயிரூட்டும் வல்லமை ஆக கைகேயியிடமே இருந்தது. அவளுடைய அழகின் சுவையும் மதுவூறும் இளமையும் அவருக்கு அப்போது தேவைப்பட்டது. ஆகவே தன்னையுமறியாமல் அவர் கைகேயியின் அந்தப்புரம் நோக்கி நடக்கலானார். அவருடன் அவருடைய மெய்க்காவலுக்கு மட்டுமல்ல-அவருடைய அந்தரங்க உணர்வுகளுக்கும் காவலனாகிய உபேந்திரர் கூடவே சென்றார். உபேந்திரருடைய இடது தோளை மன்னரின் வலது கை பற்றியிருந்தது. மிக மெதுவாக மன்னர் உபேந்திரரிடம் உரையாடினார்:

"உபேந்திரா! என்மகன் இராமன், எமது சூரியகுலத்தில் உதித்த இணையில்லாத பேராற்றல்மிக்கவன். அழகன் மட்டுமல்ல, அறிவிலும் சிறந்தவன்; வீரன் மட்டுமல்ல, விவேகியும் கூட; புத்திசாலி மட்டுமல்ல, புனிதமானவன். அயோத்தி மாநகர மக்கள் செய்த அருந்தவப் பேறால் அவதரித்த அமரன் என் இராமன். இராமனுக்கு நாளை இளவரசுப்பட்டம் சூட்டிவிட்டால்... எனது பெரும் கடமை ஒன்று முடிந்துவிடும். அதற்கு மேல் நான் உயிர் துறந்தாலும்...."

இவ்வாறு வார்த்தைகளைக் கூறி முடிக்கு முன்னரே தன்வலது கரத்தினால் மன்னரின் வாயினை உபேந்திரர் இறுகப் பொத்திக் கொண்டார்.

"மகாராஜா! இத்தகைய வார்த்தைகள் தங்கள் வாயிலிருந்து உதிர்வது பொருந்தாது. இராமச்சந்திரரின் ஆட்சி முறைகளைத் தாங்கள் கண்ணாரக் காண வேண்டும். அவருக்குப் பிறக்கும் உங்கள் பேரனும் அரியணை ஏறும் காட்சியினையும் தாங்கள் கண்ணாரக் கண்டு களிக்க வேண்டும்!" இவ்வாறு நா தழுதழுக்க உபேந்திரர் கூறினார். இதனைக் கேட்ட மன்னர் சற்று ஏளனமாகச் சிரித்து விட்டு, "உபேந்திரரே! மனிதனுக்கு ஆசை அதிகம். அளவுக்கு மீறி ஆசை கொள்வதனால் தான் மனிதனிடத்தில் அற்பத்தனம் குடிகொண்டுவிடுகிறது. எனது முதாதையர் மூலம் எனக்குக் கிடைத்த இந்த இராச்சியத்தை இதுவரை எக்குறையும் இன்றி பரிபாலித்து வந்துள்ளேன். இதற்குமேல் இப்பொறுப்பினைத் தாங்குவதற்கு என்னால் முடியாது. எமது சூரியவம்சத்திலுதித்த எந்த அரசனுக்கும் இல்லாத அபார ஆற்றல் படைத்தவனான என் மகன் இராமனை அரியணையில் அமர்த்தினால் மூவுலகமும் மெச்சும் வண்ணம் அவன் ஆட்சி புரிவான் என்பதில் சந்தேகமே இல்லை." இவ்வாறு தசரதர் கூற இடைமறித்த உபேந்திரர், "மன்னர் மன்னவரே! இக்கூற்று எப்போதோ நிருபணமாகி விட்டதே! தாங்களும் இராமச்சந்திரரை அரியணை ஏற்றுவதற்கான ஆரம்ப ஏற்பாடுகளனைத்தையும் முடித்து விட்டீர்கள். இதற்குள் தாங்கள் ஏன் கலக்கமடைகிறீர்கள்? தங்கள் உடல் தகிக்கிறது; தடுமாற்றமும் காண்கிறது. மகிழ்ச்சியில் திளைக்க வேண்டிய தாங்கள் மிகவும் விசனப்படக் காரணம் என்ன?"

"உபேந்திரா! கடந்த சில தினங்களாக என் மனம் ஏதோ ஒரு வகைக் குழப்பத்திலாழ்ந்து கிடக்கிறது. சில துர்ச்சகுனங்கள் ஏற்படுகின்றன. நான் காணும் கனவுகளும் என்னை மிரட்டுகின்றன. என்னில் எனக்கே நம்பிக்கை குறைந்து வருகிறது. அதனால் தான் இராமருக்கான பட்டாபிஷேகத்தினை இந்த வசந்த ருது முடியுமுன் நடத்தலாம் என்று நேற்று வரை எண்ணிய நான், இன்று அந்த எண்ணத்தை மாற்றி நாளை சூரியோதயத்திலேயே நடத்தி விடலாமென அவசரப்பட்டேன். அழைப்போலை அனுப்ப வேண்டியவர்களையும் கருத்தில் கொள்ளாது விட்டுவிட்டேன். இதனால் பழி ஏற்படவும் இடமுண்டு." என்றார் சக்கரவர்த்தி.

"அரண்மனையில் மகாராணி கோசலை தேவியாரிடம் மட்டும்தான் பட்டம் சூட்டும் நிகழ்ச்சி பற்றி என் மூலம் செய்தி அனுப்பினீர்கள். நான் தகவல் சொல்லச் சென்ற போது மகாராணி சுமித்திராதேவியாரும் அரச குமாரி சீதாதேவியும் கூட அங்கேயே இருந்தார்கள். மகாராணி கைகேயி தேவியாருக்கு தகவல் சொல்லி அனுப்பினீர்களா மகா ராஜா?" இவ்வாறு உபேந்திரர் கேட்டார். மன்னர் புன்முறுவல் பூத்தவராக "உபேந்திரா! கைகேயியிடம் நேரடியாக இந்த மகிழ்ச்சிகரமான செய்தியைக் கூறத்தான் நானே இதோ போகிறேன்!"

இதனைக் கூறும் போது கைகேயியின் அந்தப்புர முன்வாயிலை இருவரும் அடைந்து விட்டனர். அடுத்த நாள் உதயத்துக்கு நான்கு நாளிகைகளுக்கு முன்னதாகவே அரசருக்குரிய அலங்கார இரதத்துடன் அதே வாயிலண்டை தான் வந்து நிற்பதாகக் கூறி, வணக்கம் செலுத்திவிட்டு உபேந்திரர் தனதில்லம் நோக்கித்திரும்பினார்.

### அலங்கோலமான அந்தப்புரம்

வழக்கமாக பகல் போல் இரவிலும் ஒளி வெள்ளம் பாய்ச்சிக் கிடக்கும் கைகேயியின் அந்தப்புரம் இருள் மண்டிக்கிடந்தது. மாளிகைக்கு ஏறிச் செல்லும் படிக்கட்டுகளிலெல்லாம் குப்பை கூளங்கள் குவிந்து கிடந்தன. ஆங்காங்கே நின்று ஏவலுக்காகக் காத்து நிற்கும் சேடிப் பெண்களைத் தேடியும் காணமுடியாத நிலையிருந்தது.

எந்த நாளுமே இல்லாத இத்தகைய புதுக்கோலம் கண்ட மன்னர் ஏதோ நடக்கக் கூடாததெதுவோ நடந்து விட்டிருக்கக் கூடுமோ என்று கலங்கலானார். தான் வரும் நிலை உணர்ந்து-மோப்பம் பிடித்தே ஓடோடிவரும் தன் அன்புக்கினியவளைக் காணாது திகைப்படைந்தார்.

தன் மூத்தமகன் இராமன் மீது ஏனைய இரு தாய்மாரைவிட அதிக பாசத்தைப் பொழிபவள் கைகேயி என்பதை தசரதர் அறிவார். அத்தகைய அன்பு பாராட்டும் தனது மகனுக்கு பட்டாபிஷேகம் நடைபெறவிருக்கும் சம்பவம் நாடு நகர்பூராவும் தெரிந்து விட்டது. அத்தகைய மகிழ்ச்சியான செய்தியினை தனக்கு மட்டும் ஏன் தெரிவிக்க மறந்து விட்டார் மன்னர் என்று கைகேயி மன்னர் மீது கோபங்கொண்டிருக்கக் கூடும் என்றுதான் தசரதர் முடிவெடுத்தார்.

### இராஜகுமாரன்



அந்தப்புரத்தின் ஒவ்வொரு அறையிலும் தேடினார். எல்லாமே அலங்கோலமாகக்கிடந்தன. அரசியின் அணி மணிகள் சிதறிக்கிடந்த கோலத்தைக் கண்டார். அவற்றை அடையாளமாகக் கொண்டு அவற்றின் வழியே சென்றார். ஊடலறை என்ற இடத்துக்கே அவை அரசரை அழைத்துச் சென்றன. மிக மங்கிய ஒளியில் தன் ஆசைக்குரியவள் வெறும் தரையிலே வீழ்ந்து கிடப்பதைக் கண்டார். அந்தக் கோலத்தைக் கண்டதும் அந்த உருவம் தனது நாயகியின் உருவமாக இருக்காதெனவே அவர் தீர்மானித்தார். இருப்பினும் உற்று நோக்கியபோது அது கைகேயிதான் என்பதனை நிச்சயித்துக்கொண்டார்.

ஓடிச் சென்று அவளை வாஞ்சையோடு வாரி எடுத்தார். வெடுக்கென விடுவித்துக் கொண்டு புரண்டு தரையில் விழுந்து உருண்டு சென்ற கைகேயியின் அத்தோற்றம் கண்ட அரசர் கலங்கிப்போனார். "கண்ணே கைகேயி! கண்மணி இராமனின் பட்டாபிஷேக விழா பற்றி வேறு எவரிடமும் உனக்கு நான் தகவல் அனுப்புவது சரியல்ல என்பதனால் நானாகவே செய்தி சொல்ல இதோ ஓடி வந்திருக்கிறேன்! இதற்காக என்னை நீ கோபிக்கலாமா?" இவ்வாறு பலப்பல கதைகளை மன்னர் எடுத்துரைத்தும் அவள் சிறிதளவும் விட்டுக் கொடுக்கவில்லை.

### மறந்துவிட்ட வாக்குறுதி

"மன்னவரே! இந்த அபலைப் பெண்ணுக்கு மகா துரோகமிழைத்து விட்டீர்கள்! தாங்கள் என்னை மணம் முடிக்க வரும் போது என் தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்துவிட்டீர்களா?" கண்ணீருடன் விம்மலையும் கலந்து ஒவ்வொரு பாணமாக மன்னர் மீது ஏவத்தொடங்கினாள் கைகேயி.

சக்கரவர்த்திக்கு மின்னலை பாய்ந்தது போலிருந்தது அந்தக் கேள்வி. அதிர்ச்சிக்குள்ளானாலும் கைகேயியின் அக்கோலத்துக்கான காரணம் பளிச்சென்று தோன்றியது.

"என் மகன் பரதனை அவசர அவசரமாக கேகயம் அனுப்பி விட்டு திடுதிப்பென இராமனுக்கு பட்டம் சூட்டத்திட்டமிட்டு விட்டீர்கள். இது உங்களைப்போன்ற ஒரு மாமன்னருக்கு அழகாகுமா? கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாத ஒருவர் இந்த அயோத்தி மாநகரை எவ்வாறு ஆட்சி புரிந்திருக்க முடியும்?"

இதுகாலவரை அன்பொழுக-ஆசை வார்த்தைகளை மட்டுமே உதிர்த்த தன் ஆசைக்குரிய அரசி, இன்று அகோர ரூபமாக ஆவேச வார்த்தைகளைக்கொட்டுவதை உணர்ந்த மன்னரின் உள்ளம் விம்மியது. வாயடைத்து விட்டது. இதயத்துடிப்பின் வேகம் அதிகரிக்க கண்கள் இருளடைந்து கால்களும் தடுமாறின. இருப்பினும் ஓரளவு சமாளித்துக் கொண்டு மெதுவாக சிலவார்த்தைகளை மட்டும் அவர் கூறலானர்!

"கைகேயி! இராமன் எனது மூத்த மகனல்லவா? வம்ச வழக்கப்படி அவன் தானே அயோத்தியின் அரியணையிலேற வேண்டும்! அவனை விட்டு விட்டு அடுத்த மகனுக்குப் பட்டம் சூட்ட முடியாதே!" என்று ஒவ்வொரு சொல்லாகக் கூறிமுடித்தார்.

"அந்த வம்ச வழக்கைப்பற்றியெல்லாம் எனக்கு அக்கறையில்லை மன்னவரே! என் தந்தைக்கு நீங்கள் கொடுத்த வாக்குக்கு ஏற்ப என் மகனுக்கே பட்டம் சூட்ட வேண்டும். ஆகவே, இராமனுக்கு நாளை பட்டம் சூட்டுவதை உடன் நிறுத்திவிடக் கட்டளை பிறப்பித்துவிட்டு பரதனை அழைத்துவர ஏற்பாடு செய்யுங்கள்!"

இவ்வார்த்தைகளை கைகேயி கூறும் போது தடுமாறிய தசரதர் மெல்ல தரையில் சாய்ந்தார். அவருடைய வாய் எதையோ முணுமுணுத்தது. ஆனால் அவற்றைக் காது கொடுத்துக் கேட்க கைகேயி தயாராயில்லை. அவள் தனது குரலை மென்மேலும் உயர்த்திக் கொண்டே போனாள்.

### பெண்ணுருக்கொண்ட பிசாசு!

"அத்துடன் மட்டுமல்ல; எனது மகன் பரதன் அரியணை ஏறும் போது கோசலையின் மகன் இராமன் அயோத்தியில் இருக்கலாகாது. தனக்கென்றிருந்த பதவியை தன் தம்பி என்று வந்தவன் தட்டிக் கொண்டு போய் விட்டானே என்ற ஏக்கத்தில் ஏதாவது சூழ்ச்சி வலை பின்னப் பார்ப்பான். தனக்குச் சாதகமானவர்களைத் திரட்டிக் கொண்டு என்மகனைக் கொலை செய்யவும் கூடும்."

இவ்வாறு கைகேயி கூறியதும் – தளர்ந்து – சோர்ந்து கிடந்த தசரதரின் உடல் துடித்தெழுந்தது. "கொடியவளே! என் மகன் இராமனையா கொலைகாரன் என்று கூறத் துணிந்தாய்? நீ பெண்ணல்ல; பெண்ணுருவில் வந்த பிசாசு! இத்தனை காலமும் நீ போட்டதெல்லாம் வெறும் நாடகம்...!" என்று மீண்டும் சாய்ந்தார்.

கைகேயி விடவில்லை. அவள் சற்றுத் தளர்ந்தாலும் திரைமறைவிலிருந்து சைகை காட்டிக் கொண்டிருந்த கூனியான மந்தரை விட்டுக் கொடுக்கப் போவதாயில்லை. தசரதர் கைகேயிக்கு முன்பு தருவதாக வாக்களித்திருந்த இரு வரங்களைப் பற்றியும் சைகை மூலமே நினைவூட்டினாள். அதனைப் புரிந்து கொண்டவள் போல் கைகேயி, "மன்னவரே! அன்றொருகால் சம்பரனோடு தாங்கள் யுத்தம் புரிந்து உடம்பு முழுவதும் கணைகள் பட்டுக் காயமடைந்து மயக்கநிலையில் உயிருக்காக மன்றாடிக் கொண்டிருந்தீர்களே! அப்போது தங்கள் உயிரைக் காப்பாற்றியமைக்காக எனக்கு இரு வரங்களைத் தருவதற்கு முன் வந்தீர்களல்லவா? அந்த வரங்கள் இரண்டையும் இன்றே... இப்போதே.. எனக்குத் தந்தாகவேண்டும்!"

தசரதர் மெதுவாகத் திரும்பி கைகேயி நின்றிருந்த இடத்தை நோக்கினார். 'என்ன வரம் கோருகிறாயடி?' என்று கேட்பது போல் அவர் முகத்தில் கேள்விக்குறி காணப் பட்டது. அவருடைய வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தைகள் எதுவுமே கைகேயிக்குக் கேட்கவில்லை. இருப்பினும் மன்னவனின் முகக் குறிப்பை அவதானித்து அவளே பதில் கூறலானாள்.

"என் தந்தைக்களித்த வாக்குறுதியையே துச்சமாக மதித்து-மறக்க முனைந்த உங்களுக்கு எனக்குக் கொடுத்த வரம் பற்றி எங்கே நினைவிருக்கப் போகிறது? நான் மீண்டும் கோருகிறேன்- அந்த வரங்களை இன்றே-இக்கணமே எனக்குத் தந்தாக வேண்டும்! முதலாவது வரத்தால் பரதனுக்குப் பட்டம் சூட்டுவதற்கான ஆயத்தங்களை உடனே தொடங்க வேண்டும்! அடுத்த வரத்தால், இராமன் பதினான்காண்டுகள் வனவாசம் ஏகவேண்டும்! நீங்கள் எனக்கு அன்று கொடுத்த வாக்கு சாதாரணமானதல்ல; உயிர் துறக்கும் தறுவாயிலிருந்து தப்பிப் பிழைத்தெழுந்த ஒரு தேசத்தின் சக்கரவர்த்தி தனது மனைவிக்கு-அட்டதிக்குப் பாலகரும் தேவர்களும் பூதகணங்களும் கோள்களும் சாட்சியாக வைத்து அளிக்கப்பட்ட வரம். இவ்வரங்களைத் தராமல் இருக்க தசரதச்சக்கரவர்த்தியால் முடியவே முடியாது. சூரிய குலத்தில் பிறந்த வீரசத்திரியரான உங்களால் இந்த வாக்குறுதியை மீறவே முடியாது" இவ்வாறு ஆவேசம் வந்தவள் போல் பொழிந்தாள் கைகேயி.

"பாதகி! உன்னை என் மனையாள் என்று இதுவரை ஏற்றி வைத்திருந்தேனே! அன்று எனக்களித்த உயிரை – இன்று இராமனை என்னிடமிருந்து பிரிப்பதுடன் – இந்த உடலிலிருந்து நீக்கி விட்டாயே! போடி போ! நீ எனக்கு மனைவி என்ற பந்தமும் பரதன் எனக்கு மகன் என்ற பாசமும் இன்றோடு அழிந்தது. என் இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கும் உன் மகன் பரதனுக்கு எந்த விதமான யோக்யதையும் கிடையாதடி.... கிடையாது! இராமா... இராம... இராமா...!"

இவ்வாறு தனது முழு பலத்தையும் பிரயோகித்து பிரலாபித்த வண்ணம் தசரதச் சக்கரவர்த்தி மயக்கமடைந்தார்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி இல—15
**பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்**

**சரியான விடை** கைகேயி

1. ஏ.சீ.எம். முஸம்மில். இல. 37, மெயின் வீதி, குளியாப்பிட்டிய.
2. கே. தியாகராஜா சரோஜினி. கிமேவல தோட்டம், கமெலை.
3. டி.பி. இரத்தினவேல். இல. 65, பள்ளேவளை, கம்பளை.
4. எம். மதி. 172/8, என்.சீ. வீதி, திருகோணமலை.
5. எல். விஜிதா. 9/22, ஏ.ஏ. தர்மசேன மாவத்த, மகியாவ-கண்டி.

### இராமாயணப் போட்டி 17

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:-** தசரதர் கைகேயிக்கு கொடுத்த வரம் எத்தனை?

பெப்ரவரி 03ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி இல:17.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல - 1772
கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JUWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வன்ன நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# பண மழை




அம்மன் ஜுவல்
AMMAN JUWEL



புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


ஐக்கிய அரபுக்குடியரசின் பிரதான வருமானம் எண்ணெய் மூலம்தான் கிடைக்கிறது. எண்ணெய் வியாபாரிகள் அனைவரும் தாம் ஏற்றுமதி செய்யும் ஒவ்வொரு பெரலுக்கும் அதிபருக்கு வரி கொடுக்கவேண்டும். அந்தப் பணம் முழுவதும் அதிபருக்குத்தான். தேசிய நிதியில் அது சேராது. அதிபரின் பெயர் ஷெய்க் சையத் இயன் சுல்தான். வருடம் தோறும் அதிபருக்கு வரியாகப் போய்ச் சேரும் பணம் எவ்வளவு தெரியுமா? 9 பில்லியன் டொலர். அதாவது நமது நாட்டு மதிப்புப்படி கிட்டத்தட்ட 49 ஆயிரத்து 500 கோடி ரூபாய். (மயக்கம் போட்டு விழுந்தவர்கள் எழுந்திருக்கவும்) உலகில் அதிக வரி குவிக்கும் அதிபராக கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார் ஐக்கிய அரபுக் குடியரசின் அதிபர். இந்த பணத்தையெல்லாம் என்ன செய்வாரோ மனிதர்?!) படத்தில் உள்ளது ஒருநாள் வரவாக எண்ணப்படும் வரிப்பணம் மட்டும். யப்பா!

# கலாட்டாச் சுறா

மனிதர்களைக் கண்டால் போதும், வெண் சுறாவுக்கு கெட்ட கோபம் வந்துவிடும். கண்ணில் பட்டால் அவ்வளவுதான். எதிர்த்துப் போராடுவது கஷ்டம். வெண்சுறாவின் எடை 5 ஆயிரம் இறாத்தல். நீளம் 20 அடி 4 அங்குலம். எந்தப் பலசாலியாலும் மல்லுக் கட்ட முடியாது.

வெண்சுறாவின் எடையும், பலமும் காரணமாக கின்னஸ் புத்தகத்திலும் இடம்பெற்றிருக்கிறது.







விளையாட்டைத் தவிர, விளம்பரங்கள் மூலம் அதிக பணம் சம்பாதிக்கும் கிரிக்கெட் வீரர்களில் டெண்டுல்கர் முன்னணியில் இருக்கிறார். விசா என்று சொல்லப்படும் நிதி நிறுவனம் சர்வதேச அளவில் காசு அட்டையை (CASH CARD) வெளியிடவுள்ளது. உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை வைத்து தனது வாடிக்கையாளர்களை வளைக்கப்போகிறது. அதற்காக காசு அட்டையில் டெண்டுல்கரின் முகத்தை மட்டும் பதிக்க விரும்பியது. சம்மதித்த டெண்டுல்கர் வாங்கியது பலகோடி. ஆனாலும் நஷ்டமில்லை. டெண்டுல்கரின் முக ராசியால் 'காட்' நன்றாகப் போகிறதாம்.

# முகத்துக்கு மரியாதை






# சீறும் சின்னக்கார்

எரிபொருள் விலையேற்றத்தால் துளியளவும் பாதிக்கப்படாத கார் இது. காரணம், மின்கலத்தால் மட்டுமே இயங்கக் கூடியது. ஒரு தடவையில் 547 கிலோமீட்டர் தூரம்வரை சீறிச்செல்லும். சுவிற்சர்லாந்தில் உள்ள ஹோர்லாச்சர் கம்பனியின் தயாரிப்பு. 1992 மார்ச் 4ம் திகதி வெள்ளோட்டம் விடப்பட்டது. எண்ணெய்வள நாடுகளை அச்சுறுத்தும் வகையில் மின்கலத்தில் இயங்கும் கார்களை உற்பத்தி செய்வது அதிகரித்து வருகிறது. மின்கலத்தால் ஓடும் காரால் நமக்கு ஒரு நன்மை இருக்கிறது. சுற்றாடல் மாசுபடாது! படத்தில் உள்ள காரின் தனித்துவம் என்னவென்றால்: ஒரு மின்கலத்தில் 547 கிலோமீட்டர் தூரம் வரை ஓடக்கூடிய முதல் கார் இதுதான். கின்னஸ் சாதனை.

# என்ன இது?

படத்தில் இருப்பது குட்டி யானைக்குட்டி மாதிரி இருக்கிறதல்லவா. சொன்னால் நம்பமாட்டீர்கள். 34 வயது பெண் ஒருவரின் வலது சூலகத்தில் உருவான தசைக்கட்டிதான் இது. ஆச்சரியமாக இருக்கிறதல்லவா. அதனால்தான் உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் இடம்பெற்றிருக்கிறது. அமெரிக்க கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள ஸ்ரான்ட்ஃபோர்ட் பல்கலைக்கழக மருத்துவ மனையில் பேராசிரியர் கதரின் சத்திர சிகிச்சை நடத்தினார். சுமார் ஆறுமணிநேர அயராத முயற்சியால் ஒரு மீட்டர் விட்டம் கொண்ட இந்த தசைக்கட்டி அகற்றப் பட்டது. 1991 அக்டோபரில் சத்திரசிகிச்சை நடைபெற்றது. எக்ஸ்ரே மூலம் தசைக் கட்டியை பார்த்த டாக்டர்கள் பயந்துவிட்டனர். பேராசிரியர் கதரின் மட்டும் நம்பிக்கையோடு முயன்று நோயாளியைக் காப்பாற்றினார். மருத்துவ சாதனை!



# வாழ்க-வளமுடன்



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

### பாதிமா ஷப்னா

கம்மல்பிட்டிய பஸ்யாலையைச் சேர்ந்த கஹைல் ஹிஸ்மியா தம்பதிகளின் செல்வப்புதல்வி பாதிமா ஷப்னா (Shabna) 96.01.18 அன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

பாத்திமா ஷபானாவை உம்மா, வாப்பா, வாப்பும்மா, அப்பா, பெரியப்பாமார்களான பாஹிர், அமானுல்லா, ஹிதாயத் (சவூதி), குடும்பத்தினர்கள், மாமிமார்களான நிலூபா, ஜீனத், சுமையா, குடும்பத்தினர்கள், உவைஸ் சாச்சா, சச்சி, பலப்பிட்டியைச் சேர்ந்த உம்மும்மா, அப்பா, சனூனா பாட்டி, ஆன்டிமார்களான பர்லானா, றம்ஸியா, மில்ஹானா, அர்ஹாம் அங்கிள், அராபத் அங்கிள், லைலா பாட்டிக் குடும்பத்தினர், பாத்துமா பாட்டி குடும்பத்தினர், ஸருக் அப்பா, நவலி அப்பா, வத்தல்பொலையைச் சேர்ந்த மிஸ்ரியா வாப்பும்மா, தருவைஸ் அப்பா, ஜனா வாப்பும்மா குடும்பத்தினர்கள், நவ்பல் அப்பா, நர்தினா ஆன்டி, ரிபாமா ஆன்டி, அங்கிள் மார்களான ஸஹதுல்லா, ஜெஸ்மின், ஹில்மி, அன்வர், ரியாஸ், ஆஸிம், றிபாத் ஆகியோரும் பாதிமா ஷப்னாவை பல்கலையும் கற்று பணிவன்புடன் இன்ப முற்று வாழ இனிதே வாழ்த்துகிறார்கள்.

அங்கிள் அர்ஹாம்.

வாரமலர் தினமுரசு



படிப்பகம்